இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகமும் சட்ட அமுலாக்கத்தின் போதாமையும் 05

தூக்கிலிடப்பட வேண்டிய பிளேயர் 09

-மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன்-

07 அரசியல் கட்சிகள் அறிவுபூர்வமான பங்களிப்புக்களை நாட்டிற்கு வழங்கவில்லை

மீள்பார்வை

මීළ්පාර්වෙ

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 347 • 15 ஜுலை 2016 வெள்ளிக்கிழமை • ஷவ்வால் 1437 • விலை 40.00

இலவச ஈத்தம்பழத்துக்கு 2 கோடி ரூபா வரி

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்திடமிருந்து அறவீடு

புனித நோன்பு காலங்களில் இலங்கை முஸ்லிம்கள் நோன்பு துறப்பதற்கென சவூதி அரேபியா உட்பட மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலவசமாக வழங்கப்பட்ட பேரீத்தம் பழங்களுக்கு அரசாங்கம் 22.82 மில்லியன் ரூபாவை இறக்குமதி வரியாக

அறவிட்டுள்ளது. முஸ்லிம்களுடைய சமய, கலாசார விவகாரங்களுக்கென அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே இந்த வரி அறவிடப்பட்டுள்ளது.

சவூதி அரேபியா உட்பட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அன்பளிப்புச் செய்யப்படும் பேரீச்சம் பழங்களுக்கு முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களமே இறக்குமதி வரியை செலுத்தி வருவதாகவும், இந்த வரியை முற்றாக நீக்க நடவடிக்கை எடுக்க (பக்.14)

அவதானம்!

ஷீஆ பிரிவினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஈரான் நாட்டின் ஆன்மீகத் தலைவர் ஹஸன் அயதுல்லாஹ் கொமைனி உள்ளிட்ட தூதுக் குழு கடந்த 12.07.2016 அன்று இலங்கை வந்தது. இலங்கையில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் அவர்களுக்கு விளக்கமளித்தார்.

ஜனாதிபதியும் பிரதமரும் தைரியமான தீர்மானங்களை எடுக்க வேண்டும்

பௌத்த மதத்தின் பெயரால் ஏனைய சமூகங்கள் அச்சுறுத்தப்பட்டு வரும் சூழலில், ''பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டியது அனைத்து அரசாங்கங்களினதும் பொறுப்பாகும்'' என பிரதமர் ரணில் விக்ரமசிங்க மொரட்டுவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்துள்ளார். (பக்.14)

தேசிய தகவல் நிலையத்தின் தலைவராக இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

ஜனாதிபதி செய்திப் பிரிவையும் பிரதமர் செய்திப் பிரிவையும் இணைத்ததாக ஒருங்கிணைந்து பணியாற்றும் வகையில் தேசிய தகவல் நிலையமொன்றை (National Information Centre) உருவாக்குவதற்கான அமைச்சரவை பத்திரமொன்று எதிர்வரும் வாரத்தில் முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (பக்.14)

முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் -சம்பந்தன்

தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மை பாதுகாக்கப்படுவதை சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்துவதாக இருந்தால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும். இதனை முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். முஸ்லிம் தலைவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஒரு தமிழர்தான் முதலமைச்சராக இருக்க வேண்டும் என்பதற்காக நாம் இதனைக் கூறவில்லை. (பக்.14)

நிலத்தொடர்பற்ற தனிமாகாணம் வேண்டும்

- ஹஸன் அலி

சம்பந்தனின் கருத்துத் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹஸன் அலி, வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டால் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் முஸ்லிம்களுக்கென தனி மாகாணம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும், இந்த மாகாணத்துக்கு முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இன்னும் பல ராஜபக்சாக்கள் கைதுசெய்யப்படுவர்

எதிர்வரும் காலங்களில் இன்னும் பல ராஜபக்ஷாக்கள் கைது செய்யப்படவுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கோத்தா, பசில் மட்டுமல்ல இன்னும் பலர் கைதுசெய்யும் பட்டியலில் இருப்பதாகவும் நிதி அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் வாழும் பிரஜை என்ற ரீதியில் அடுத்த கைது யாரென தான் அறிந்து வைத்துள்ளதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சர் ரவி கருணாநாயக்க இன்னும் (பக்.14)

இலங்கைக்கு ஊடாக ஐஎஸ் இல் இணைவு?

பங்களாதேஷில் அண்மையில் நடைபெற்ற ஐஎஸ் தாக்குதல்களைத் தொடர்ந்து ஆசியப் பிராந்தியத்தில் ஐஎஸ் பிராந்தி மீண்டும் துளிர்விட ஆரம்பித்துள்ளது. இலங்கையரான அபூசுரைக் ஸைலானி சிரியாவில் ஐஎஸ் தீவிரவாதிகளுடன் இணைந்து மரணித்ததாக வந்த தகவல்களைத் தொடர்ந்து இலங்கையில் ஐஎஸ் தொடர்பான பல தகவல்கள் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் சுதந்திரம் மிக்க நாடுகள்

இஸ்பஹான் சாப்தீன்

உலகில் சுமார் 120 நாடுகள் தகவல் அறியும் உரிமை குறித்த சுதந்திரத்தை தம் யாப்பின் சட்டதிட்டங்களின் வழியாகவும் சட்ட ஆவண வெளியீடுகள் மூலமாகவும் வழங்கியுள்ளன.

அவ்வாறே, தகவல் அறியும் உரிமை, தகவல் சுதந்திரம் எனும் குறித்த பெயர்களிலேயே வழங்கப்படும் 102 அரசுகளின் சட்டதிட்டங்கள் எழுத்துருவில் இருப்பதாகக் கனடாவில் உள்ள சட்டம் மற்றும் ஜனநாயகத்துக்கான மத்தியநிலையம் (Centre for Law and Democracy) குறிப்பிடுகிறது. அத்தோடு, அந்த நிலையம் இந்த நாடுகளின் தகவல் அறியும் உரிமை சம்பந்தமான சட்ட திட்டங்களை ஆராய்ந்து அதில் நிலவும் சிறப்பம்சங்களை அளவீடு செய்து, அவற்றை தரவரிசைப்படுத் தியுள்ளது. அச்சட்ட திட்டங்களில் நிலவும் சிறப்புப் பண்புக்கூறுகளை 150 புள்ளிகள் என்ற அடிப்படையில் புள்ளிகளை வழங்கி மதிப்பீடு செய்துள்ளது.

புள்ளிகள் வழங்கும் போது அந்நாடுகளில் நிலவும் தகவல் அறியும் உரிமை சட்டமூலங்கள் அல்லது தகவல் சுதந்திரம் குறித்த சட்ட மூலங்களின் உள்ளடக்கம் மற்றும் மானியங்கள் எந்தளவு தூரம் அந்நாட்டு மக்களுக்கு முக்கியம் என ஆராய்ந்துள்ளது. அதில், தகவலுக்காக மக்கள் நுழைவுரிமை (Right to Access) வழங்கப்பட்டுள்ள விதம், அச்சட்ட மூலத்தின் மூலபிப்பிராயங்கள் (Scope), தகவல் விண்ணப்ப ஒழுங்குமுறைகள் (Requesting procedures), மக்கள் அபிலாசைகள் மற்றும் மறுப்புகள் (Expectations and Refusals), மேன்முறையீடு (Appeals), தகவல் வழங்காதவிடத்து கொடுக்கப்படும் தண்டனைகள், இரகசிய தகவல்களை பாதுகாக்கும் முறைகள் (Sanctions and Protections) மற்றும் தகவல் பெறுவதற்காக மக்களைத் தூண்டும் மற் றும் உற்சாகமூட்டும் முறைகள் (Promotional Measures) போன்றன ஆராயப்பட்டுள்ளது. அவ்வப் பகுதிகளுக்கு புள்ளிகள் கொடுக்கப்பட்டு இறுதியில் அவற்றைக் கூட்டி மொத்தப் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் படி தகவல் அறியும் மற்றும் தகவல் உரிமை குறித்த சட்டமூலங்கள் அமுலாகும் நாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறு புள்ளிகள் வழங்கி தரப்படுத்தப்பட்ட வரிசைப்படி சிறந்த மற்றும் உயர் பெறுமானமுள்ள பண்புக்கூறுகளை உள்ளடக்கிய தகவல் சட்டமூலமாக 135 புள்ளிகளைப் பெற்று முதல் தரத்தைப் பிடித்திருப்பது சேர்பியா (Serbia) அரசாகும். 2005 இல் தகவல் சுதந்திரம் குறித்த சட்டமூலத்தை நாட்டுக்கு அறிமுகம் செய்த இந்தியா 128 புள்ளிகள் பெற்று 3 ஆவது தரத்தை பெற்றிருப்பதோடு 2014 இல் தகவல் சுதந்திர உரிமை சட்டமூலத்தை அறிமுகம் செய்த மாலைத்தீவு அப்பட்டியலில் 10 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

இதன் பிரகாரம் நீதிக்கும் ஜனநாயகத்திற்குமான மத்திய நிலையமும் தகவல் பிரவாகம் குறித்த ஐரோப்பிய சங்கமும் மிகச் சிறந்த தகவல் அறியும் உரிமை சம்பந்தமான சட்டமூலங்கள் உள்ள 10 அரசுகளை பட்டியலிட்டுள்ளன. அவை வருமாறு:

தகவல் சட்டமூலம் பயன்பாட்டில் உள்ள 102 நாடுகளில் மிகவும் பலவீனமான தகவல் சட்டமூலம் உள்ள நாடுகளுக்கு அதி குறைந்த புள்ளிகளே வழங்கப்பட்டுள்ளன. அதி குறைந்த புள்ளிகள் பெற்ற அரசுகளின் வரிசையில் இத்தாலி, ஈரான், பெல்ஜியம், ஜெர்மன் ஆகிய நாடுகளும் உள்ளடக்கம். இவ்வாறு தரப் பட்டியலில் குறைந்த புள்ளிகளைப் பெற்று கடைசியில் உள்ள 10 நாடுகள் வருமாறு.

BOTTOM 10	
Austria	32
Liechtenstein	39
Tajikistan	49
Iran	50
Jordan	53
Germany	54
Italy	57
Taiwan	58
Dominican Republic	59
Belgium	59

TOP 10	
Serbia	135
Slovenia	129
India	128
Croatia	126
Liberia	124
El Salvador	122
Sierra Leone	122
South Sudan	120
Mexico	117
Maldives	116

உலகில் பழைமைவாய்ந்த தகவல் அறியும் உரிமை சம்பந்தமான சட்டமூலம் உள்ள நாடு சுவீடன் ஆகும். அச்சட்டமூலம் சுவீடன் அரசு அங்கீகரித்து அமுலாக்கியிருப்பது 1766 ஆம் ஆண்டிலிருந்தாகும். சுவீடன் மக்கள் 250 வருடங்களுக்கு முன்பிருந்தே இச் சட்டமூலத்தின் கீழ் தகவல் அறியும் உரிமையினால் பயன் அனுபவிக்கிறார்கள். உலகின் பழமையான தகவல் சட்டமூலத்தைக் கொண்ட சுவீடன் பெற்றுள்ள புள்ளிகள் 92 ஆகும். இது தரப்படுத்தலில் 40 ஆவது இடத்தில் உள்ளது. அத்துடன், உலகின் இரண்டாவது தகவல் அறியும் உரிமை குறித்த சட்டமூலத்தை சட்டமாக்குவது 1951 இல் பின்லாந்து அரசாகும். மேற்போந்த தரப்படுத்தலின் பிரகாரம் பின்லாந்து 22 ஆவது இடத்தில் உள்ளது. பெற்றுள்ள புள்ளி அளவு 105 ஆகும்.

அமெரிக்கா, 1966இல் தகவல் சுதந்திர சட்டமூலத்தை தம் நாட்டினர்க்கு அறிமுகம் செய்த மூன்றாவது நாடாகும். இருப்பினும் தரப்பட்டியலில் 89 புள்ளிகளுடன் 44 ஆவது இடத்திலேயே காணப்படுகிறது.

உலக ஜனநாயகத்தின் தொட்டில் என்று கூறப்படும் ஐக்கிய இராச்சியம் தம் நாட்டு மக்களுக்காக தகவல் அறியும் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்தது 2000ஆம் ஆண்டிலாகும். ஐக்கிய இராச்சியம் தரப்படுத்தலின் பிரகாரம் 100 புள்ளிகளைப் பெற்று 30 ஆவது இடத்தில் உள்ளது.

அத்துடன் உலகில் பலம்பொருந்திய மற்றும் செல்வந்த ஜனநாயக அரசுகளாக கருதப்படும் அவுஸ்திரேலியா, கனடா, நோர்வே, சுவிச்சர்லாந்து, தென்கொரியா, தாய்லாந்து, யப்பான், பிரான்ஸ், டென்மார்க் போன்ற நாடுகள் மேற்குறிப்பிட்ட தரப்பட்டியலில் இருப்பது 50 ஆவது தரத்திற்கும் குறைவான இடங்களிலாகும்.

ரஷ்யா 98 புள்ளிகளைப் பெற்று 31 ஆவது இடத்திலும் நியூசிலாந்து 94 புள்ளிகளுடன் தரப்படுத்தலில் 35 ஆவது இடத்திலும் எத்தியோப்பியா தகவல் அறியும் உரிமைச் சட்டமூலத்தின் பயன்தருகைப்படி 112 புள்ளிகள் பெற்று 14 ஆவது இடத்தில் உள்ளது.

உலக பிரசித்தி வாய்ந்த குடியரசு நாடான சீனா 2007 இல் தகவல் உரிமையை மக்களுக்கு வழங்குகிறது. சீனா தரப்படுத்தல் படி 75 ஆவது இடத்தில் உள்ளது. பெற்றுள்ள புள்ளிகள் 70 ஆகும். சார்க் பிராந்தியத்தில் இந்தியாவும் மாலைத்தீவும் அதிக புள்ளிகளைப் பெற்று தரப்படுத்தல் பட்டியலில் முதல் 10 நாடுகள் வரிசையில் இடம்பிடித்துள்ளன. பங்களாதேஷ் 107 புள்ளிகளுடன் 20 ஆவது இடத்திலும் 104 புள்ளிகளுடன் 23 ஆவது இடத்தில் நேபாளும், ஆப்கானிஸ்தான் 77 புள்ளிகள் பெற்று 63 ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 66 புள்ளிகளுடன் 83 ஆவது இடத்திலும் உள்ளன.

அவதானமாக இருங்கள்

பொது பல சேனாவின் மிக அண்மைக்கால நடவடிக்கைகளை நோக்கும் போது முஸ்லிம்களை சீண்டிவிட்டு வம்புக்கு இழுக்கும் ஒரு பாரிய முயற்சியில் அவர்கள் தீவீரம் காட்டி வருவதை நன்கு உணர முடிகின்றது. ஒருவேளை மியன்மாரில் ஞானசூனியம் கற்று வந்துள்ள புதிய பாடத்தின் பிரதிபலிப்பாகவோ அல்லது அங்கு அவர் அசின் விராத்துவுடன் செய்துள்ள இரகசிய உடன்படிக்கையின் ஒரு அம்சமாகவோ கூட இருக்கலாம்.

இந்த சூழ்ச்சியை புரிந்து கொள்ள முடியாத நமது சகோதரர்கள் பலர் அவர்களின் கருத்துக்களுக்கு தேவையற்ற விதத்தில் தங்களது FB பக்கங்களிலும் தங்களால் நடத்தப்படும் சமூக வலைதளங்களிலும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். இதை உடனடியாக நிறுத்திக் கொள்வதே நல்லது. அவர்களின் கருத்துக்களுக்கு நாம் ஏன் எமது வலை தளங்களில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்? அவர்கள் பற்றி எம்மவர்கள் கூறும் கருத்துக்கள் ஏனைய ஊடகங்களில் எந்தளவு அரங்கேறுகின்றன என்பதை சற்று யோசித்துப் பார்த்தால் இது புரியும். ஒரு சில அரசியல் வாதிகளின் அர்த்தமற்ற உளறல்கள் மூலம் இனங்களுக்கிடையே கசப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் தான் பெரும்பான்மை ஊடகங்கள் ஈடுபட்டுள்ளன.

அங்கும் கூட யார் எதற்கு எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்பது தெரியாமல் கண்டபடி வாயை கொடுத்து மாட்டிக் கொள்பவர்களும் நம்மவர்கள் தான். தமது அசிங்கங்களை மூடி மறைக்க சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்த முந்திரிக் கொட்டைகள் முதிர்ச்சி அற்ற கருத்துக்களை வெளியிட்டதால் இப்போது ஒட்டு மொத்த சமூகமும் ஆபத்தை எதிர் நோக்கி உள்ளது. தெருவில் உள்ள நாய் நம்மை பார்த்துக் குரைத்தால் எவ்வாறு நாம் அதை சட்டை செய்யாமல் புறக்கணித்து செல்வோமோ அதே போல் பொது பல சேனாவின் கருத்துக்களையும் எடுத்துக் கொள்வோம். அப்போது காலப்போக்கில் அவர்களாகவே சளைத்து தணிந்து போக வாய்ப்பு உண்டு. மாறாக அவர்களின் கருத்துக்களுக்கு நாம் முக்கியத்துவம் அளித்து அவற்றை பகிர்ந்து கொள்வது அவர்கள் தமது நோக்கத்தில் வெற்றி பெற நாம் அவர்களுக்கு வழங்கும் வாய்ப்பாக அமைந்து விடும். எனவே சற்று விவேக மாக இன்றைய நிலைமைகளை அணுகி அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதை நிறுத்திக் கொள் வோம்.

-அப்ரிஹாம் சாலி

ஸாகிர் நாயக்கும் சதிகளும்

தூய இஸ்லாத்தை
துணிவோடு சொல்லுகின்ற
நாயக்கை எதிர்ப்பவர்கள்
நான்கு வகை மனிதர்கள்
தீயாக இயங்குகிறார்
திருட்டுத் தனம் புரிகின்றார்
சாயங்கள் வெளுக்கும் நாள்
சதியெல்லாம் வெளியில் வரும்.

மார்க்கம் வளர்கிறது
மனிதரின் பேச்சினாலே
மூர்க்கம் கொண்டெழுந்த
மோடி போன்ற மாற்றார்கள்
தீர்க்க முனைகின்றார்
தீனின் வளர்ச்சியினை
யார்க்கும் முடியுமோ
இறைவழியை அழிப்பதற்கு.

கலிமாவைச் சொன்ன பின்னும்
காரிருளில் இருப்பவர்கள்
மலிவான விலைகளுக்கு
மார்க்கத்தை விற்பவர்கள்
இழிவான செயல்களினை
இம்மனிதர் எதிர்ப்பதினால்
[illegible]
பண்பாடு மறக்கின்றார்
நேர் வழி எதுவென்று
நிச்சயமாய்த் தெரிந்தோரும்
தீராத பகை கொண்டு
தினமும் எதிர்க்கின்றார்
சார்ந்துள்ள இயக்க வெறி
ஸாகீரை எதிர்ப்பதற்கு
காரணமாய் ஆனதென்று
கடைசிவரை சொல்லமாட்டார்.

திறன் காட்டி சமூகத்தில்
தெரியவர வாய்ப்பில்லார்
முரண் பட்டு அதனாலே
முன்னேற முனைகின்றார்
பெரு மதிப்பாய் இருப்பவரை
பிரச்சினையாய் விமர்சித்து
முரண்பாட்டு பிரபலத்துக்கு
முனைகிறார் சில நபர்கள்.

கருத்திலே சர்ச்சை எனில்
கருத்தால் எதிர்த்து நிற்போம்
ஒருத்தருக்கு துயரென்றால்
உள்ள முரண் நாம் மறந்து
பொருத்தமான முடிவெடுப்போம்
பொருதுவோரை சிதறடிப்போம்

- முஹம்மட் நிஸௌஸ்

சுவனத்து வந்தனத்தைக் கவனத்தில் கொள்வாரா?

இஸ்லாத்தில் சிறந்தது எது என்று ஒரு மனிதன் கேட்டபோது, நபியவர்கள் ''உணவளிப்பதும் உனக்குத் தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் ஸலாம் சொல்வதுமாகும்'' என்றார்கள் - (புஹாரி, முஸ்லிம்.)

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் ''உங்களில் ஒருவர் தன் சகோதரனைச் சந்தித்தால் அவருக்கு ஸலாம் சொல்லவும்.- (அபூதாபூத்.)

மேற்படி ரஸூல்லாஹ்வின் ஹதீஸ்களைச் சிந்திக்கும்போது, சந்திக்கும் முஸ்லிமுக்கு ஸலாம் கூறுவதன் பெறுமதியும் மகிமையும் துலாம்பரமாகத் தெரிகிறது. ஆனால், இன்றைய நிலையோ ?

ஐம்பது வருடங்களுக்கு முன்பென்றால் வீட்டிலிருந்து வெளிப்பட்டு கடைகளுக்கோ, வேறு அலுவல்களுக்கோ பள்ளிவாசல்களுக்கோ செல்வதென்றால் அநேக முஸ்லிம்களை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டுகிறது. அவர்களுக்காக வாய் நிறைய ஸலாம் கூறும் பேறு கிடைக்கிறது. கைகளைப் பற்றி முஸாபஹா செய்யக் கூடிய பாக்கியம் கிடைக்கிறது. மனம் உருகக் கட்டியணைத்து அன்பைப் பரிமாறிக் கொள்ளும் மகிழ்வு கிடைக்கிறது. ஆனால்,இன்றோ நிலைமை தலைகீழாகவே மாறிப்போயுள்ளது ஏன்?

முஸ்லிம்கள் குறைந்து விட்டார்களா? அவர்களைக் காண முடியவில்லையா? ஊரே வெறிச்சோடியுள்ளதா என்று நீங்கள் கேட்பது தெரிகிறது அப்படியல்ல, முன்னைய காலங்களை விடவும் பந்நூற்றுக் கணக்கான முஸ்லிம்களை தினமும் சந்திக்கத்தான் கிடைக்கிறது. ஆனால், அவர்களைக் கண்டும் காணாததுபோலத் தான் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. நபிகளாரின் சுன்னத்தான அந்த ஸலாமை பரிமாறிக் கொள்ளும் பாக்கியத்தை இழந்தவர்களாகவே செல்ல வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. இதற்கான காரணம் என்ன?

இன்று எல்லார் கையிலும் செல்போன்கள் ''கைபேசிகள்தான்'' சிறியார் தொடக்கம் பெரியார்வரை கையில் கைபேசிகள், அதைக் காதிலே வைத்துப் பிடித்தவர்களாகவே நடமாடுவது சகஜமாகிவிட்டது. தம்மை மறந்தவர்களாக உரையாடிக் கொண்டல்லவா செல்கிறார்கள்? அவர்களைத் தட்டி நிறுத்தி ஸலாம் சொல்ல முடிமா? அது ஆகுமா? ஸலாம் கூறினால் மறுமொழியாவது கிடைக்குமா? அவர்களின் சுவாரஸ்யமான உரையாடலுக்கு எம் ஸலாம் இடையூறாக இருக்காதா?

எப்படியிருக்கிறது? இந்தக் கைபேசிகள் எல்லாம் வாய்பேசும் அழகிய ஸலாத்துக்கு இடைஞ்சல் என்பதை எத்தனை பேர் உணர்ந்துள்ளனர்? சைக்கிளில் செல்பவர்கள் சும்மாவா? அவர்களும் தம்பாட்டுக்கு காதோடு அதை வைத்துக் கொண்டல்லவா செல்கிறார்கள்? மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள்கூட தம் ஹெல்மட்டுக்குள் நுழைத்துக் கொண்டு சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டல்லவா செல்கிறார்கள்! எதிர்ப்படும் மக்களையோ, வாகனங்களையோ மறந்தவர்களாகத் தம் உரையாடலில் கவனம் செலுத்தியவர்களாகச் செல்வதைப் பார்த்தால் விபத்துக்கள் ஏற்படாதது அதிசயம்தான். அந்தளவுக்கு கைபேசிகள் தம் அன்றாட வாழ்வுக்கு அத்தியவசியப் பொருளாக அமைந்துவிட்டது. இதன் காரணமாக வீதியில் சந்திக்கும் நண்பர்களையோ புதுமுகங்களையோ ஸலாம் கூறி அன்பைப் பரிமாறிக் கொள்ளும் பாக்கியத்தை இழந்து விடுகிறோம். அது எட்டாக் கனியாகிவிட்டது. சுவனத்து வந்தனத்தை இவர்கள் கவனத்தில் எடுப்பது எப்போ என்று நாம் அங்கலாய்க்க வேண்டியுள்ளது. ''கைப்பேசி இல்லாத கை என்ன கையே'' என்று பாடத் தோணுகிறது.

வீட்டிலிருந்து கதைக்க வேண்டிய அனைத்து விஷயங்களையும் ரோட்டுக்கு வந்துதம் பாட்டிலே உரையாடுவதால் இந்த ஸலாம் கூறும் பண்பு அருகிவிட்டது. இதை எத்தனை பேர் உணர்ந்துள்ளனர்.

(கலாபூஷணம் ஏ.எச்.எம்.யூஸுப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைக் கலங்க வைக்கும் சோகத்தின் அடையாளம்

காத்தான்குடி முஸ்லிம் முதியோர் இல்லம்

ஒரு மனிதன் தனது வாழ்நாளில் பல வகையான வாழ்க்கைக் கட்டங்களை கடந்து செல்கிறான். அவற்றுள் மிக சவாலான ஒரு கட்டம்தான் முதுமைப் பருவம். குழந்தைப் பருவம் சிறகடித்துத் திரியும் சுதந்திரமான பருவம். இளமைப் பருவம் வாழ்வின் வசந்த காலம். முதுமைப் பருவம் ஒரு மனிதனின் அந்திமக் காலம். அவன் அன்போடு அரவணைக்கப்பட வேண்டிய காலம். ஆனால் அவன் நடுத் தெருவில் அநாதரவாக கைவிடப்படுகின்றதொரு காலமாக மாறியிருக்கின்றது.

மிப்றாஷ் முஸ்தபா

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் விரும்பியோ விரும்பாமலோ சந்திக்கின்ற பருவம் இந்த முதுமைப் பருவம். அந்தப் பருவத்தை அடைந்த முதியோர்களை அன்போடும் கனிவோடும் அரவணைத்துப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் உள்ளது. ஆனால் துரதிஷ்டவசமாக தம்மைப் பெற்று வளர்த்தெடுத்த பெற்றோரை சுமையாகக் கருதுகின்ற பிள்ளைகளும், தம்மோடு கூடப் பிறந்தவர்களை வேண்டா வெறுப்பாகப் பார்க்கின்ற சகோதரங்களும் வாழ்கின்ற காலத்தில்தான் நாமும் வாழ்கின்றோம்.

அண்மையில் எமது நாட்டில் தனது தந்தையை ஒடுக்கமான கூண்டிற்குள் அடைத்து வைத்து சித்திரவதை செய்த மகளின் சம்பவம் மனிதாபிமானத்தை நேசிக்கும் அத்தனை பேரையும் கவலை கொள்ளச் செய்தது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் முதுமையை அடைந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளாலும் குடும்பத்தினராலும் துன்புறுத்தப்படுகின்ற சம்பவங்கள் எமது நாட்டிலும் ஏன் எமது சமூகத்திலும் கூட தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றது. அதற்கு மிகச் சிறந்த உதாரணம்தான் கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடிப் பிரதேசத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லம்.

காத்தான்குடி முஸ்லிம் முதியோர் இல்லம் என்ற பெயரில் இயங்கி வருகின்ற இந்த நிறுவனம், முதியோர்களை பராமரிக்கின்ற உன்னதமான சமூக சேவையினை செய்து வந்தாலும், தமது உதிரத்தாலும் வியர்வையாலும் வளர்த்தெடுத்து, இந்த உலகை அறிமுகப் படுத்தி, அதில் வாழக் கற்றுத் தந்த பெற்றோரை மனைவியோடும் குழந்தைகளோடும் தான் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காக இந்த முதியோர் இல்லத்தில் விட்டுச் சென்றுள்ளமை எக்காலத்திலும் மன்னிக்க முடியாத துரோகத்தனமே தவிர வேறில்லை.

காத்தான்குடி முஸ்லிம் முதியோர் இல்லம் தமது குடும்பத்தினரால் கைவிடப்பட்ட முதியோர்களை சிறந்த முறையில் பராமரிக்க வேண்டும் என்ற நோக்கில் 1992 ஆம் ஆண்டு தற்காலிக கட்டடமொன்றில் ஆரம்பிக்கப்பட்டது. 2000ம் ஆண்டு அப்போதைய பிரதி யமைச்சராக இருந்த எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வின் வேண்டுகோளின் பேரில் சமூக சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் முன்னாள் காத்தான்குடி பட்டின சபைத் தலைவர் இப்றாஹீம் அவர்களால் அன்பளிப்புச் செய்யப் பட்ட காணியில் இம்முதியோர் இல்லத்திற்கான நிரந்தரக் கட்டடம் சகல வசதிகளோடும் நிறைவு செய்யப்பட்டு இன்று வரைக்கும் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது.

காத்தான்குடியில் அமைந்துள்ள இம்முதியோர் இல்லத்தில் அக்குறணை, காத்தான்குடி, வாழைச்சேனை, பொலன்னறுவை, வவுனியா, கேகாலை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த 20க்கும் மேற் பட்ட முதியோர்கள் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு வருடமும் ஸகாத் என்ற அடிப்படையில் கிடைக்கக்கக் கூடிய பணத்தைக் கொண்டும், தனவந்தர்களின் ஸதகாக்களைக் கொண்டும் இம்முதியோர் இல்லம் நடாத்தப்பட்டு வருகின்றது.

இங்கு அவர்களுக்கான மருத்துவ செலவுகள் கவனிக்கப்பட்டு வருவதோடு பெருநாள் தினங்களில் புதிய ஆடைகளும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு அநாதரவான முதியோர்களை ஒரு இல்லத்தில் வைத்து பராமரித்து வருவதானது சிறந்த செயற்பாடாக இருந்தாலும், எமது சமூகத்தில் இப்படியொரு முதியோர் இல்லம் இருப்பதை வைத்து எந்த விதத்திலும் பெருமைப்பட முடியாது. வேறொரு வகையில் கூறினால் இம்முதியோர் இல்லம் எமது சமூகத்தைப் பொறுத்தவரை அவமானத்தைப் பிரதிபலிக்கும் ஒரு சின்னமாகவே காணப்படுகின்றது.

ஏனெனில் பெற்றோருக்கு உபகாரம் செய்வது இஸ்லாத்தின் பார்வையில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுத் தரும் ஓர் இபாதத். ஒருவருக்கு வயதான தாய், தந்தை இருந்து அவர்களுக்கு பணிவிடை செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமாக இருந்தால் அதனை அவர் தமக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட அருளாகவே நோக்க வேண்டும்.

சம்பாதிக்கின்ற பணத்தை பெற்றோருக்கு வழங்குவதோடு மாத்திரம் அவர்கள் மீதான பிள்ளைகளின் கடமை நீங்கி விடாது. பெற்றோர்கள் எனப்படுவோர் தமது பிள்ளைகளுக்காக பல்வேறு கஷ்டங்களைச் சுமந்தவர்கள். அவர்களுக்காகவே தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர்கள். எனவே அவர்கள் வயோதிபப் பருவத்தை அடைகின்ற போது பிள்ளைகள் அவர்களைச் சுமக்க வேண்டும். வயதான காலத்தில் அவர்களுக்கு பணத்தைக் கொடுப்பதன் மூலம் ஒருபோதும் அவர்களது மனம் நிறைந்து விடாது. மாற்றமாக அவர்களை உளரீதியாக மகிழ்ச்சிப்படுத்த வேண்டும்.

காத்தான்குடி முதியோர் இல்லத்தில் இருக்கின்ற வயோதிபர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. என்றாலும் தங்கள் பிள்ளைகள், குடும்பத்தினர் எங்களை கைவிட்டு விட்டனர்; நாங்கள் அநாதையாகி விட்டோமே என்ற ஏக்கம் மாத்திரமே அவர்களிடத்தில் எஞ்சியிருக்கின்றது.

எனவேதான் வயதான பெற்றோர்களின் உள்ளங்களை குளிர்விப்பதில் பிள்ளைகள் கவனம் செலுத்த வேண்டும். எவ்வளவுதான் வேலைப்பளுக்கள் இருந்தாலும் அவர்களோடு பேசுவதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் தமது வளர்ப்புத் தாயோடு எந்தளவுக்கு அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொண்டார்கள் என்பதை அவர்களின் வாழ்வியலினூடாக அறிந்து கொள்ள முடியும். ஹலீமா நாயகி நபியவர்களை சந்திக்க வந்த சமயத்தில் உடனே எழுந்து தான் போர்த்தியிருந்த போர்வையை தமது வளர்ப்புத் தாய் அமர்வதற்காகத் தரையில் விரித்தமையை நாம் எங்கணம் நோக்குவது. (பக்.14)

DIPLOMA IN
HOTEL MANAGEMENT
Batch - 5
July 21
- Front Office
- Food & Beverages
- International Cookery
- House Keeping
- Pastry & Bakery
- Languages - Fench & English
- IT (information Technology)
உயர்தரமான நட்சத்திர ஹோட்டல்களில் கொடுப்பனவுகளுடன் கூடிய ஆறமாத தொழில் பயிற்சி வழங்கப்படும்
Duration 4 Months

First Time in Sri Lanka
DIPLOMA IN
SALES MANAGEMENT
Contents
* Indoor Sales
* Outdoor Sales
* Introduction to Business Management
* Human Resource Management (HRM)
* Marketing Management
* Business Communication
* Personal Development as a Manager
Duration 4 Months
Route to success
Be a Successful
- Sales Representative
- Supervisor
- Merchandiser
- Manager
- Area Manager
- HR Manager
1st Batch
பாடநெறி ஆரம்பம் 25 - JULY

GET 5 DIPLOMAS IN
REAL ACCESS PROGRAM
HOT LINE : 0777 222 529
Get Diplomas in
- Web Designing
- Computer Studies
- Graphic Designing
- Spoken English
- Hardware Engineering
இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்
3 மாதம்
Weekly 5 Days 8:30 - 4:30
ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்
பாடநெறி ஆரம்பம் JULY - 25
2 சர்வதேச ISO தரச் சான்றிதழ்கள் உட்பட 7 Diploma சான்றிதழ்கள் வழங்கட்டடும்

DIPLOMA IN
ENGLISH + IT
WITH SKILLS TRAINING
Daily 3 Hours Spoken Activities
ENGLISH LANGUAGE
- Grammar & Spoken Activities
- listening & Writing Skills
- Skills Training
- Personnel Grooming
IT
- MS Office Packages
- Hardware Engineering
- Computerized Accounting
Start July 24
Obtain 3 Certificates including an International Certificate
TOEFL / TOIEC APPROVED EXAM CENTRE
2 Months Full Time
Mon - Sat -8:30am to 4:30 pm

DIPLOMA IN
MEP
AUTO CAD
3D SPECIAL
ADVANCE DIPLOMA
AUTO CAD
DIPLOMA
AUTO CAD
G.C.E
O/L , A/L
AUTO CAD
course contents
* Draftman
* Introduction to AUTO CAD
* Scale(Feet & Inches / millimeters)
* Plans
* Column & Foundation Details
* Roof Designing
* Stare Case
* Section Details A & B
* Door and Window Design
* 3D Modeling
3 Months
Part Time / Full Time
Saudi, Dubai, Qatar drawings will be given to the students for practice

DIPLOMA IN
COMPUTERIZED ACCOUNTING
LEARN 09 PACKAGES
- Intro. to Computer Accounting
- Inrto. to ERP
- MS Excel
- MS Access
- Quick Book Premier
- M.Y.O.B. Premier
- Sage - 50 Professional
- Peach Tree by Sage
- Tally. ERP
Duration 1-3 Months
Free Study Pack with software CD
Contents
- General Ledger &amp: journals.
- Cash Book (Petty Cash, Main Cash)
- Customers and M ain Ledger.
- Inventory Tracking Financial Reports (Balance Sheet, P&L etc.
- Layout Designing with Customization.
- Advance Security Features.

இப்பாடநெறிகலை பூர்த்தி செய்பவர்களுக்கு சிறந்த சம்பளத்துடன் 100% தொழில் பெற்றுத்தரப்படும்
ஆண் பெண் /இருபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி Hostel Available

GOLDEN COLLEGE
Golden College
Learning for Success
e-goldencollege.lk@gmail.com
w-www.goldencollege.lk
NO : 548, PERADENIYA ROAD,KANDY. 081 2 205 544 0777 222 529
NO : 126, KANDY ROAD, THIHARIYA. 0533 2 245 51 0777 222 528
TOEIC City & Guilds EDFOCUS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

சப்பே சத்தா பவன்து சுகி தத்தா

உலகிலுள்ள பிரதான மதங்கள் நான்கும் இலங்கையில் காலம் காலமாக எத்தகைய முரண்பாடுகளும் இன்றி செயற்பட்டு வருகின்றன. இலங்கையில் இனமோதல்கள் நடந்தது போல மதச் சண்டைகள் நடைபெற்றது கிடையாது. தேசிய மட்டத்தில் சர்வகட்சி மாநாடுகள் சாத்தியப்பட்டதை விட, தேசிய மட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் சர்வ மத ஒன்றுகூடல்களின் சாத்தியம்தான் அதிகமாகக் காணப்பட்டது. அந்தளவுக்கு மதங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு வளர்ச்சி கண்டிருந்தது.

நான்கு மதங்களுக்கும் தனித்தனியான அமைச்சு உருவாக்கிச் செயற்படுகின்ற மதச் சுதந்திரம் நாட்டிலே நிலவுகிறது. ஒருபோதும் ஒரு மதம் அடுத்த மதத்தை நிந்திக்கவோ இம்சிக்கவோ இற்றைவரை துணியவில்லை. ஒரு மதம் அடுத்த மதத்துக்கு எதிராகச் செயற்பட்ட வரலாறுகள் இங்கே இல்லை. பல்வேறு மதக் கிரியைகளிலும் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் மாறி மாறி கலந்து கொள்கின்ற பண்பாடு இந்த நாட்டிலே உண்டு. தற்போது இந்த மத நல்லிணக்கத்துக்கு களங்கம் விளைவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த அரசில் உருவாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதப் போராட்டங்கள் முஸ்லிம் இனத்தை குறிவைத்து நடத்தப்பட்டன. முஸ்லிம்களின் இனப் பெருக்கம், முஸ்லிம்களின் ஹலால் அடையாளம், முஸ்லிம் பெண்களின் அபாயாக்கள், பள்ளிவாசல்கள் போன்ற முஸ்லிம்களின் சமய, கலாச்சார விடயங்கள் இலக்காக்கப்பட்டன. முஸ்லிம்களின் பொருளாதாரத்தை முடக்குவதற்கான பல்வேறு முயற்சிகள் நடந்தேறின. முஸ்லிம் இனத்தின் மீதான இந்த விரோதப் போக்கினை முஸ்லிம்கள் சாமர்த்தியமாக எதிர்கொண்டதன் விளைவாக, இனவாதிகள் எதிர்பார்த்த இனக்கலவரம் மூளாமல் தவிர்க்கப்பட்டது.

தற்போது இஸ்லாம் மதத்தை குறிவைத்து ஞானசார தேரர் மீண்டும் களம் இறங்கியிருப்பது புரிகிறது. தெற்காசிய நாடுகளில் மதச் சண்டைகளை உருவாக்கி அதில் குளிர்காய்வது ஆதிக்க அரசியல் நடத்துபவர்களின் கைவந்த கலையாகவிருக்கிறது. அந்த அஸ்திரம் தான் தற்போது ஞானசார தேரரின் கைக்குக் கிடைத்திருக்கிறது. உலகெங்கும் வாழும் கோடிக்கணக்கான முஸ்லிம்களின் இறைவனையும் வேதத்தையும் சந்திக்கு இழுப்பதன் மூலம் சர்வதேச முஸ்லிம்களையும் வம்புக்கிழுப்பதற்கு இவர் முயற்சிப்பதாகவே தெரிகிறது. இதன் விளைவுகளுக்கு ஞானசார தேரரே பொறுப்புக் கூற வேண்டும்.

சப்பே சத்தா பவன்து சுகி தத்தா.. எல்லா உயிரினங்களும் இன்புற்றிருப்பதாக! என பௌத்த மதம் போதிக்கிறது. ஒருவர் அடுத்தவர் மீது வைரம் கொள்ளக் கூடாது என்ற பௌத்த போதனையை பௌத்த பிக்குமார் மக்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். பொய் உரைக்கக் கூடாது என பஞ்சசீலம் எடுத்துரைக்கிறது. இவை அனைத்துக்கும் மாற்றமாக ஒரு பௌத்த தேரர் நடந்து கொள்வதாக இருந்தால் அவர் தொடர்பிலான பௌத்த மதத்தின் நிலைப்பாடு என்ன? அடுத்த சமூகத்தினர் சந்தோசமாக இருக்கக் கூடாது என விரோதத்தை மக்கள் மத்தியிலே விதைக்கின்ற, அடுத்தவரது மார்க்க விடயங்களைப் பற்றிப் பொய்யுரைக்கின்ற தமது மதகுரு தொடர்பில் பௌத்தர்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன?

உயிர்களைப் பலிகொள்ளக் கூடிய கலவரமொன்றை உருவாக்குவதற்குத் தூபமிடுகின்ற பௌத்த மதகுரு தொடர்பில் ஜாதிக சங்க சபாவும் திரிபீடகமும் ஏன் இன்னும் மௌனம் சாதிக்கின்றன? தான் ஒரு தூய பௌத்தன் என அடிக்கடி மார்தட்டிக் கொள்ளும் ஜனாதிபதி சிறிசேன, பௌத்தத்துக்கு எதிரான இத்தகைய செயற்பாடுகளை ஏன் அங்கீகரித்துச் செயற்படுகிறார்? அடுத்த இனத்தின் மீதான அத்துமீறலை இவர்களும் ஆசீர்வதிக்கிறார்கள் என்பது தான் இதன் அர்த்தமா?

எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்கின்ற பௌத்த மதத்தின் போதனையை நிலைநாட்டுவதற்கு பௌத்தர்கள் முன்வர வேண்டும். மனித நாகரிகத்துக்குப் பங்களிக்காத, மனித நாகரிகத்தை சிதைக்கின்ற அதர்மங்களில் இருந்து நாடு மீள வேண்டும். இனவாதத்தையும் குரோதத்தையும் விதைக்கின்ற சக்திகளிடம் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும்.

அடுத்த இனத்தின் மீது அத்துமீறி அதனை அழித்தொழிக்கின்ற தர்மங்கள் நாட்டின் முதன்மை ஸ்தானத்தில் வைத்துப் பின்பற்றுவதற்குப் பொருத்தமானதாக இருக்கப் போவதில்லை.

டொனி பிளாயர், சில்கொட் அறிக்கையும் ஐ.தே.க. தலைமையிலான அரசும்

லத்தீப் பாரூக்

சுமார் 24 தேர்தல்களில் தோல்வியடைந்த பின்பு ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஆண்டு மீண்டும் பதவிக்கு வந்தது. மஹிந்த ராஜபக்ஷ அரசின் கெடுபிடிகளில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் நோக்கில் கிட்டத்தட்ட ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் ஐ.தே.க.வுக்கு வாக்களித்தது.

ஆனால் முஸ்லிம்களின் உணர்வுகளைப் புறக்கணித்து விட்டு ஐ.தே.க தலைமையிலான அரசு இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான காட்டுமிராண்டித் தனமான யுத்தத்தை கட்டவிழ்த்து விட்ட யுத்த வெறியர்களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகளுடன் கைகோர்த்தது. இந்த நாடுகள் இலட்சக்கணக்கான முஸ்லிம்களைக் கொன்று குவித்து பல முஸ்லிம் நாடுகளை நிர்க்கதி நிலைக்கு கொண்டு வந்துள்ளன.

இந்தக் கொள்கையின் ஒரு அங்கமாகத் தான் யுத்தக் குற்றவாளியான முன்னாள் பிரிட்டிஷ் பிரதமரை 2015 இல் இரண்டு வார கால தனிப்பட்ட விடுமுறை விஜயத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சரும் அழைப்பு விடுத்திருந்தார்.

இது இலங்கை மக்களுக்கு அதிர்ச்சியை மட்டும் அல்ல, அவமானத்தையும் ஏற்படுத்தியது. அணிசேரா இயக்கத்தின் பெருமைக்குரிய குரலாகவும் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பாதுகாவல் குரலாக அச்சமின்றி உலகம் முழுவதிலும் மூன்றாம் மண்டல நாடுகளின் அமர்வுகளிலும் இலங்கையின் குரல் ஒரு காலத்தில் ஒலித்தது.

நாட்டின் புத்திஜீவிகளினதும் முஸ்லிம் மக்களினதும் உணர்வுகளைப் புறக்கணித்து யுத்தக் குற்றவாளி டொனி பிளாயரை இலங்கைக்குள் வர அனுமதித்ததன் மூலம் நல்லாட்சி மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை குலையத் தொடங்கியது.

ஆனால் இதுவொன்றும் எதிர்பார்க்கப் படாத விடயமும் அல்ல. காரணம் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அன்றைய அரசுதான் பெரும்பாலும் ஈராக் மீது அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்பை கண்டிக்கத் தவறிய ஒரேயொரு மூன்றாம் உலக அரசாகும். இந்த ஆக்கிரமிப்பைக் கண்டிக்குமாறு அன்றைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரணில் விக்கிரமசிங்கவை கேட்டபோது அரசில் இருந்து வெளியேறி அதைச் செய்யுமாறு அவர் பதில் அளித்தார்.

ஈராக்கில் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் பிரிட்டன் பங்கேற்றமை பற்றி தற்போது வெளியாகியுள்ள சேர். ஜோன் சில்கொட் அறிக்கையில் டொனி பிளாயரின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளது. சில்கொட் ஒரு முன்னாள் பிரிட்டிஷ் அரச சேவை அதிகாரியாவார். முன்னாள் பிரதமர் டொனி பிளாயர் எவ்வாறு பிரிட்டனை ஈராக் யுத்தத்துக்குள் இழுத்தார் என்பது பற்றி ஆராய முன்னாள் பிரதம மந்திரி கோர்டன் பிரவுன் இவரை நியமனம் செய்திருந்தார்.

அமெரிக்க சியோனிஸ யுத்தக் குற்றவாளியான ஜோர்ஜ் புஷ்ஷினால் திட்டம் தீட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஈராக் யுத்தத்தில் பிரிட்டிஷ் யுத்த குற்றவாளியான டொனி பிளாயரும் பங்கேற்றார். மத்திய கிழக்கு பிராந்தியத்தின் வடிவமைப்பை மாற்றி அங்கு அகண்ட இஸ்ரேல் ராஜ்யத்தை உருவாக்கி அவர்களின் மேலாதிக்கம் ஓங்க வழியமைப்பதுதான் இந்த யுத்தத்தின் நோக்கம்.

இந்த அர்த்தமற்ற ஆக்கிரமிப்பை உலக நாடுகள் பல எதிர்த்தன. 1991 இல் ஈராக் விமான சூனிய வலயம் என்ற போர்வையில் ஏற்கனவே மூன்றாகத் துண்டாடப்பட்டிருந்தது. அதன் ஆயுதங்கள் பல ஏற்கனவே அழிக்கப்பட்டிருந்தன. படையினர் பலவீனப்படுத்தப்பட்டிருந்தனர். ஈராக்கின் பொருளாதாரம் சிதைக்கப்பட்டிருந்தது. பொருளாதாரத் தடைகளால் மக்கள் சொல்லொணா துயரங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.

பசுமைக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான கரலின் லூகாஸ், 'டொனி பிளாயர் ஒரு யுத்தக் குற்றவாளி' என தான் நம்புவதாகத் தெரிவித்துள்ளார். ''நாம் அறிந்து வைத்துள்ளதை சில்கொட் அறிக்கையும் உறுதி செய்யுமானால் டொனி பிளாயர் பொய் உரைத்து இந்த நாட்டு மக்களையும் பாராளுமன்றத்தையும் தவறாக வழி நடத்தியுள்ளார் என்பதும் நிரூபணமாகிவிடும்'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிளாயரும் புஷ்ஷும் ஈராக்கிய பொது மக்களுக்கு மரணத்தை விளைவித்தனர். அந்த நாட்டின் தண்ணீர், மின்சாரம், சுகாதாரம், மருத்துவம், கல்வி, போக்குவரத்து, தொலைத் தொடர்பு என அத்தியாவசிய கட்டமைப்புக்கள் அனைத்தையும் இவர்கள் நிர்மூலமாக்கினர். சுமார் 15 லட்சம் மக்கள் கொல்லப்பட்டதாக அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால் உண்மையான எண்ணிக்கை அதை விட அதிகமாகவே இருக்க வேண்டும். நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் மிகவும் காட்டுமிராண்டித் தனமான சித்திரவதைகளுக்கு ஆளானர். மிக மோசமான கற்பழிப்புச் சம்பவங்களும் இடம் பெற்றன.

கற்பழிப்புக்களுக்கு மேலதிகமாக பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு மானபங்கப் படுத்தப்பட்டு படங்கள் எடுக்கப்பட்டு, அவைகள் பிரசுரிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பலர் மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்ற அச்சம் காரணமாக வாய் திறக்காமல் மௌனமாகவே இருந்து விட்டனர். பல விடயங்கள் தொடர்ந்து அதிர்ச்சி அளிக்கும் வகையிலேயே அமைந்திருந்தன.

இந்த சித்திரவதைகள் முஸ்லிம்கள் மீது குறிப்பாக அறபிகள் மீது வேரூன்றிப் போயிருந்த மேற்குலகின் இனக் குரோதத்தை படம்போட்டுக் காட்டின. பெரும்பான்மை சுன்னி முஸ்லிம்களுக்கும் சிறுபான்மை ஷீஆ முஸ்லிம்களுக்கும் இடையில் அவர்கள் குரோதங்களை உருவாக்கினர்.

மனித குலத்துக்கு எதிரான அவர்களின் மற்றொரு நன்கு திட்டமிடப்பட்ட கலாசாரக் குற்றமாக அவர்களின் ஏவுகணைகள், பங்கர் பஸ்டர் குண்டுகள், ஏனைய பாரிய அழிவு தரும் ஆயுதங்கள் என்பன ஈராக்கின் சட்ட ரீதியான கட்டமைப்பை இரவோடு இரவாக மாற்றி நாசமாக்கின. மக்களின் பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள், காணி உறுதிகள், திருமண சான்றிதழ்கள், வர்த்தக உடன்படிக்கைகள், வாகனப் பதிவுகள், கல்விச் சான்றிதழ்கள், பாடசாலைப் பதிவுகள் என எல்லாமே அமெரிக்கப் படைகளால் அழிக்கப்பட்டு துவம்சம் செய்யப்பட்டன.

ஈராக்கில் உள்ள மிகவும் பண்டைய பெறுமதி மிக்க சுமார் 17000 தொல்பொருள்கள் தேசிய நூதனசாலையில் இருந்து இந்தப் படையினரால் சூறையாடப்பட்டன. இந்தளவு நுணுக்கமாக ஈராக்கை அழிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பழம் பெருமை மிக்க ஒரு நாட்டின் எல்லா பண்புகளும் சிதைக்கப்பட்டன. அந்த நாட்டின் புத்திஜீவிகளையும் தொழில்சார் நிபுணர்களையும் அழித்தொழிக்கும் வகையில் சகல திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. பல தசாப்தங்களுக்கு அந்த நாட்டில் புத்திஜீவிகள் தலையெடுப்பதை தடுக்கும் வகையில் மிக நுணுக்கமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இஸ்ரேலின் இரகசிய உளவு பிரிவான மொஸாட்டால் ஈராக்கின் தொழிற்சார் நிபுணர்களும் ஏனைய புத்தி ஜீவிகளையும் அழித்தொழிக்கும் நடவடிக்கை மிக நுட்பமாக மேற்கொள்ளப்பட்டது. தங்களுக்குத் தேவையான சுமார் 400க்கும் மேற்பட்ட புத்திஜீவிகளின் பெயர் மற்றும் விலாசத்துடன் வந்திறங்கிய மொஸாட் அவர்களை குறி வைத்து தேடித் தேடி மிகக் கொடூரமான முறையில் வேட்டையாடியது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தலைமைத்துவ நிறுவனத்தின் கூற்றுப்படி ''ஈராக்கின் உயர் கல்வி நிலையங்களுள் 84% மானவை தீக்கிரையாக்கப்பட்டன, கொள்ளையடிக்கப்பட்டன அல்லது நாசமாக்கப்பட்டன''. ஈராக் நூதனசாலையில் 2003 ஏப்ரலில் இடம்பெற்ற திருட்டு, தொல்பொருள் ஆய்வு நிலையங்களில் இடம் பெற்ற நூற்றுக் கணக்கான திருட்டுக்கள், நூலகங்கள் பல எரிக்கப்பட்டமை கலாசார வரலாற்று விஞ்ஞான தடங்கள் அழிக்கப்பட்டமை என்பன மிகவும் பயங்கரமான நிகழ்வுகளாகும். இவற்றுள் மிகவும் மோசமான குற்றமாக அமைந்தவை ஈராக்கின் புத்திஜீவிகள் தேடித்தேடி அழிக்கப்பட்டமையாகும்.

ஈராக்கில் ஆங்கிலேய அமெரிக்க படைகளால் மனித குலத்துக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நோக்குகின்ற போது புஷ் அவரின் குற்றவியல் பங்காளி பிளாயர் மற்றும் அவர்களின் படைகள் நாகரிகமான குடும்பங்களில் பிறந்த மனித விழுமியம், மனித உணர்வு கொண்ட கொண்ட மனிதர்கள் தானா என்றே எண்ணத் தோன்றுகின்றது.

சர்வதேச நீதிமன்றத்தின் முன்னாள் பிரதி தலைவரும் இலங்கையின் தலைசிறந்த நீதித் துறை நிபுணருமான சி.ஜி. வீரமன்திரி இது பற்றிக் கூறுகையில், ''எந்தவிதமான ஒழுக்க விழுமியங்களும் சட்ட நியாயங்களும் இன்றி ஆங்கிலேய அமெரிக்க கூட்டணி தமது படைகளை ஈராக் யுத்தத்துக்குள் இழுத்து வந்தது. பெரும் பாவக் கறைகளை சுமந்தவர்களாக பக்தாத்துக்கு சட்ட விரோதமான பாதையிலேயே அவர்கள் சென்றனர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய யுத்தக் குற்றவாளி பிளாயர் தான் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டு ஜனாதிபதி பிரதமர் ஆகியோரையும் சந்திக்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. அவரது இரு வார கால விஜயத்தின் முடிவில் லக்ஷ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரை வழங்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டு, இந்த நாட்டு மக்களின் உணர்வுகள் மேலும் புண்படுத்தப்பட்டுள்ளன. இந்த நாட்டின் இன முறுகல் நிலைப்பாடுகள் பற்றி பேசுவதற்கு பிளாயர் போன்ற ஒரு யுத்தக் குற்றவாளி இந்த நாட்டுக்கு அவசியமா?

ஐக்கிய தேசியக் கட்சி என்னதான் நல்லாட்சி நடத்துவதாக உரிமை கோரினாலும் அவர்கள் இன்னமும் பழைய நிலையில் தான் உள்ளனர் என்பதற்கு இது மிகத் தெளிவான சான்றாகும். இந்த நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தலைமையிலான மேற்குலக யுத்த வெறியர்களிடம் அரசு அடகு வைத்து விட்டது. அமெரிக்கா பிரிட்டன் இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய யுத்த வெறியர்களுடனான பிரதமரினதும், வெளிவிவகார அமைச்சரினதும் அளப்பரிய காதல் ஏன் என்பது தான் இன்னும் புரியவில்லை. ஒரு யுத்த குற்றவாளி இந்த நாட்டுக்கு அழைக்கப்பட்டதன் காரணம் மர்மமாகவே உள்ளது.

அமெரிக்காவுடனும் ஏனைய யுத்த வெறியர்களுடனும் அரசு கூடிக் குளவிய போதிலும் எதிர்பார்த்த முதலீடுகள் எதுவும் நாட்டுக்கு இன்னமும் கிடைக்கவில்லை. மாறாக வளைகுடா நாடுகளில் பணியாற்றும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களால் வருடாந்தம் அனுப்பப்படும் ஏழு பில்லியன் ரூபாய்களால் தான் இந்த நாட்டின் பொருளாதாரம் வலுவூட்டப்படுகின்றது.

வளைகுடா மட்டும் அல்ல முழு முஸ்லிம் உலகும் அங்குள்ள சர்வாதிகாரிகளை தவிர இஸ்ரேலுடன் ஒத்துழைத்து அமெரிக்க தலைமையில் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக இடம்பெறும் பிரசாரங்களை மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

பாகிஸ்தானின் கராச்சி நகர சனத்தொகையில் முக்கால் பங்கை மட்டுமே கொண்டுள்ள இலங்கை போன்ற ஒரு சிறிய நாடு முழு முஸ்லிம் உலகையும் பகைத்துக் கொள்ள முடியுமா என்பதே இங்கு எழுப்பப்படும் முக்கியமான கேள்வி. முஸ்லிம் உலகம் இன்னமும் இலங்கையை மிகச் சிறந்த நட்பு நாடாகவே பார்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவூப் ஸெய்ன்

எகிறி எழும் இனவாதமும் மண்ணில் புதையும் மைத்திரியின் வாக்குறுதியும்

இந்த நாட்களில் ஊடகங்களின் பேசுபொருள் ஞானசாரதான். முஸ்லிம்களுக்கு எதிரான அவரது பாய்ச்சல் மீண்டும் முஸ்லிம்களைத் தீண்டுவதாகவும் எல்லைகளைத் தாண்டுவதாகவும் கவலை வெளியிடப்படுகின்றது. நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பெயரில் சிறையிலிருந்து வெளியான ஞானசார மீளவும் கர்ச்சிக்கத் தொடங்கியுள்ளார். சிலருக்கு தமது அந்தரங்க உறுப்புக்களைச் சொறிவதில் ஒரு அலாதியான சுகம் உள்ளது போல், முஸ்லிம்களைச் சீண்டுவதில் ஞானசாரவுக்கு உள்ள சுகம் அலாதியானது.

இந்நாட்டின் பெரும்பான்மை மக்களிடையே நிலவும் பின்னடைவுகளுக்கு ஒரு நீண்ட பட்டியலே உள்ளது. அன்றாடம் நடக்கும் சிசுக் கொலைகள், பாலியல் வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம், போதையினால் ஏற்படும் வீதி விபத்துக்கள், ஊழல் மோசடிகள், ஹெரோயினுக்கு இரையாகும் இளைஞர்கள், கிறிஸ்தவ மதமாற்றத்திற்கு உள்ளாக்கப்படும் பௌத்தர்கள், விவாக விடுதலைகள் என எக்கச்சக்கமான பிரச்சினைகள் தனது சமூகத்திற்குள் ஆழ வேரூன்றியுள்ள நிலையில், முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதும் பள்ளி கட்டுவதும்தான் ஞானசாரவுக்கு பிரச்சினையா?

ஞானசார இனவாதப் பூகம் இலங்கை அரசியலுக்கு ஒன்றும் புதிதல்ல. 1915 ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற முதலாவதும் ஆகப் பெரியதுமான இனக்கலவரத்துக்குமான நச்சு விதைகளை சிங்கள இளைஞர்களிடையே ஊன்றி விதைத்த, அநகாரிக தர்மபாலவின் இன்றைய வாரிசாகவே ஞானசாரர் வந்துதித்துள்ளார். அவரது எடக்கு முடக்கான பேச்சும் வெறுப்பை உமிழும் உணர்ச்சி பூர்வமான உரைகளும் 2014 ஆம் ஆண்டில் எத்தகைய விளைவை ஏற்படுத்தியது என்று இலங்கையர்களாகிய நாம் எல்லோரும் அறிவோம்.

அதே போர்ப் பரணியை பாடிக் கொண்டிருக்கும் ஞானசாரவின் வெறுப்புப் பிரச்சாரத்தால் சிங்கள இளைஞர்கள் வெறியூட்டப்படக் கூடிய ஆபத்து நீடிக்கும் நிலையில், அரசும் ஆள்பவர்களும் அமைதி காப்பது ஆபத்தான அறிகுறியாகும்.

போருக்குப் பின்னர் மஹிந்தவின் ஆட்சியை நீடிப்பதற்கு தனிச் சிங்கள வாக்கு வங்கி அவசியமானது. அதைத் தக்க வைக்க இனவாதம் பேசும் ஓர் இயக்கம் அவருக்குத் தேவைப்பட்டது. இன்று முஸ்லிம்களிடமிருந்து தன்னை சில சதிகாரர்கள் பிரித்து விட்டார்கள் என்று நீலிக் கண்ணீர் வடிக்கும் மஹிந்தவின் அரசியல் மூலதனமே பொதுபலசேனா.

இலங்கைச் சூழலில் இப்படியொரு சாதகமான களம் இருப்பதைப் புரிந்துகொண்ட ஏகாதிபத்திய சக்திகள், குறிப்பாக நோர்வேயும் அதன் கூட்டாளிகளும் ஆட்சி மாற்றத்திற்கான இயந்திரமாகவே ஞானசாரவின் இயக்கத்தைக் கையாண்டன. இறுதியில் நிகழ்ந்தது என்ன? நோர்வேயின் கனவு பலித்தது. மஹிந்தவின் ஆட்டம் அடங்கியது.

இன்றைய ஞானசாரரைத் தெளிவாகப் புரிந்து கொள்வதிலும் அவரது கொட்டம் அடங்காமல் நீடிப்பதற்கான காரணத்தை விளங்கிக் கொள்வதிலும், அவர் எங்கிருந்து வந்தார் என்ற கேள்வி அல்லது யாரினால் நிறுத்தப்பட்டுள்ளார் என்ற கேள்வி முக்கியமானது.

இன்று உலகளவில் முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் இலக்கு வைத்து நடாத்தப்படும் இஸ்லாமிய பீதி எனும் பரந்துபட்ட கைத்தொழிலின் இலங்கைச் சந்தைப்படுத்தல் முகவராகவே அவர் நிறுத்தப்பட்டுள்ளார். மியன்மாரில் இந்தப் பணியினை அசின் விராது எனும் தலையை மழித்த தேரர் தனது 969 இயக்கத்தினூடாக மேற்கொண்டு வருகிறார். இந்தியாவில் RSS காரர்கள் இதே தொழிலில் கச்சிதமாக ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கான கூலி நியூயோர்க்கிலிருந்து இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவ் வழியாக கொழும்புக்கு வருகின்றது.

ஒரு சமூகத்தை அல்லது தனிமனிதனை அழிப்பதற்கு பாசிஸம் கையாளும் பல்வேறு தந்திரமான வழிமுறைகள் உள்ளன. பொய்யை மீள மீள உரத்துச் சொல்லல். கட்டுக் கதைகளைப் பரப்பல், உண்மையைப் புரட்டல், வெறுப்பை உமிழ்தல், தாம் வெறுக்கின்றவர்கள் பழிவாங்கப்பட வேண்டியவர்கள் எனும் உணர்வை மக்களை மத்தியில் பரப்புதல், சட்டத்தைக் கையில் எடுத்தல், வன்முறைகளைத் தூண்டுதல், இனக்கலவரங்களை வெடிக்கச் செய்தல் போன்ற மிகக் கொடூரமான பாசிஸத்தின் கூறுகள் பொதுபல சேனயின் கடந்த ஐந்தாண்டு கால நடவடிக்கையில் தெளிவாகத் தென்படுகின்றன.

மஹியங்கனையில் கடந்த மே 21 ஞானசார நடத்திய ஆர்ப்பாட்டமொன்றில் அவர் வெளிப்படுத்தி சொற்கள் பயங்கரமானவை. அருவருக்கத்தக்க அவரது வார்த்தைகள் இலங்கையின் இன அமைதிக்கு வேட்டு வைக்கும் ஆபத்தானவை. ''எமது கோரிக்கைக்கு ஆட்சியாளர்கள் தீர்வொன்றைத் தராவிட்டால் அளுத்கமவின் இரண்டாம் கட்டத்தை நாம் முன்னெடுப்போம் என்பதை அவர்களிடம் போய்ச் சொல்லுங்கள்'' என்றார் ஞானசார.

இந்த வாசகத்தில் பல உண்மைகள் உள்ளடங்குகின்றன. அளுத்கம இனக்கலவரத்திற்கு ஞானசாரவும் அவரது காவி அணியினருமே பொறுப்பாக இருந்தனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறார். அது போன்ற கலவரங்களை தம்மால் எதிர்காலத்திலும் வெடிக்கச் செய்யலாம் என்பதையும் எடுத்துரைக்கிறார். அளுத்கம கலவரத்தின் பின்னர் அதற்கான சூத்திரதாரிகள் யார் என்பதைக் கண்டறிவதற்கு அரசாங்கம் ஒரு ஆணைக்குழுவை நிறுவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்த அதே ஞானசார இப்போது, அந்த ஆணைக்குழு தேவையில்லை என்பதை உணர்த்துகின்றார்.

பொய்யின் மூலம் அல்லது உண்மையைப் புரட்டுவதன் மூலம் தமக்குக் கூலி வழங்கும் எஜமானர்களுக்கு ஞானசார எப்படி விசுவாசமாய் இருக்கிறார் என்பதற்கு அவரது மற்றொரு வாசகம் தெளிந்த ஆதாரம்.

''முதலில் அவர்கள் மடவளையில் எமது ஆசிரியர்கள் மீது கூள் முட்டை வீசினார்கள். பின்னர் தலதா மாளிகையை விட உயரமான பள்ளியொன்றை நிர்மாணிக்க முயற்சித்தார்கள்.'' இந்த வாசகம் பெரும்பான்மை பௌத்தர்களிடையே எத்தகைய மனக் கிலேசத்தையும் முஸ்லிம்கள் மீதான வெறுப்பையும் உருவாக்கும் என்பதைத் தெரிந்துகொண்டே பச்சையாக இனவாதத்தை உமிழ்கிறார் அவர்.

கலாநிதி லக்சிறி பெர்னான்டோ குறிப்பிடுவது போன்று, ஞானசாரரை எந்த வகையிலும் பௌத்தத்தின் சிறந்த மதகுருவாக ஏற்க முடியாதுள்ளது. சட்டத்தை கையில் எடுக்கும் ஒருவர் நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்களை மீறி ஒரு சமூகத்திற்கு எதிராக இன்னொரு சமூகத்தை உணர்ச்சியூட்டுவது பச்சையான இனவாதம் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வளவு நடந்தும் ஞானசார தொடர்ந்தும் எகிறி எழுகிறார். சட்டம் மௌனமாக இருக்கின்றது. மக்கள் நம்பிக்கை வைக்கும் இறுதி இடமான நீதிமன்றங்கள் அமைதி காக்கின்றன. பொலிஸாரைப் பார்த்து அவர் சொல்கிறார்: ''உங்களால் அவர்களை கையாள முடியாவிட்டால் நாங்கள் அவர்களைப் பார்த்துக் கொள்கிறோம். அவர்களைப் பார்த்துக் கொள்வதற்கு எமக்கு சுமார் 50 பேர்தான் தேவை.''

ஆத்திரமூட்டும் இந்தப் பேச்சு இன்னொரு சமூகத்தின் ஆவேசத்தையே தூண்டும். இன்றுள்ள இந்த உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு அப்பால் ஞானசாரவின் விவகாரத்தை மிக நிதானமாகக் கையாள வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது. நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி மற்றும் சகல சமூகங்களுக்கும் குறிப்பாக பாதிக்கக் கூடிய நிலையிலுள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு நீதியைக் கொண்டு வருவேன் என்ற வாக்குறுதியோடு பதவிக்கு வந்த அரசாங்கம் இவ்விடயத்தில் அசட்டையாக இருப்பது மிகவும் ஆபத்தானது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் கால் நூற்றாண்டை ஓலைக் கொட்டில்களில் கடத்திக் கொண்டிருக்கும் இத்தருணங்களில் அவர்களைக் குடியேற்றுவதற்கு இந்த அரசு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு கடந்த பத்தாண்டு காலம் எந்தத் தீர்வுமில்லை. சிறுபான்மை மக்களின் வாக்குகள் மூலம் அதிகாரத்திற்கு வந்த மைத்திரி அரசின் பெரும்பாலான வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

குற்றவாளிகளால் நிரம்பி வழியும் தனது கட்சியைக் காப்பாற்றுவதிலேயே மைத்திரி கண்ணாக இருக்கிறார். இதனால் குடிமக்களின் நலன் காக்கும் தேசபக்தி தோளுக்குப் பின்னால் தூக்கி வீசப்பட்டுள்ளது. நாடா? கட்சியா? என்ற கேள்விக்கு முன்னால் கட்சிதான் என்பதில் அவர் ஒற்றைக் காலில் நிற்கிறார். இந்த அரசாங்கத்தின் ஆற்றாமையினதும் இயலாமையினதும் வெளிப்பாடே ஞானசார தேரரின் எல்லை கடந்த துள்ளலாகும்.

மஹிந்தவின் நிழல் அமைச்சரவை கூட ஆளும் அரசாங்கத்தின் ஆற்றாமையின் வெளிப்பாடே. இலங்கையின் சிவில் சமூகமும் முறிந்து தொங்கும் தேசத்தின் முதுகெலும்புக்கு சிகிச்சையளிக்கும் நிலையில் இல்லை. அது ஓட்டுச் சிப்பிக்குள் ஒடுங்கும் நத்தை போல் உறங்கிக் கிடக்கிறது. அந்தரப்பட்டு, அநாதரவாய் நிற்கும் முஸ்லிம் சமூகத்தின் மீது ஞானசாரர் போன்ற இனவாதிகள் திட்டமிட்டுப் பரப்பும் அவதூறுகள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் முஸ்லிம் சமூகம் அதற்குக் கொடுக்கும் விலை அதிகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. முஸ்லிம் சிவில் நிறுவனங்கள் இவ்விடயத்தில் ஒருங்கிணைந்து செயலாற்றுவது இன்றைய காலத்தின் உடனடித் தேவையாகும்.

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகமும் சட்ட அமுலாக்கத்தின் போதாமையும்

உலகின் 650 கோடி மக்களில் 200 கோடியினர் சிறுவர்கள். உலக சனத்தொகையில் 30 வீதமானவர்கள் 18 வயதுக்குக் குறைவானவர்கள். அவர்களுள் 152 மில்லியன் பேர் குழந்தைத் தொழிலாளிகள். 180 மில்லியன் குழந்தைகள் ஆரம்பக் கல்விக்கே பாடசாலை செல்லாதவர்கள். 30 மில்லியன் பேர் அனாதைகள் என யுனிசெப் அறிக்கை விடுத்துள்ளது.

உடல் ரீதியான பாதுகாப்பு, போஷாக்கான உணவு, தரமான கல்வி, தேவையான சுகாதாரம், உள ஆரோக்கியம், உலகை எதிர்கொள்ளத் தேவையான மனோ திடம் இவற்றை குழந்தைகளுக்கு உறுதி செய்வதே அரசுகளினதும் அரசாங்கங்களினதும் தலையாயக் கடமையாகும். இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்கள்.

எதிர்காலத் தலைமுறையினரை உடல், உள ரீதியில் ஆரோக்கியமாக வளர்த்தெடுப்பது இன்று உலகின் முன்னாலுள்ள பாரிய சவாலாகும். இந்த சவால் இலங்கைக்கு முன்னாலும் எழுந்து நிற்கின்றது.

எவ்வளவுதான் சட்டத்தின் ஆட்சி என்று பேசினாலும், கடும் தண்டனை என்று கத்தினாலும் சிறுவர்கள் மீது துஷ்பிரயோகங்களைக் கட்டவிழ்க்கும் குற்றவாளிகள் பெருகிக் கொண்டே செல்கின்றனர். இளம் மொட்டுக்கள் கருகுவதற்குக் காரணமானவர்களுக்கு கருணை காட்டப்படுகின்றது. சமீபத்திய இலங்கைச் சூழல் இது குறித்த பல்வேறு வாத விவாதங்களைக் கிளர்ந்துள்ளது.

இலங்கையில் அன்றாடம் வெளிவருகின்ற இலத்திரனியல், அச்சு ஊடகங்களின் செய்திகளில் ஒரு போதும் விடுபடாத தலைப்புக்கள் சில உள்ளன. அவற்றுள் இலங்கையின் நாலா புறங்களிலும் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய செய்தியும் அடங்கும். நாளாந்தம் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள், வன்முறைகள் குறித்தான செய்திகள் எம்மை திடுக்கிடச் செய்கின்றன. உலகம் முழுவதும் போரினாலும் உள்நாட்டு வன்முறைகளினாலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றவர்கள் சிறுவர்களே.

கம்பஹா மாவட்டத்தில் கொட்டகதெனியாவ குக்கிராமம் ஒன்றில் 5 வயதான செயா சதெளமி மீதான பாலியல் வல்லுறவும் கொலையும் சில வாரங்கள் ஊடகங்களில் ஓங்கி ஒலித்தன. சில ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலை நகரில் 6 வயதான வர்ஷா எனும் சிறுமி கடத்தி கொலை செய்யப்பட்டிருந்தார். குருணாகலையில் 4 வயதான தாமராகேஷனி எனும் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டு கொல்லப்பட்டார். களனியில் 2½ வயதான பெண் குழந்தையொன்று குரூரமாகக் கொல்லப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உயர் தரத்தில் கற்று வந்த 18 வயதான வித்யா எனப்படும் மாணவி வல்லுறவுக்கு உட்பட்டு கொல்லப்பட்டிருந்தார். குருணாகல் மாவத்தகமையில் 13 வயதான சிறுமி ஒருவர் மீது பாலியல் பலாத்காரம் புரியப்பட்டு கொல்லப்பட்டார். மன்னாரில் இவ் வருடம் ஏப்ரல் மாதம் உதயபுரத்தில் 10 வயதான சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டு கொல்லப்பட்டார்.

கடந்த 5 ஆண்டுகளில் வருடாந்தம் இடம்பெற்று வரும் சம்பவங்களைத் தொகுத்துப் பார்த்தால் அவற்றின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதோடு, அதன் குரூரமான வடிவங்களும் நம்மை மலைக்கச் செய்து விடும்.

வாயில்லாதோர், கதியில்லாதோர், ஆதரவில்லாதோர் கிடைத்து விட்டால் குற்றவாளிகளின் ஆழ்மனதில் பதுங்கிக் கிடக்கும் அத்தனை குரூரங்களும் வெளிப்பட்டு விடுகின்றன. அதிலும் அவர்கள் பெண் குழந்தைகளாகவும், சமுதாயத்தில் அடிமட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பின் வக்கிரங்கள் எடுக்கும் வடிவங்களுக்கு எல்லையே இல்லை. எண்ணிக்கையுமில்லை.

பலியானவர்களுக்கு அன்றி, குற்றவாளிகளுக்குச் சாதகமான வர்க்க, சட்ட, அரச அதிகார சூழல், குற்றவாளிகள் தப்பி விடுவதற்கு ஆயிரம் கதவுகளைத் திறந்து வைத்திருக்கின்றன. இலங்கையில் அன்றாடம் சிறுவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பது தெரியாத தகவல் அல்ல. அது நமது உள்ளங்களில் உறைந்து போன உண்மைதான். ஆயினும், ஒரே நோக்கில் கண் முன்னால் அணிவகுக்கும் வல்லுறவுச் சம்பவங்கள், கொடூரங்கள் குறித்துப் பேசும்போது நாம் வெட்கித்துத் தலைகுனிய வேண்டியுள்ளது.

இலங்கைச் சூழலில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு பல்வேறு முகங்கள் உள்ளன. சித்திரவதை, பாலியல் வன்முறை, கடத்தல், அவர்கள் பெயரால் கப்பம் கோரல், அச்சுறுத்தல், கொல்லுதல், விபச்சாரத்தில் ஈடுபடுத்தல் என சிறுவர் மீதான கொடூரங்கள் பலவகை. சிறுவர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் நாடுகளுள் பிலிப்பைன்ஸும் தாய்லாந்தும் இலங்கையும் முன்னணியில் இருப்பதாக ஒரு அறிக்கை கூறுகின்றது. சிறுவர்களைத் தொழிலாளிகளாகப் பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலிலும் இலங்கை இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாத் துறை பயணிகளால் வீதியோரச் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் நாடாகவும் இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலோ தேசிய ரீதியிலோ சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் ஏட்டுச் சுரக்காயாகவே நீடிக்கின்றன.

(பக்.14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்

எமது வாழ்வொழுங்கு, நடத்தைகள் எல்லாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். வரலாற்றில் எமது முன்னோர்கள் அறிவு ரீதியான பல வழிகாட்டல்களை தந்துள்ளார்கள். கலை, இலக்கியம், விஞ்ஞானம் என பல்வேறு துறைகளில் அவர்கள் வழங்கிய பங்களிப்புக்கள் ஏராளம். வரலாற்றில் உதயமான இஸ்லாமியத் தலைவர்கள் புதியதொரு அறிவை எமது சமுகத்திற்கு வழங்கினார்கள்.

8ம் நூற்றாண்டு தொடக்கம் 13ம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதி இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமானதொரு காலகட்டமாகும். கொரடோவாவை முன்னிலைப்படுத்திய அல் அந்தலூஸின் தலைமைத்துவம் நிலவிய ஒளிமயமான காலப்பகுதி அது. ஐரோப்பா அன்று இருளில் தத்தளித்த பொழுது அதன் விடிவுக்கும் மறுமலர்ச்சிக்கும் அப்போதைய இஸ்லாமிய ஆட்சியாளர்களே வழிகாட்டினார்கள் என்பதனை வரலாற்றாசிரியர்களும் புத்திஜீவிகளும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அன்று முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் யூதர்களும் மிகவும் ஐக்கியத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்ந்தார்கள் என்பதை வரலாறு எமக்குச் சொல்கிறது. பல்லின சமயத்தை சேர்ந்த மக்கள் அறிவைத் தேடி அங்கு வந்தார்கள். அறிவின் மத்திய நிலையமாக முஸ்லிம்களின் தலைநகர் காணப்பட்டது. எனவே வரலாறு விட்டுச் சென்ற அப்பாரிய பணியை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.

எமது பிள்ளைகளுக்கு நாம் சரியான வழிகாட்டலை கொடுக்க வேண்டும். அவர்களுடைய திறமைகளை நாம் இனங்காண வேண்டும். இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் எனக் கூறி அவர்களை வற்புறுத்தக் கூடாது. அவர்களுடைய தேவை விருப்பங்களை அடையாளங் கண்டு அவர்களுக்கு தைரியமூட்ட வேண்டும், வழி காட்ட வேண்டும், அவர்களுக்கு உதவ வேண்டும்.

இன்று மாணவர்கள் பல முறைகளில் கற்கிறார்கள். சில மாணவர்கள் செவிமடுத்தலுக்கூடாக கற்கிறார்கள். இன்னும் சிலர் பயிற்சிகளை கூடுதலாக பெறுவதற்கூடாக கற்கிறார்கள். எனவே நாம் அம்மாணவர்களது திறமைக்குரிய வழிகளை இனங்கண்டு பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

நாம் மிகவும் சவாலானதொரு காலப்பகுதியிலேயே வாழ்கிறோம். பயங்கரவாதம், அடிப்படைவாதம், தீவிரவாதம் போன்ற எல்லா விடயங்கள் தொடர்பிலும் எமது சமூகத்தின் மீதே விரல் நீட்டுகிறார்கள். நாம் எமது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாததன் காரணத்தினாலேயே அத்தகைய குற்றச்சாட்டுக்கள் எம்மீது சுமத்தப்படுகின்றன. ஐஸிஸ் பற்றி பேசுகிறார்கள் அல்லது ஹமாஸ் பற்றிப் பேசுகிறார்கள் அல்லது அல்கைதா பற்றி பேசுகிறார்கள் அல்லது தலிபான் பற்றிப் பேசுகிறார்கள் அல்லது எகிப்தின் நிலை பற்றிப் பேசுகிறார்கள். ஏன் இவ்வாறு பேசுகிறார்கள் என்பது பற்றி நாம் சரியான முறையில் தொடர்பாடல் செய்ய வேண்டும். இஸ்லாமிய உலகுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதனைப் போன்று ஊடகங்கள் வாயிலான தாக்குதல் பிரச்சாரங்களும் முடக்கிவிடப்பட்டுள்ளன. எமது பொறுப்பை நாம் சரியாக நிறைவேற்றாததன் காரணத்தினால்தான் நாம் அவற்றுக்கு அடிமைப்பட்டுள்ளோம்.

ஈரானுக்கு என்ன நடந்தது? அங்குள்ள சொத்துக்களை சூறையாட மேற்கத்தேய நாடுகளுக்குச் சார்பான சர்வாதிகார தலைவர் ஒருவர் இருந்தார். மன்னன் ஷாவுக்கு எதிராகவே அங்கு எதிர்ப்புக்கள் மேலெழுந்தன.

ஈராக் ஆக்கிரமிப்புக்குப் பின்னர் அங்கு தற்பொழுது ஐஸிஸ் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. ஐஸிஸ் இன் செயற்பாடுகளை நாம் அனுமதிப்பதில்லை. அது மிகவும் சொற்பமானவர்களின் நடவடிக்கைகள். உலக சனத்தொகையில் நாம் 1.6 பில்லியனாக உள்ளபோது நான்கையாயிரம் பேரளவினரே அவ்வமைப்பில் உள்ளார்கள்.

இது இஸ்லாமல்ல. ஆனாலும் ஏன் இவ்வாறான நிலை ஏற்பட்டது என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஹமாஸூக்கும் பதாவுக்கும் விரல் நீட்டுகிறார்கள். பலஸ்தீன் 60 வருடங்களாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானில் ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராகவே அல்கைதா அமைப்பு ஏற்படுத்தப்பட்டது? அதன் பின்னர் தலிபான் அமைப்பு உருவாக்கப்பட்டது. அது ஏன்? சோவியத் ஆட்சிக்கு பின்னர் உருவான மோசடி மிக்க ஆட்சிக்கு எதிராக மாணவர்கள், இளைஞர்களது எழுச்சியே அது.

ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும் பாரியளவிலான ஆயுதங்களை இல்லாதொழிக்க வேண்டுமெனவும் கூறி ஈராக்கிற்கு சென்ற மேற்கத்தேய பலம்பொருந்திய நாடுகள் வட கொரியாவுக்கு ஏன் செல்லவில்லை? சொத்து சூறையாடல், பொருளாதாரப் பிரச்சினை, நிதிப் பிரச்சினை, தமக்கு விரும்பிய விதத்தில் உலகை ஆள வேண்டும் என்ற கொள்கை இவையே ஈராக் ஆக்கிரமிப்புக்கு பின்னாலுள்ள உள்நோக்கங்கங்கள்.

இன்று உலகில் நடப்பவற்றை பார்க்கும் பொழுது எமக்கு பாரிய பொறுப்பொன்றுள்ளது. இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் புரிந்துணர்வுள்ளோராக இருக்க வேண்டும். நாம் அறிவைப் பெற வேண்டும்; ஆயுத ரீதியாக அல்லாமல் நாம் அறிவு ரீதியாக நாம் பலம்பெற வேண்டும். இவை பற்றி நாம் சிந்திக்க வேண்டும். எமது பொறுப்புகளை நாம் சரியாக செய்ய வேண்டும்.

வரலாற்றில் எமது மூதாதையர்கள் எமக்கு பல முன்மாதிரிகளை வழங்கியுள்ளார்கள். அப்போது உலகில் ஏனைய மதத்தவர்கள் பிரச்சினைப்பட்டு ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டபோது அம்மக்கள் நிம்மதியை தேடி முஸ்லிம் நகரங்களுக்கு வந்தார்கள். கொரடோவா அதற்கு சிறந்த முன்னுதாரணம்.

எனவே எமது கடமைகளையும் உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளோம். நாம் அறிவைக் கற்க வேண்டும். விழிப்புணர்வாக இருக்க வேண்டும். எமது பிள்ளைகளுக்கு அது தொடர்பில் வழிகாட்ட வேண்டும்.

சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்ற விதி இலங்கை முஸ்லிம் பெண்களுக்கு மாத்திரம் விதிவிலக்கு

ரிஸானி ஹாமீன்

ரமழான் ஒரு முஸ்லிமினது இறை நம்பிக்கையை பலப்படுத்துவதற்கான காலம். அவன் தனது குடும்பம் மற்றும் சமூகத்தின் மீது கொண்டுள்ள இரக்க உணர்வை வெளிப்படுத்துவதற்கான காலம். அது இறைவன் அவனுக்கு சொரிந்த அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதற்கான காலம். என்றாலும் இலங்கையில் இந்த வருடமும் முஸ்லிம் பெண்கள் தொடர்பான சட்ட ரீதியான தீர்மானங்களை நிறைவேற்றுவதில் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யப்படுவதோடு, அவர்களுக்கான நீதி இன்னும் மறுக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது. இன்னும் சொல்லப்போனால், சட்டத்திற்கு முன்னால் முஸ்லிம் பெண்களுக்கான சமத்துவம் இன்னும் வழங்கப்படாமல் வெறும் வேண்டுகோளாகவே காணப்படுகின்றது.

முஸ்லிம் குடும்பவியல் சட்டத்தின் கீழ் முஸ்லிம் பெண்கள் மிக மோசமான வன்முறைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர் என்ற வகையில் ரமழானில் இந்த விவகாரம் தொடர்பில் சமூகத்திற்குள் சில முக்கியமான விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

சட்டத்திற்கு முன் ஏனைய பிரஜைகள் போன்று இலங்கை முஸ்லிம் பெண்களும் சம உரிமை கொண்டவர்கள் என்றோ அல்லது சிறுபான்மையினரின் உரிமைகள் என்ற பெயரில் நிறைவேற்றப்பட்ட, எங்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்குகின்ற சட்டங்களால் ஆளப்படுவதனை விரும்புகின்றோமா என்றோ தற்போதைய சூழலில் நாங்கள் வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பாக இலங்கை இரட்டை சட்ட முறைமையைக் கொண்டிருக்கின்றது. கண்டிய சிங்களவர்கள் 1952 கண்டிய திருமண, விவாகரத்துச் சட்டத்தின் கீழ் அல்லது 1907 பொது விவாகப் பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்துகொள்ள முடியும்.

ஆனால், முஸ்லிம்கள் 1951 முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தின் கீழால் மாத்திரமே திருமணம் செய்து கொள்வதற்கான அங்கீகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். இந்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தனியான காதி நீதிமன்ற முறைமையும் எமது நாட்டில் இதன் மூலம் தோற்றம் பெற்றது.

முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தை செயற்படுத்தல்

முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டம் (1951) நிறைவேற்றப்பட்டதிலிருந்து பெண்ணியல்வாதிகளாலும் பெண் ஆர்வலர்களாலும் இந்தச் சட்டத்தில் காணப்பட்ட பெண்களுக்கு எதிரான பாரபட்சம் தொடர்பான கருத்தாடல்கள் மிகத் தீவிரமாக இடம்பெற்றன. மேலும், காதி நீதிமன்றங்களின் செயற்பாடுகளால் முஸ்லிம் பெண்கள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டதன் விளைவாக காதி நீதிமன்றங்களின் தரம் மற்றும் அவற்றின் நடைமுறை தொடர்பாகவும் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் சட்டத்திற்கு முன் அனைத்து பிரஜைகளும் சமமானவர்கள் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்ட போதிலும், இலங்கைப் பிரஜைகள் என்ற ரீதியில் முஸ்லிம் பெண்களின் அடிப்படை உரிமைகளோடு முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டம் முரண்படுகின்றது.

உதாரணமாக இந்த சட்டத்தினால் பருவ வயதை அடைந்த முஸ்லிம் பெண்கள் ஆண் பாதுகாவலர்களின் அனுமதியின்றி திருமணம் செய்துகொள்ள முடியாது என்பதன் மூலம் வயதுக்கு வந்த முஸ்லிம் பெண்களும் கூட மைனர்களாகவே (இள வயதினர்) நோக்கப்படுகின்றனர்.

அதேபோன்று முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தில் திருமணம் செய்து கொள்வதற்கான மிகக் குறைந்த வயதெல்லை நிர்ணயிக்கப்படாமையால் சிறுமி களை மணமுடித்துக் கொள்வதற்கான இள வயதுத் திருமணங்களையும் இது அனுமதித்திருக்கின்றது. இலங்கையில் ஒரு பெண் திருமணம் செய்துகொள்ள குறைந்தது 18 வயதை அடைந்திருக்க வேண்டும் என்ற சட்டம் முஸ்லிம் சமூகத்திற்கு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அதேபோல 12-16 வயதுகளில் திருமணம் முடித்த முஸ்லிம் பெண்களுக்கு குற்றவியல் சட்டத்தில் விபச்சாரத்திற்கெதிரான சட்டப் பாதுகாப்பு கிடைப்பதில்லை.

மீறப்படும் பெண்கள் உரிமைகள்

திருமண விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அனுமதியிலுள்ள குறைபாடு, விவாகரத்து செய்வதற்கான ஆணுக்கும் பெண்ணுக்குமான வெவ்வேறுபட்ட நிபந்தனைகள், விவாகரத்துக்களுக்கான நஷ்டஈட்டை வழங்குவதில் பாரபட்சம், பலதார மணத்துக்கான போதிய வரையறைகள் காணப்படாமை, போன்ற இன்னும் பல அநீதிகள் முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டம் மூலமாக முஸ்லிம் பெண்களுக்கு இழைக்கப்படுகின்றன.

திருமணம் செய்வதற்கான மிகக்குறைந்த வயதெல்லை நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் சமமாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தற்போது நடைமுறையிலுள்ள முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தில் காணப்படுகின்ற சில குறைபாடுகளை நீக்க வேண்டுமெனவும் இந்த வருட ஆரம்பத்தில் சமூகத்தின் மகளிர் அமைப்புக்கள் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்திருந்தன.

திருமணம் முடித்துக் கொடுப்பதற்கான மிகக் குறைந்த வயதெல்லையினால் ஏற்படுகின்ற குறைபாடுகள் சமூகத்தில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக இந்த வயதெல்லை தொடர்பாக சமூகத்திற்குள் ஒருமித்த கருத்து இல்லாமலிருப்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பாலின சமத்துவம் தொடர்பான தேசிய, சர்வதேச மட்டத்திலான வரையறைகளுக்குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது என்பதனால் மத உரிமை அல்லது சிறுபான்மையினரின் உரிமை என்ற பெயர்களில் இடம்பெற்று வரும் இளவயதுத் திருமணங்களை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவற்றுக்கு மேலாக சிவில் நீதிமன்றங்களில் முஸ்லிம் பெண்கள் நீதிபதிகளாக இருப்பதற்கு சட்ட ரீதியாக எத்தகைய கட்டுப்பாடுகளும் இல்லாத போதிலும், முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தின் கீழ் காதி நீதிபதிகளாகவோ, விவாகப் பதிவாளர்களாகவோ, காதி நீதிபதிகள் குழுவில் உறுப்பினர்களாகவோ இருப்பதற்கு முஸ்லிம் பெண்கள் அனுமதி மறுக்கப்படுகின்றார்கள். இந்த நியமனங்கள் அனைத்தும் அரசாங்கம் சம்பளம் வழங்குகின்ற உத்தியோகங்களாக இருப்பதால் அரசியலமைப்பில் உள்ள இந்த உரிமைகள் முஸ்லிம் பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன.

சுருக்கமாக கூறப்போனால் முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டம் இலங்கைப் பிரஜைகள் அனுபவிக்கும் உரிமைகளை முஸ்லிம் பெண்களுக்குக் கிடைக்க விடாமல் தடுக்கின்றது. அரசியலமைப்பின் 16 ஆவது கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக இது அடிப்படை உரிமைகளோடு முரண்பட்டாலும் முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டம் இந்த உரிமைகள் முஸ்லிம் பெண்களுக்கு கிடைக்காதவாறு பாதுகாக்கின்றது. அரசியலமைப்பில் காணப்படுகின்ற இந்த ஏற்பாட்டின்படி முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தோடு தொடர்புபட்ட விடயங்களை சமூகத்திற்குள்ளால் தீர்த்துக் கொள்ள வேண்டுமென திட்டவட்டமாகக் குறிப்பிடுவதனால் அரசாங்கம் தனது பொறுப்பிலிருந்து நீங்கிக் கொள்கின்றது.

முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டமும் சீர்திருத்தத்திற்கான அவசியமும்

ஏனைய சமூகங்களின் தலைமைகள் கொடுத்து வருகின்ற அழுத்தங்களுக்கு மேலாக முஸ்லிம் பெண்கள் அமைப்புக்களும் முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தை சீர்திருத்தம் செய்வதற்காக கடந்த இரு தசாப்தங்களாக தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

முஸ்லிம் குடும்பவியல் சட்டத்தோடு தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்காக 1970களில் இருந்து தேசிய ரீதியாக மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் மிக அண்மையில் அமைக்கப்பட்டது மிலிந்த மொரகொட நீதி அமைச்சராக இருந்த காலத்தில் முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தை சீர்திருத்தம் செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்ட முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தக் குழுவாகும்(2009).

6 வருடங்களுக்கும் மேலாக செயற்பட்டு வரும் 16 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழு இன்னும் சில மாதங்களில் சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகளை அரசாங்கத்திடம் கையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக திருமணம் செய்து கொடுப்பதற்கான மிகக் குறைந்த வயதெல்லை மற்றும் காதி நீதிபதிகளாக பெண்களை நியமித்தல் போன்ற விடயங்களில் இக்குழு கூடிய கவனம் செலுத்தியிருக்கின்றது.

முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தை சீர்திருத்தம் செய்வதற்கான பொறுப்பை அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தின் கைகளில் ஒப்படைத்திருந்தாலும் இந்த விடயத்தில் சமூகத்திற்கு மத்தியில் கருத்தொற்றுமை இல்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

குடும்பவியல் சட்டம்

குடும்பவியல் சட்டத்தை சீர்திருத்தம் செய்வதற்கான முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் மத அடையாளங்களை வைத்து நாங்கள் ஓரம் கட்டப்படுவதை விரும்புகிறோமா அல்லது குர்ஆனும் சுன்னாவும் சொல்லுகின்ற நீதியையும் சமத்துவத்தையும் (பக்.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்சிகள் அறிவுபூர்வமான பங்களிப்புக்களை நாட்டிற்கு வழங்கவில்லை

-மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன்-



இலங்கை அரசியல் முறைமையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவனிடம் லங்காதீப பத்திரிகை மேற்கொண்ட நேர்காணலின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.

தமிழில் : ஹெட்டி ரம்ஸி.

- **சமகால அரசியல் நிலவரங்களை நீங்கள் எவ்வகையில் நோக்குகிறீர்கள்?**

நாட்டில் பாரியதொரு நெருக்கடி நிலவிய காலப்பகுதியிலேயே இவ்வரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ராஜபக்ஷ ஆட்சிப் படையணியை முற்றாக தோற்கடித்ததாக இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் ராஜபக்ஷ காலப்பகுதியில் நிலவிய ஆட்சி பீடமே இன்னும் உள்ளதென நான் கருதுகிறேன். அரசாங்கம் குறிப்பிட்ட அளவு அரசியல் அதிகாரத்தை இன்னும் கைப்பற்றிக் கொள்ளவில்லை என்பதே இதன் அர்த்தம். அதன் காரணமாகவே நாட்டின் எல்லா இடங்களிலும் குழப்பகரமான சூழல் நிலவி வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாட்டின் பிரதான எதிர்க் கட்சியினது தலைவர் ஜனாதிபதி வேட்பாளராவதே பொதுவான முறையாகும். ஆனால் அவ்விடத்தில் வெளியால் ஒருவர் பொதுவேட்பாளராக கொண்டுவரப்பட்டார். ஏனைய கட்சிகள் அவருக்கு உதவ முன்வந்தன. அவ்வேளையில் ஐ.தே.க. போன்றதொரு கட்சி அத்தீர்மானத்திற்கு இணங்க முன்வராமல் இருந்திருந்தால் பாரிய நெருக்கடியொன்று உருவாகியிருக்கும். எப்படியோ அப்பொது வேட்பாளர் அதிகாரத்திற்கு வந்தார்.

நானே இந்தத் தேசத்தின் தலைவர் என்பதாக ஜனாதிபதி நினைக்கிறார். ஆனாலும் அவரது கருதுகோளில் சிறியதொரு பிரச்சினையுள்ளது. அதாவது ஜனாதிபதி, சேனாதிபதியாக இருந்தாலும் ஏனையவர்களது படையொன்றை வாடகைக்குப் பெற்றே அவர் போராடியிருந்தார்.

- **அதாவது இந்நாட்டில் நிறைவேற்றதிகாரம் மிக்க ஜனாதிபதியொருவர் இருந்தாலும் இல்லாதது போன்ற நிலையொன்று உள்ளதென்பதனையா நீங்கள் கூறுகிறீர்கள்?**

இல்லை. இம்முழுமையான வேலைத்திட்டத்தினை சிவில் சமூக அமைப்புக்களே முன்னெடுத்திருந்தன. 'நீதியான சமூகத்திற்குரிய மக்கள் அமைப்பு' பொது வேட்பாளர் என்னும் சூத்திரத்தை மக்கள் மயப்படுத்தியது. எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்புக்களுடனேயே பொது வேட்பாளர் நாட்டின் ஜனாதிபதியானார். அவர்களது உழைப்பு, முயற்சிகளை பொது வேட்பாளருக்காக வேண்டி அர்ப்பணம் செய்தார்கள்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியானதன் பின்னர் பிரதி உபகாரமாக ஓரளவு அதிகாரத்தை ஏனைய கட்சிகளுக்கு வழங்குகிறார். ஆனாலும் இங்கு முறையான அதிகாரப் பகிர்வொன்று இடம்பெறுவதில்லை. இவ்வாறான அரசியல் சந்தர்ப்பத்திற்குள் ஐ.தே.க.வுக்கு பிரதமர் பதவி உள்ளிட்ட அமைச்சரவையில் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் அரசாங்கத்தின் விடயங்களை விமர்சிக்கச் செல்வதில்லை. ஆனால், சுதந்திரக் கட்சியிலிருந்து அரசாங்கத்தில் இணைந்தவர்கள் (உண்மையில் அவர்கள் அரசாங்க உருவாக்கத்தில் பங்களிக்கவில்லை) நாளைய தினம் நாங்கள் அரசாங்கமொன்றை உருவாக்குவோம் என்பதாக அடிக்கடி கூறி வருகிறார்கள். இதில் சிக்கலுள்ளது. முறையானதொரு அதிகாரப் பகிர்வு இடம் பெறாமையே இச்சிக்கலுக்குரிய முக்கிய காரணம் என நான் கருதுகிறேன்.

- **ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் முறையானதொரு அதிகாரப் பகிர்வு இல்லாத பிரச்சினை பற்றியா நீங்கள் கூற வருகிறீர்கள்?**

அவர்களுக்கிடையில் அவ்வாறான அதிகாரப் பகிர்வொன்று இல்லைதான். இது போன்றதொரு முறையே பிரான்ஸிலும் உள்ளது. பிரான்ஸில் டிகோல் உருவாக்கிய அரசியலமைப்பையே ஜே.ஆர் ஜயவர்தன 1978 அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு முன்னுதாரணமாகக் கொண்டார். அதன் பிரகாரம், பாராளுமன்றத்திற்கு இருந்த கூடுதல் அதிகாரம் நீக்கப்பட்டது.

ஜனாதிபதி எவ்வளவு பலமானவராக இருந்தாலும் பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் அவர் நீடிப்பதில்லை. எனவே பாராளுமன்றம் இறப்பர் முத்திரையாக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சந்தோசமான கவனிப்புக்கள் வழங்கப்பட்டன. நிறைவேற்றதிகாரமிக்க ஜனாதிபதிப் பதவியே இந்நெருக்கடிக்குள் மிக முக்கிய பிரச்சினையாக காணப்பட்டது. அதிகாரங்கள் அங்குமிங்குமாக உள்ள பொழுதும் அதில் பாரிய அளவில் மாற்றங்கள் செய்யப்படவில்லை.

டிகோல் அதிகாரத்தை விட்டுச் சென்றதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் பிரான்ஸ் ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்தும் பிரதமர் மற்றுமொரு கட்சியிலிருந்துமே தெரிவுசெய்யப்பட்டு வந்துள்ளார்கள். இந்நிலையானது பெருத்ததொரு போராட்ட நிலையையே தோற்றுவித்திருந்தது. சில ஜனாதிபதிகள் பிரதமரை துச்சமாக மதிக்காமல் செயற்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

இறுதியில் அவர்கள் தங்களது அரசியலமைப்பை உருவாக்கிக் கொண்டார்கள். அதன் படி, ஜனாதிபதி அரச தலைவராக்கப்பட்டார். அவர் முப்படைகளுக்கும் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கும் தலைமை வகிக்கிறார். அன்றாட விவகாரங்களை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பு பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- **சம்பிரதாய அரசியல் முறைகளின் பிரகாரம் பார்க்கும் பொழுது எதிர்க்கட்சியின் செயற்பாடுகளாலேயே அரசாங்கத்திற்குள் நெருக்கடிகள் மூழும். ஆனால் சமீபத்திய இலங்கை அரசியல் சூழலில் அரசாங்கத்திற்குள் இருந்தே பல பிரச்சினைகள் மூண்டுள்ளன. அதற்குரிய காரணங்கள் என்ன?**

பொதுவாக ஒரு தலைவர் கட்சியொன்றில் போட்டியிட்டே அதிகாரத்திற்கு வருவார். ஆனால் ஜனாதிபதி சிறிசேன அவரது கட்சியை உதறித்தள்ளி விட்டே பொது வேட்பாளரானார். எனவே புதிதாக ஒரு அணியை அவர் உருவாக்க வேண்டியுள்ளார். இவ்வாறான ஜனாதிபதி ஒருவரிடம் எந்தவொரு தரப்பினருக்கும் நெருங்குவது இலகுவானது. எனது கருத்தின் படி எந்தவொரு ஜனாதிபதிக்கும் ஆலோசகர்கள் தேவை. அத்தகைய ஆலோசகர்கள் தகுதியில்லாதவர்களாக இருந்தால் அது நாட்டிற்கு பாதிப்பாக அமையும். ஆனாலும் இலங்கையில் அவ்வாறு ஆலோசகர்கள் நியமிக்கப்படுவது மிக மிகக் குறைவு.

ஜனாதிபதிக்கு ஒரு நிலையான கட்சி இல்லாததன் காரணத்தினால் சிலருக்கு தேவையான விதத்தில் அவரை கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள். அதிலுள்ள கோளாறே இங்கு வெளிப்படுகிறது. ஜனாதிபதி அவர்கள் அறிந்தோ அறியாமலோ அவரிடம் உள்ளவர்களுள் பெரும்பாலானவர்கள் உக்கிர ரணில் எதிர்ப்பாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆலோசகர்கள் என்ற வகையில் அவர்களுக்கு அதிகூடிய அதிகாரமொன்று உள்ளது.

- **இப்பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணி போன்ற அரசியல் கட்சியொன்று எதிர்க்கட்சியின் பணியை எவ்வகையில் மேற்கொள்ள வேண்டும்?**

எம்மிடம் சிக்கலான ஜனநாயக முறையொன்றே உள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ள எதிர்க்கட்சிகளிடம் எப்பொழுதும் நிழல் அமைச்சரவைக் குழுவொன்று இருப்பதைக் காண முடியும். அதிலுள்ள அமைச்சர்களே அடுத்த அரசாங்கத்தில் அமைச்சராக நியமனமாவார்கள். அதன் காரணமாக அவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சு தொடர்பிலான தகவல்களைத் தேடுவார்கள். அவ்வகையிலேயே அடுத்த மட்ட தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

ஆனால் இங்கு அவ்வாறான நிலையொன்றில்லை. கடந்த 30 வருட காலப்பகுதிக்குள் ஜே.வி.பி. உள்ளிட்ட ஒரு அரசியல் கட்சியாவது முக்கியமான கொள்கை பத்திரமொன்றையேனும் வெளியிட்டதில்லை. பாராளுமன்றத்திலும் மேடைகளிலும் கூக்குரலிட்டால் மாத்திரம் போதாது. தேடல்களும் ஆராய்ச்சிகளும் கலந்துரையாடல்களும் அவசியம். அத்தகைய அறிவுபூர்வமான பங்களிப்புக்களை இந்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் சமூகத்திற்கு வழங்கியுள்ளனவா? இக்கட்சிகள் அனைத்தும் வரலாற்று ரீதியில் செல்லுபடியற்றதாகியுள்ளன. உண்மையில் இவர்கள் தீவிரமான அரசியல்வாதிகளல்ல.

1977க்கு முன்னர் இந்நாட்டில் பாராளுமன்ற அரசாங்க முறை காணப்பட்டது. அம்முறையில் அமைச்சர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான வியாபாரங்களில் ஈடுபட முடியாது. அக்காலப் பகுதியில் எல்பட் சில்வா என்னும் ஐ.தே.க. அமைச்சரிடம் காலியில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்று இருந்தது. அவ்வெரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எதிராக தகநாயக்க (விஜயானந்த தகநாயக்க) நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அவ்வழக்கின் தீர்ப்பில் எல்பட் சில்வாவின் அமைச்சுப் பதவியும் பறிபோனது. ஆனால் இன்றைய நிலையை பாருங்கள். ஷெட், பார் உள்ளடங்கலாக அரசாங்கத்தின் சகல ஒப்பந்த வேலைத் திட்டங்களையும் அமைச்சர்களே செய்கிறார்கள்.

எனவே நாட்டிலுள்ள பாரதூரமான விடயங்களை பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. ஜே.வி.பி.யினது இரண்டாவது புரட்சியினால் அமைச்சர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் நிலவியது. சிலர் தனிப்பட்ட முறையில் ஆயுதப் படைகளை உருவாக்கிக் கொண்டார்கள்.

இறுதியில் குற்றவாளிகளையும் அரசியல்வாதிகளையும் பிரித்து அறிந்துகொள்ள முடியாத நிலையொன்று உருவானது. இன்று அவ்விரு தரப்பினரும் நல்ல நண்பர்கள். இது பாரியதொரு சிக்கல். இந்தளவு சாக்கடையாகிப் போயுள்ள நாடொன்றை கட்டியெழுப்புவது என்பது கடுமையானதொரு சவாலாகும்.

- **இவ்வாறான நெருக்கடிகளிலிருந்து நாட்டை கரைசேர்ப்பதாகக் கூறியே பிரதான இரு கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசை உருவாக்கியது. இத்தகைய சந்தர்ப்பம் எமக்கு கைநழுவிப் போனால் நாம் சரியான வழிக்கு வருவதற்கு இன்னுமொரு சந்தர்ப்பம் வருமென்று நீங்கள் கருதுகிறீர்களா?**

அதற்கு எனக்கு சரியான பதிலொன்றை வழங்க முடியாது. இப்படுபாதாளத்திலிருந்து நாட்டை கட்டியெழுப்ப நன்றாகவே கஷ்டப்பட வேண்டி ஏற்படும். நாட்டை ஆளும் பணியை சிறப்பாக செய்ய வேண்டும்.

இந்நெருக்கடியிலிருந்து நாட்டை கரை சேர்க்க தீர்மானம் மிக்க சிந்தனையொன்று காணப்பட வேண்டும். அர்ப்பணிப்பும் தியாகமும் இருக்க வேண்டும். அவை இல்லாமல் இச்சிக்கலை நிவர்த்திக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை.

- **உங்களது கணிப்பின் படி எதிர்வரும் தேர்தலில் எந்தத் தரப்புக்கு கூடுதல் அரசியல் இலாபம் கிட்டும்?**

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவுபட்டு மோதிக்கொள்ளும்போது இயல்பாகவே அதன் பலன்கள் ஐ.தே.க.வுக்கு கிட்டும். ஐ.தே.க.வும் ஒரு விடயத்தை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். அதாவது இன்றுள்ள மக்கள் முன்பிருந்தவர்களை போலல்ல என்பது. நவீன உலகிலுள்ள மனிதர்கள் மாற்றமுற்றுள்ளார்கள். நன்றாக முன்னேறிய மனிதனே இன்றுள்ளான். அவ்வாறான மனிதனிடம் எவ்வாறு கொடுக்கல் வாங்கல் புரிவதென்பதை தலைவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

சாத்தான் ஓதும் வேதம்

இஸ்லாத்தில் இணைந்து கொண்ட பலரும் பொதுவாகச் சொல்லும் வாசகம்தான், நான் முஸ்லிம்களைப் பார்த்து இஸ்லாத்துக்கு வரவில்லை, இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொண்ட பின் அதனை மார்க்கமாக ஏற்றுக் கொண்டேன் என்பது. இலங்கையில் இவ்வாறான ஒரு கருத்தை யாரும் சொன்னதாக பரவலான தகவல்கள் இல்லை. இதனுடைய அர்த்தம் இலங்கையில் யாரும் இஸ்லாத்துக்கு வரவில்லை என்பதல்ல. ஆனால் வேறு பல காரணங்களினாலேயே இலங்கையில் பலரும் இஸ்லாத்தைத் தழுவியிருக்கிறார்கள்.

இஸ்லாத்தின் போதனைகள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற அல்லாஹ்வின் நியதியை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. இலங்கை முஸ்லிம்கள் இதுகால வரைக்கும் இஸ்லாம் அடுத்தவர்களுக்குப் போய்ச் சேர்ந்து விடக் கூடாது என்பதிலேயே கவனமாக இருந்திருக்கிறார்கள் என்பது இன்றைய முஸ்லிம் விரோதச் சூழலில் நன்றாகப் புலப்படுகிறது.

இஸ்லாத்தின் காவலர்கள் என்ற பெயரில் பல அமைப்புக்கள் இலங்கையிலே பணிபுரிகின்றன. இவைகள் பெரும்பாலும் எதிர்ப்பிலிருந்து இஸ்லாத்தைப் பாதுகாப்பதன்றி, இஸ்லாம் வெளியில் யாரிடமும் சென்று விடக் கூடாது என்று இஸ்லாத்தைப் பாதுகாப்பவர்களாகவே இருந்து விட்டார்களோ என்றே தற்பொழுது எண்ணத் தோன்றுகின்றது. பெரும்பாலான அமைப்புக்கள் பள்ளிவாசலுக்கு தொழ வருபவர்களுக்குத்தான் எல்லா உபன்னியாசங்களையும் வழங்குகின்றன. பள்ளிவாசலுக்கு வெளியே இருப்பவர்களுக்கே இஸ்லாத்தை எடுத்துச் சொல்ல முறையில்லாத சமூகத்தில், இஸ்லாத்துக்கு வெளியே உள்ளவர்கள் எம்மாத்திரம்?

சில ஜமாஅத்துக்கள் பலமில்லாத ஈமானை பலப்படுத்துவதற்காக உழைக்கின்றன. இன்னும் சில ஜமாஅத்துக்கள் தொழுகை, திருமணம் போன்ற விவகாரங்களில் உபரியாக ஏதும் சேர்ந்துவிடக் கூடாது என போராட்டம் நடத்துகின்றன. மற்றும் சில அமைப்புக்கள் ரஸூலுல்லாஹ் பூரணப்படுத்தாமல் போய்விட்டதாகக் கருதி, மார்க்கத்தில் பல புதிய அனுஷ்டானங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதில், இவற்றைப் பாதுகாப்பதில் ஆர்வம் காட்டுகின்றன. இன்னும் சிலர் இஸ்லாமிய சிந்தனையாளர்களால் விட்டுவிடப்பட்ட கருத்து வேறுபாடான விடயங்களில் மயிர்பிளக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். மொத்தத்தில் பெருவாரியான இஸ்லாமிய அமைப்புக்கள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளாலேயே தமது பணிகளை விஸ்தரித்திருக்கின்றன.

இதனால் 90 வீதமான இலங்கை மக்களுக்கு முஸ்லிம்களைத் தெரிந்திருக்கிறதே ஒழிய இஸ்லாத்தைத் தெரியவில்லை. இனி இஸ்லாத்தைப் பற்றி யார் சொல்லிக் கொடுத்தாலும் அதுதான் உண்மையான இஸ்லாமாக இருக்கும் என்றுதான் அவர்கள் நம்பிக்கொள்கின்றனர். இந்த நம்பிக்கையில்தான் சாத்தான் வேதம் ஓதுவதுபோல ஞான சார தேரர் இஸ்லாம் டியூஷன் நடத்தத் தயாராகிறார்.

இனியும் குட்டையைக் குழப்பிக் கொண்டிருப்பதுதான் ' முஸ்லிம்களுடைய பணியாக இருக்கும் என்றிருந்தால் சாத்தானின் வேதம் தான் இங்கு சாஸ்திரமாகும். இஸ்லாம் என்ற பெயரில் பல்வேறு புனஸ்காரங்கள் அறிமுகமாகிக் கொண்டிருக்கும் இந்த நாட்டில் இஸ்லாத்தின் போதனைகள் சோதனைகளாக மாறிவிடும்.

இந்த நிலையில் சற்று ஆறுதலான விடயங்களும் சமூகப் பரப்புக்குள்ளால் நடந்து வருகிறது. ரமழானில் இலங்கை மக்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை அறிமுகப்படுத்தும் வகையிலான இப்தார் நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன. சுமார் 300 சிங்கள மாணவ மாணவியர்களுக்கு பள்ளிவாசலில் வைத்து இஸ்லாத்தை அறிமுகப்படுத்தி வைக்கின்ற நிகழ்வொன்றும் இவற்றுக்குள்ளால் நடந்திருக்கிறது. மாணவர்களும் ஆசிரியர்களும் இஸ்லாம் பற்றிய திருப்தியான பதிவுகளுடன் சென்றார்கள் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான முயற்சிகள் பரவலாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளிவாசலிலும் இது போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். பைபிளைக் கற்பதற்கு பைபிள் கற்கை நெறிகள் நாட்டிலே இருக்கின்றன. யாரும் இந்தக் கற்கை நெறியில் சேர்ந்து கொள்ள முடியும். அது போல குர்ஆன் கற்கை நெறிகளையும் முஸ்லிம்களுக்கு மட்டும் சுருக்காமல் பரவலாக்க முடியுமாக இருந்தால், குர்ஆன் பற்றிய தெளிவை நாட்டுக்கு வழங்க முடியும். ஒவ்வொரு அமைப்பும் ஜமாஅத்தும் தமது கூட்டுக்குள் இருந்து வெளியே வர வேண்டும். இஸ்லாம் என்ற பரந்த வெளியின் பால் மக்களை ஈர்ப்பதற்கு அவை உழைக்க வேண்டும்.

ஒவ்வொரு விடயத்திலும் அடுத்தவர்கள் உசுப்பி விட்டால் தான் எதையாவது செய்வது என்பது எமது முஸ்லிம் சமூகத்துக்கு வாடிக்கையாகி விட்டது. இப்படி எழுப்பி விட்ட பிறகும் தூங்குவதாக இருந்தால் இந்தச் சமூகத்தை அழிப்பதற்கு தேரர்கள் தேவையில்லை. நமது குபேரர்களே போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் சூடானில் அமைதி காக்குமாறு உமர் பஷீர் வேண்டுகோள்

தென் சூடான் ஜனாதிபதி சல்வா கிர் மற்றும் உப ஜனாதிபதி ரீட் மார்சல் ஆகியோர் மக்கள் நலன்களுக்காகப் பொறுமை காக்க வேண்டும் என்றும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் உமர் பஷீர் வேண்டியுள்ளார். இரு தலைவர்களையும் தொலைபேசியில் அழைத்த பஷீர், மோதலை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். பிராந்தியத்தின் ஸ்திரப்பாட்டைப் பேணுங்கள். தென் சூடான் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அழியுங்கள். பயங்கரவாதத்திற்கு இடம் வைக்காதீர்கள் என ஆலோசனை வழங்கியுள்ளார். தென் சூடான் பிரிந்ததிலிருந்து பாரிய சிவில் யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து வருகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதோடு, நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சி கண்டுள்ளது.

சர்வதேசப் பார்வை

காஸா மீதான இஸ்ரேலிய யுத்தத்தின் இரு ஆண்டுகள் நிறைவு

போரினால் பாதிக்கப்பட்ட காஸாவுக்கு எந்த நிவாரணமும் இல்லை

காஸா மீது மூன்றாவது முறையாக இஸ்ரேல் நடத்திய இனவெறிப் போர் இரண்டாவது ஆண்டை நிறைவுசெய்துள்ளது. ஆகாய வழியாகவும் தரை வழியாகவும் காஸா மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதல்களால் காஸா முழுமையாக அழிக்கப்பட்டது. கீழ்க்கட்டுமானங்கள் அழித்தொழிக்கப்பட்டன.

1450 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 450 பேர் குழந்தைகள். 25 இற்கும் மேற்பட்ட பள்ளிவாயல்கள் இஸ்ரேலிய போர் விமானங்களால் தரைமட்டமாக்கப்பட்டன. அரச கட்டடங்கள் உள்ளிட்டு, பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பனவும் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக காஸா மீது இஸ்ரேல் விதித்துள்ள பொருளாதாரத் தடை உலகத்திலிருந்து காஸாவைத் தனிமைப்படுத்தியுள்ளது. காஸா மீது இஸ்ரேல் புரிந்த போர்க் குற்றங்கள் தொடர்பாக அறிக்கை வெளியிட்டதோடு ஐ.நா. அமைதியடைந்தது. ஐரோப்பிய ஒன்றியமும் தனது கையாலாகாத் தனத்தைக் காட்டிவிட்டது. மேற்கு நாடுகள் எதுவும் காஸாவின் மீள் கட்டுமான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவில்லை.

இஸ்ரேலிய போருக்குப் பிந்திய காஸாவை பார்வையிடுவதற்கும் இஸ்ரேல் வெளிநாட்டு நிவாரண அமைப்புகளுக்கு அனுமதி வழங்குவதில்லை. ஒருபுறம் மத்திய தரைக் கடலில் இஸ்ரேலிய கடற்படையினராலும் இன்னொரு புறம் இஸ்ரேலின் சட்டவிரோத சுவரினாலும் மற்றொரு புறம் எகிப்திய மம்மிகளாலும் சூழப்பட்டு முற்றுகையின் கீழுள்ள காஸா மக்களின் அவலம் இரண்டு ஆண்டுகளையும் கடந்து தொடர்கின்றது. இது குறித்து விஷேட அறிக்கைகளையும் செய்தி விவரணங்களையும் அல் ஜஸீரா இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

காஸாவுக்கான இத்தாலிய தூதுக் குழுவை தடுத்து நிறுத்தியது இஸ்ரேல்

கடந்த வாரம் காஸாவின் நிலமைக்ளைக் கண்டறிவதற்கு அங்கு செல்வதற்கு முயன்ற இத்தாலிய தூதுக் குழுவொன்றை இஸ்ரேல் தடைசெய்தது. இத்தாலிய பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் தலைமையிலான இக்குழு இஸ்ரேலிலுள்ள இத்தாலிய தூதுவராலயத்தின் மூலம் இவ்விஜயத்தை ஏற்பாடு செய்திருந்தது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மேற்குக்கரையில் இத்தாலியின் நிதி ஆதரவில் மேற்கொள்ளப்படும் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட இத்தாலிய தூதுக்குழு, காஸாவில் இத்தாலி மேற்கொண்டு வரும் திட்டங்களைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

காஸாவில் இஸ்ரேலிய இராணுவம் ஏற்படுத்தியுள்ள அழிவுகளை வெளிநாடுகள் கண்டுகொள்ளக் கூடாது என்பதில் இஸ்ரேல் கண்ணும் கருத்துமாகச் செயல்படுகின்றது.

சவூதி இளவரசரின் கருத்தை இஸ்லாமிய பாராளுமன்ற அவை கண்டிக்கின்றது

சமீபத்தில் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் இயக்கம் குறித்து சவூதி அரேபியாவின் இளவரசர் துருக்கி அல் பைசல் வெளியிட்ட கருத்தை இஸ்லாமிய பாராளுமன்ற உறுப்பினர்களின் சர்வதே மன்றத்தின் தலைவர் கண்டித்துள்ளார். பிராந்தியத்தில் ஸ்திரமின்மையை இவ்விரு இயக்கங்களும் உருவாக்குவதாக பைசல் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள பாராளுமன்ற ஒன்றியத் தலைவர் நாஸிர் அஸ்ஸனாஈ, குவைத்திலிருந்து வெளிவரும் அர்ரிஸாலா பத்திரிகைக்குக் கருத்து வெளியிடுகையில், ஹமாஸின் இலக்குகள் குறித்து யாரும் எங்களுக்குப் பாடம் புகட்ட வேண்டியதில்லை. இது குறித்து பைசல் வெளியிட்ட கருத்துகள் உண்மைக்குப் புறம்பானாவை. ஹமாஸ் சுதந்திரத் தேர்தலில் வெற்றி பெற்றது. ஆனால் அதற்கெதிரான சதிப் புரட்சி நடந்தது. ஜனநாயகத்தைப் பரப்புவதாகக் கூறும் மேற்குலகம் இந்தப் பரீட்சையில்தான் முதலில் தோல்வி கண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

ஈராக்கில் உள்ளக மோதல்கள் மற்றும் சிவில் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள வறுமையைத் தணிப்பதில் பெருமளவு குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என ஐ.நா. சிறுவனர் நிதியம் (Unicef) தெரிவித்துள்ளது.

அரை மில்லியனுக்கும் அதிகமான ஈராக்கிய சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்குப் பதிலாக தொழிற்சாலைகளுக்குச் செல்வதாக யுனிசெப் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. தற்போது 575,000 சிறுவர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 14 வயதுக்குக் குறைவானவர்களே இவ்வாறு கடின உழைப்பில் ஈடுபட்டுள்ளதாக அவ்வறிக்கை கூறுகின்றது.

குடும்ப வருமானம் போதியதாக இல்லாமையால் பெற்றோர் தமது குழந்தைகளை தொழிலுக்கு அனுப்புகின்றனர். 2014 இன் ஆரம்பத்திலிருந்து ஈராக்கிய சிறுவர்களில் 10 வீதமானோர் அல்லது 15 இலட்சம் சிறுவர்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். வன்முறைகளே இதற்கான காரணமாகும்.

2014 இல் வடக்கு மற்றும் மேற்கு ஈராக்கின் பல பகுதிகளை ஐசிஸ் பயங்கரவாதிகள் கட்டுப்படுத்தியுள்ளனர். இதனால் 20 வீதமான ஈராக்கிய பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மோதல் பிராந்தியத்திலுள்ள 3.5 மில்லியன் பாடசாலைச் சிறுவர்கள் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பை இழந்துள்ளனர்.

3.6 மில்லியன் ஈராக்கிய சிறுவர்கள் மரணம், தீவிர காயங்கள், பாலியல் வன்முறை, கடத்தல், ஆயுதக் குழுவில் உள்ளீர்க்கப்படல்போன்றஆபத்துக்களைஎதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த 6 மாதங்களின் ஐசிஸ் 12% நிலத்தை இழந்துள்ளது

கடந்த 6 மாதங்களில் தாஇஷ் என அழைக்கப்படும் ஐசிஸ் பயங்கரவாதிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த நிலத்தின் 12 வீதமானவற்றை அரச படையினரிடம் இழந்துள்ளனர். சிரியா, ஈராக் ஆகிய நாடுகளில் அரசாங்கப் படையினருக்கும் ஐசிஸ் இயக்கத்திற்கும் இடையில் ஜனவரி மாதத்திலிருந்து நடைபெற்று வரும் மோதலின் விளைவாகவே இந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஐ.எச்.எஸ் எனும் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் 112000 சதுர கி.மீ. ஆக இருந்த கட்டுப்பாட்டு நிலம் 2015 முடிவில் 78000 சதுர கி.மீ. ஆக சுருங்கியது. இது 14 வீத இழப்பாகும். 2016 இன் முதல் ஆறு மாதங்களில் மேலும் 12 வீத நிலத்தை தாஇஷ் இழந்துள்ளது. தற்போது 68300 சதுர கி.மீ நிலப்பரப்பை சிரியாவிலும் ஈராக்கிலும் அது கட்டுப்படுத்தி வருகின்றது.

இது அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியா மாநிலத்திற்கு அல்லது அயர்லாந்திற்கு சமமானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கெய்ரோ பொலிஸ் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்ட சிறுவன் மரணம்

13 வயதான சிறுவன் ஒருவன் கெய்ரோவிலுள்ள நஸ்ர் நகர பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, தொடர்ச்சியாக சித்திரவதை செய்யப்பட்டதன் விளைவாக மரணித்துள்ளான். சுதந்திரத்ததிற்கும் உரிமைகளுக்குமான எகிப்திய அமைப்பு இது குறித்து கருத்து வெளியிடுகையில், அலெக்சாந்திரியாவில் கைதுசெய்யப்பட்ட அஹ்மத் ஆதில் யூனுஸ், கெய்ரோவிலுள்ள தேசிய பாதுகாப்புக் கட்டிடத்திற்குக் கொண்டு வரப்பட்டு, 5 நாள் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளான். சித்திவதை [illegible]

பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், சிறைச்சாலை அதிகாரிகள் அது குறித்து கவனம் செலுத்தவில்லை.

2016 ஆம் ஆண்டில் இதுவரை 48 சிறுவர்கள் எகிப்திய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். உலகில் உள்ள சிறைச்சாலைகளில் கடும் சித்திரவதைகள் இடம்பெறும் நாடாக எகிப்து இனம் காணப்பட்டுள்ளது.

இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு வதை செய்யப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை ஸீஸியின் அரசாங்கத்தை குற்றம் சுமத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூக்கிலிடப்பட வேண்டிய பிளேயர்

றவூப் ஸெய்ன்

ஈராக் மீது 2003 மார்ச் 20 இல் டொனி பிளேயரும் புஷ்ஷும் தொடுத்த ஆக்கிரமிப்புப் போர் இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் 6 இலட்சம் முதல் 10 இலட்சம் வரையிலான ஈராக்கியர்கள் அங்கு கொல்லப்பட்டனர். முதல் 4 ஆண்டுகளில் அமெரிக்க-பிரிட்டிஷ் படையினரால் 6 இலட்சம் சிவிலியன்கள் கொல்லப்பட்டமை உறுதி செய்யப்பட்டது. அது தவிரவும் நூற்றுக்கணக்கான ஈராக்கிய பெண்கள் அமெரிக்க-பிரிட்டிஷ் படையினரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர்.

சத்தாமை பதவி கவிழ்ப்பதற்கு புஷ்ஷும் பிளேயரும் மேற்கொண்ட இந்த ஆக்கிரமிப்புப் போர் முதல் உலகப் போருக்குப் பின்னர் நடைபெற்ற மிகப் பெரிய யுத்தமாகும். ஒரு குறிப்பிட்ட நாட்டை இலக்கு வைத்து இரு வல்லரசுகள் நடத்திய இந்தப் போரின் தாக்கத்திலிருந்து ஈராக் இன்னும் விடுபடவில்லை.

5000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பபிலோனிய நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கிய ஈராக்கின் பண்பாட்டுச் சின்னங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டதோடு, பக்தாத் நூலகம் கொழுத்தப்பட்டது. பபிலோனிய தொங்கு தோட்டம் துவம்சம் செய்யப்பட்டதோடு, ஈராக்கின் எண்ணெய் வளம் வல்லரசுகளால் கபளீகரம் செய்யப்பட்டது.

மூன்று தேசங்களாக ஈராக் பிரிக்கப்பட்டது. வளமான பகுதி குர்திஷ்களுக்குத் தாரைவார்க்கப்பட்டது. மற்றொரு பகுதியில் ஈரான் ஆதரவு ஷீஆ கும்பல் தலைமையிலான அதிகார பீடம் உருவாக்கப்பட்டது. அன்பார் மாகாணத்திலும் சலாஹுத்தீன் மாகாணத்திலும் சுன்னிகள் புறமொதுக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற தாக்குதலில் 300 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். அன்றாடம் குண்டுவெடிப்பும் துப்பாக்கிச் சூடும் வன்முறைகளும் என ஈராக்கின் வரலாறு கண்ணீராலும் இரத்தத்தாலும் எழுதப்படுகின்றது. ஈராக்கியர்களின் இந்த அவல நிலைக்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பதை உலகம் திரும்பிப் பார்க்கத் தொடங்கியுள்ளது.

ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்கள் மற்றும் உயிரியல் இரசாயன ஆயுதங்கள் சத்தாமின் கையிருப்பில் உள்ளதென்று காரணம் கூறியே அந்நாடு ஆக்கிரமிக்கப்பட்டது. இறைமையுள்ள ஒரு தேசத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் ஆக்கிரமித்து, அங்கு நடத்திய கொலைத் தாண்டவத்தில் இலட்சக்கணக்கான உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. இதற்கு பிரிட்டனின் அப்போதைய பிரதமர் டொனி பிளேயர் அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி புஷ்ஷுக்கு வழங்கிய ஆதரவு குறித்து விசாரணை செய்வதற்கு கோடன் பிரவ்னின் காலத்தில் நியமிக்கப்பட்ட குழு கடந்த வாரம் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

உலகம் மிகுந்த உற்சாகத்தோடு எதிர்பார்த்திருந்த இந்த அறிக்கை பிரிட்டனின் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆணைக்குழுவுக்குத் தலைமை வகித்தவர் சேர் ஜோன் ஷில்கொட். அவரது பெயரால் வெளியாகியுள்ள 'ஷில்கொட் அறிக்கை', பிரித்தானியர்களுக்கு ஈராக்கிய யுத்தத்தின் உண்மை முகத்தை தோலுரித்துக் காட்டியுள்ளது.

டொனி பிளேயரை ஒரு பொய்யன் என்று வர்ணிக்கும் இந்த அறிக்கை, ஈராக்கில் பேரழிவு தரும் ஆயதங்கள் எதுவும் இருக்கவில்லை என்ற உண்மையைத் தெரிந்து கொண்டே பிளேயர் புஷ்ஷுக்கு ஆதரவளித்தார் என்று குற்றம் சாட்டுகின்றது. பிரிட்டிஷ பாராளுமன்றத்தை பிளேயர் தவறாக வழிநடத்தினார். பிரிட்டிஷ் சமூகத்தையும் பிளேயர் ஏமாற்றியுள்ளார் என்று இந்த அறிக்கை சாடுகின்றது.

சமீபத்திய பிரிட்டன் அரசியல் வட்டாரத்தில் பிளேயர் விவகாரம் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. 2003 ஈராக் ஆக்கிரமிப்பில் பிளேயர் எடுத்த முடிவு ஒரு போர்க் குற்றம் என்பது குறித்து வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாராளுமன்றத்தில் பிளேயருக்கு எதிரான பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக கன்சவேடிவ் கட்சி உறுப்பினர் டேவிட் டேவிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அப்போதைய பிரதிப் பிரதமர் ஜோன் பிரெஸ்கொட், பிளேயரின் ஆக்கிரமிப்பு சட்டவிரோதமானது என்று தான் நம்புவதாகக் கூறியுள்ளார். இதேவேளை, இதற்குப் பதிலளித்துள்ள பிளேயர், ''தனது தவறுகளுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும், ஆனால் தான் எடுத்த முடிவு சரியானது எனவும் கூறியுள்ளார்.

புஷ்ஷுக்கும் பிளேயருக்கும் இடையில் இருந்த தனிப்பிட்ட உறவே அமெரிக்காவுக்கு பிரிட்டன் குருட்டுத்தனமாக ஆதரவளிப்பதற்குக் காரணமாகியது. 2002 ஜூலையில் பிளேயர் புஷ்ஷுக்கு எழுதிய கடிதத்தில் ''என்னவாயினும் நான் உங்களுடன் இருப்பேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கின் ஜனாதிபதி சத்தாம் ஹுஸைனை கவிழ்க்க வேண்டும் என்ற புஷ்ஷின் வெறித்தனம் அந்நாட்டை ஆக்கிரமித்து அழிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது. இஸ்ரேலின் இருப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த முக்கியமான நாடு ஈராக். இஸ்ரேலைப் பாதுகாப்பதற்கும் ஈராக்கின் வளமான எண்ணெய் வயல்களை கொள்ளையடிப்பதற்குமே அமெரிக்க நிருவாகம் விரும்பியது. அதற்கு பிளேயர் உடந்தையாக இருந்தார்.

ஈராக் ஆக்கிரமிப்பின் விளைவாக ஏற்பட்ட மரணங்கள் ஐ.நா.வின் கணிப்பீட்டில் 3 முதல் 6 இலட்சம் என மதிப்பிடப்படுகின்றது. ஆனால், ஈராக்கியர்களின் கணிப்பீட்டில் இதுவரை 15 இலட்சம் மக்கள் போரின் பல்வேறு வகையான தாக்கங்களால் இறந்துள்ளனர்.

ஈராக்கின் முன்னணிப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், அணுத் துறை ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள் அமெரிக்கப் படையினரால் திட்டமிட்டே கொன்று குவிக்கப்பட்டனர். இன்றுவரை ஈராக் ஒரு யுத்த பூமியாகவே தோற்றமளிக்கின்றது.

டொனி பிளேயருக்குப் பின்னர் பதவியேற்ற கோடன் பிரவ்னினால் 2009 இல் நியமிக்கப்பட்ட ஷில்கொட் தலைமையிலான ஆணைக்குழு 7 ஆண்டுகளுக்குப் பின்னரே இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

பாராளுமன்றத்தில் ஈராக் போர் குறித்த அனுமதியைப் பெறுவதற்கு 8 மாதங்களுக்கு முன்பாகவே ஈராக்கை ஆக்கிரமிக்கும் சூழ்ச்சித் திட்டத்தை புஷ்ஷும் பிளேயரும் கலந்துரையாடியுள்ளனர். அவர்களுக்கு இடையிலான கடிதத் தொடர்பு அதனை உறுதி செய்கின்றது. ஒரு பிரதமர் அவரது அமைச்சரவைக்கும் இராணுவத்திற்கும் தெரியாமலேயே இவ்வாறான கள்ளத் தொடர்புகளை பேணி வந்தார் என்பது கடிதங்கள் மூலம் தெரிய வருகின்றது.

மலேசியாவின் நீதிமன்றம் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பாக புஷ்ஷும் பிளேயரும் போர்க் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்திருந்தது. உலகின் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுவாக நிலைநிறுத்த வேண்டும் எனக் கோரி வரும் பிரிட்டன், இப்போது தனது முன்னாள் பிரதமர் ஒருவர் போர்க் குற்றவாளியாக நிற்கின்றார் என்பதற்கான ஆதாரங்களை தெளிவாகக் கண்டடைந்துள்ளது.

சட்டவிரோத யுத்தமொன்றைத் தொடங்கி, இலட்சக்கணக்கான உயிர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த டொனி பிளேயரை பிரிட்டிஷ் பாராளுமன்றம், அதன் நீதித் துறை எப்படிக் கையாளப் போகின்றது என்பதை உலகம் மிகுந்த உற்சாகத்துடன் எதிர்பார்த்திருக்கின்றது. உலகிலுள்ள மனித உரிமைச் சட்டங்களின் படியும் மனிதாபிமான சட்டங்களின் படியும் பிளேயருக்கு வழங்க வேண்டிய ஒரே தண்டனை அவரை உலகம் பார்த்திருக்க தூக்கிலிடுவதுதான். பிரிட்டிஷ் நீதித் துறை இதை நிறைவேற்றுமா?

இந்த அவல நிலைக்கு ஆக்கிரமிப்புப் போரே காரணம் என்று ஷில்கொட் அறிக்கை தெரிவிக்கின்றது. 26 இலட்சம் சொற்களையும் 12 தொகுதிகளையும் கொண்ட ஷில்கொட் அறிக்கையின் நிறைவேற்றுச் சுருக்கம் நூற்றுக்கும் அதிகமான பக்கங்களை உள்ளடக்கியிருக்கின்றது.

இஸ்ரேல் பகிஷ்கரிப்பு இயக்கம்

-வெல்ல முடியாத ஓர் யுத்தம்

ஸ்டான்லி கொஹென்

இஸ்ரேலுக்கு எதிராக, அதன் ஆக்கிரமிப்பை எதிர்த்து மேற்கு நாடுகளில் செயற்பட்டு வரும் பகிஷ்கரிப்பு இயக்கம் 'தார்மீகத்திற்கு எதிரானது' என இஸ்ரேலிய புத்திஜீவிகள் அமைப்பின் உறுப்பினர் ஹெலவி குற்றம் சாட்டுகின்றார்.

இஸ்ரேல் இவ்வியக்கத்திற்கு எதிராக என்னதான் பிரச்சாரம் செய்தாலும் அதனை நிறுத்த முடியாது. யூத தேசமே உலகம் எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச்சினை என்று பகிஷ்கரிப்பு இயக்கம் மேற்கொண்டு வரும் பிரச்சாரத்தில் வெற்றி பெற்று வருகின்றது.

பலஸ்தீனர்கள் இன்று எதிர்கொண்டு வரும் நெருக்கடிகளுக்கு 68 வயதாகின்றது. அவை முடிவுறாத சோதனைகளாகத் தொடர்கின்றது. நில ஆக்கிரமிப்பு, பொருளாதார முற்றுகை, கைது, சிறை, சித்திரவதை என உலகத்திலிருந்து பலஸ்தீனை அந்நியமாக்கும் அநீதியான செயற்பாட்டில் இஸ்ரேல் முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றது.

பலஸ்தீனின் அவலங்களை ஐ.நா.வோ, பாதுகாப்புச் சபையோ பார்க்கத் தவறி விட்டன. அரை நூற்றாண்டுக்கும் மேலாக மத்திய கிழக்கில் இஸ்ரேல் பராமரித்து வரும் ஒரு பெரிய சிறைச்சாலையாகவே பலஸ்தீன் மாற்றப்பட்டுள்ளது. சமாதான நடவடிக்கைகள் பலஸ்தீனர்களை ஏமாற்றி வந்துள்ளன. காஸா முற்றுகை பாரிய மனித அவலங்களை தோற்றுவிக்கின்றன.

பலஸ்தீனர்களின் ஒட்டுமொத்த அவலத்திற்கும் இஸ்ரேல்தான் பொறுப்பு என்று கூற முடியாது என ஹெலவி வாய் கூசாமல் எப்படிக் கூறுகிறார்? பலஸ்தீனர்களைப் பொறுத்தவரை, இஸ்ரேல் சட்ட பூர்வமான ஓர் நாடு அல்ல. சர்வதேச தரத்திலுள்ள, அங்கீகாரம் பெற்ற தேசமுமல்ல. உண்மையான மண்ணின் மைந்தர்களை விரட்டியடித்து, அவர்களின் நிலங்களைத் திருடி, இராணுவப் படையெடுப்பொன்றின் மூலம் இஸ்ரேல் உருவாக்கப்பட்டுள்ளது. 68 ஆண்டு காலமாக பலஸ்தீனர்களை அது அடக்கி ஆண்டு வருகின்றது.

இஸ்ரேல் பகிஷ்கரிப்பு இயக்கம் இந்தக் கருத்தைப் பிரச்சாரம் செய்வதில் மும்முரமாக களமிறங்கியுள்ளது. மேற்கிலுள்ள யூத ஆதரவுப் போக்கான ஊடகங்களின் பொய்யான பரப்புரைகளை சிவில் சமூகத்திற்கு தோலுரித்துக் காட்டுவதில் அந்த இயக்கம் வெற்றி பெற்று வருகிறது.

சுதந்திரமான நீதித்துறை, ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், மதச் சுதந்திரம் எதுவும் இல்லாத நாடாகவே இஸ்ரேல் இருந்து வருகின்றது. பலஸ்தீனர்களின் முழு அவலத்திற்கும் இஸ்ரேல்தான் காரணம்.

ஹெலவி சொல்வது போல், இஸ்ரேலைத் தவிர யார் காரணம்? வடகொரிய மக்கள் காரணமானார்களா? பலஸ்தீனர்களின் நகரங்களையும் வீடுகளையும் போர் விமானங்களால் அழித்தொழித்தது யார்,? குழந்தைகளின் [illegible] களால் அழித்தது யார்? உலகத்தின் பார்வையிலிருந்து பலஸ் தீனைத் தனிமைப்படுத்தியது யார்? காஸாவில் மின்சாரத்தைத் துண்டித்து, மேற்குக்கரையில் குடி நீரை நிறுத்தியவர்கள் யார்?

பலஸ்தீனர்களின் நிலங்களில் சட்டவிரோதமான கட்டடங்களை நிர்மாணித்து வருபவர்கள் யார்? மேற்குக்கரையில் கீழ்க்கட்டுமானங்களை அழித்தொழித்தது யார்? டீனேஜ் பருவத்திலுள்ள பலஸ்தீன இளைஞர்களை சிறையில் அடைத்தது யார்? அவர்களின் விவசாய நிலங்களை, ஒலிவ் மரங்களை வெட்டி வீழ்த்துவது யார்? சீனாவா, புட்டினின் ரஷ்யாவா? அல்லது வடகொரியா? இஸ்ரேல்தான் அதில் சந்தேகமில்லை.

இன்றைய பலஸ்தீனர்களின் சோக நிலமைக்குக் காரணம் யார்? கேம் டேவிட், ஒஸ்லோ, வாய்ப் பிலான்டேஷன், வைநதி எனப் பேச்சுவார்த்தைகள் எல்லாமே அவர்களை ஏமாற்றியது. பலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்கக் கூடாது என ஹெலவி போன்றவர்கள் கருதுகின்றனர். இப்போது இஸ்ரேலைத் திணற வைத்துள்ள பெரிய தலையிடியாக பகிஷ்கரிப்பு இயக்கம் மாறியுள்ளது.

பலஸ்தீனர்களைப் பொறுத்தவரை அவர்களது பக்கம் நின்று பிரச்சினைகளைப் பேசக் கூடிய, உலகத்தின் பார்வைக்கு அவற்றைக் கொண்டு செல்லக் கூடிய ஒரே நம்பிக்கையாக இந்த பகிஷ்கரிப்பு இயக்கம் மாறியுள்ளது. அது ஒரு சர்வதேச இயக்கம். பலஸ்தீனர்கள் சார்பாக அகிம்சை வழியில் போர் தொடுக்கும் மாபெரும் சிவில் இயக்கம். உண்மையை உலகத்தின் காதுகளுக்கு உரத்துச் சொல்லும் இயக்கம். ஒரு வகையில் அது இஸ்ரேலுக்கெதிரான பிரச்சாரப் போர். அதில் இஸ்ரேல் ஒருபோதும் வெல்லப் போவதில்லை.

இஸ்ரேல் எதிர்ப்பை செமித்திய எதிர்ப்பாகக் கட்டமைக்கும் மேற்குஊடகங்களுக்கே இதுவொரு சவால். பலஸ்தீனர்களின் உரிமை பற்றிப் பேசுவதும் இஸ்ரேலிய பார்வையில் செமித்திய எதிர்ப்புதான். வரலாற்று உண்மைகளை அப்பழுக்கற்ற வகையில் எடுத்துரைப்பதற்கு இஸ்ரேல் என்ன பெயரையும் வைத்துக் கொள்ளலாம்.

ஆனால், இஸ்ரேலின் உள்ளே வாழும் அறேபியர்கள் குறித்து அந்நாடு கையாண்டு வரும் தீண்டாமைக் கொள்கையை உலகம் புரிந்துகொள்ள வேண்டும். மத்திய கிழக்கின் ஒரே ஜனநாயகம் என்று புகழப்படும் ஒரு நாடு மனிதர்களை எவ்வாறு கொன்று குவிக்கின்றது என்பதை உலகம் அறிய வேண்டும்.

இஸ்ரேல் உருவாக்கப்பட்டதன் உடனடி விளைவாக 700,000 பலஸ்தீனர்கள் நாடு இழந்தனர். 400,000 பலஸ்தீனர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பட்டனர். 8 இலட்சம் மக்கள் நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இந்த உண்மையை இஸ்ரேலியர்கள் ஏன் ஏற்க மறுக்கின்றனர். வயதான பலஸ்தீனர்கள் மேற்குக்கரையில், காஸாவில் சேரிப் புறங்களிலும் ஐ.நா.வின் அகதி முகாம்களிலும்தட்டழிந்து திரிகின்றனர்.

இப்படியெல்லாம் அநீதி இழைத்துக் கொண்டிருக்கும் இஸ்ரேலின் உண்மைச் சொரூபத்தை உலகம் புரிந்துகொள்வதற்கு இஸ்ரேல் பகிஷ்கரிப்பு இயக்கம் மிகுந்த மனஉறுதியோடு களத்திற்கு வந்துள்ளது. அதனுடனான யுத்தத்தில் இஸ்ரேல் ஒருபோதும் வெற்றி பெறப் போவதில்லை.

ஸ்டான்லி கொஹென் ஒரு சட்டத்தரணி, மனித உரிமை செயற்பாட்டாளர், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா குறித்து ஆழமான ஆய்வுகள் மேற்கொண்டவர். அவர் அல்ஜஸீராவில் எழுதியுள்ள நீண்ட கட்டுரையின் ஒரு பகுதியே இங்கு தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசார தேரர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

டொக்டர் மீனா தாஹா ரியாய்

இந்த நாட்டில் என்ன நடக்கின்றது என்பது ஆச்சரியமளிக்கின்றது. அளுத்கமையில் இடம்பெற்ற கலவரத்தின் பின்னர் அந்த கலவரத்திற்குக் காரணம் நான்தான் என்பதை அண்மையில் இடம்பெற்ற நேர்காணலில் ஞானசார தேரர் தன் வாயாலேயே ஒப்புக் கொண்டிருந்தார். மேலும் அவர் தன்னால் வெறும் ஐம்பது பேரைக் கொண்டு அளுத்கம கலவரம் போன்ற இன்னுமொரு அழிவை உண்டு பண்ண முடியுமென்ற எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறார்.

முன்னைய அரசாங்கத்தினால் ஞானசார தேரர் கைவிடப்பட்டதோடு தங்களது தேர்தல் தோல்விக்குக் காரணமும் அவர்தான் என குற்றம் சுமத்தப்பட்டது. ஞானசார தேரரின் சகாவான டிலாந்த நாங்கள் முஸ்லிம்களுக்கு எரிச்சல் உண்டாக்ககூடிய வகையில் எதையுமே செய்யவில்லை என்று ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்தார். இவர்கள் இருவருக்கிடையிலான முரண்பாடே அவர்களது சிறுபிள்ளைத்தனமான நாடகத்தை வெளிப்படுத்துகின்றது.

சிறிது காலம் எதுவுமே பேசாது அடங்கியிருந்த ஞானசார தேரர் மீண்டும் பழைய பாணியில் வெளிக்கிளம்பியிருக்கிறார். முஸ்லிம்களும் பொலிஸ் அதிகாரிகளும் மீண்டும் அச்சுறுத்தப்படுகின்றனர். முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல்களும் அதற்கு ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ் அதிகாரிகள் காட்டுகின்ற மௌனங்களும் மீண்டும் பழைய ஆட்சியை ஞாபகப்படுத்துவதாகவே இருக்கின்றது. பொலிஸ் பதிவுகள், ஊடகங்கள் வாயிலாக ஞானசார தேரரின் பகிரங்கமான அச்சுறுத்தல்கள் என்பன அவருக்கு எதிராக காணப்பட்டாலும் இந்த அரசாங்கமும் அவருக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

ஏன் இந்த மௌனம்?

அவ்வாறு அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் ஞானசார தேரர் காவியுடை அணிந்திருப்பதுதான். அவரது செயற்பாடுகள் பௌத்த மதத்தின் ஒவ்வொரு புனிதமான அடிப்படைகளையும் மீறுவதாகவே காணப்படுகின்றன. என்றாலும் இன்னும் எந்த நடவடிக்கையும் அவருக்கு எதிராக அரசாங்கத்தினால் எடுக்கப்படவில்லை. இந்த நாட்டில் வெறுப்புக்களைத் தூண்டக்கூடிய பேச்சுக்களை எந்த வகையிலும் சகித்துக் கொள்ள முடியாது என பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றியிருந்தார்.

சில முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்த போதிலும் ஞானசார தேரர் தொடர்பில் ஜனாதிபதி அமைதியையே கடைப்பிடிக்கிறார். இதுவே ஏனைய ஒரு மதத்தைச் சேர்ந்த மதகுரு இன்னொரு மதத்திற்கெதிராக கருத்துத் தெரிவித்தால் நிச்சயம் அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

இதற்குப் பின்னாலுள்ள ரகசியங்கள் என்ன?

★ ஞானசார தேரரை யாரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லையா? அல்லது அவர் விளம்பரத்தை மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கிறாரா?

★ அவருக்குப் பின்னால் வெளிநாட்டு சக்திகள் இருக்கின்றனவா?

★ அவருக்குபின்னால் பலம் மிக்க அரசியல்வாதிகள் இருக்கின்றனரா?

★ இந்த அரசாங்கமும் முன்னைய அரசாங்கத்தைப் போன்று மக்களை திசை திருப்புவதற்காக இத்தகைய பிரச்சினைகளை உருவாக்கி செயற்படுகின்றதா?

எவ்வாறு இருந்தாலும் இந்த நாட்டில் வாழக் கூடிய பெரும்பான்மையான பௌத்தர்கள் ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள், உயர் நிலையிலுள்ள பௌத்த பிக்குகள் கூட முஸ்லிம்களுக் கெதிரான ஞானசார தேரரின் நடவடிக்கைகளை வன்மையாக கண்டித்திருக்கின்றனர். என்றாலும் துரதிஷ்டவசமாக ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் மௌனம் காப்பது வெட்கக்கேடான விடயமாகும்.

இறுதியாக முஸ்லிம்களின் புனித மாதமான ரமழான் மாதத்தில் ஞானசார தேரர் எங்களது தூதர் (ஸல்) அவர்கள் மீதும் அல்லாஹ்வின் மீதும் சில விரும்பத்தகாத அவதூறுகளை கூறியிருந்தார். பௌத்தம், இஸ்லாம் ஆகிய இரண்டு மதங்களுமே 'கர்மா' என்ற கோட்பாட்டில் நம்பிக்கை வைக்கின்றன. ''நீ எதைச் செய்தாயோ அதற்கான பிரதி பலனை பெற்றுக்கொள்வாய்''. காலம் தான் பதில் சொல்ல வேண்டும்!

ஸாக்கிர் நாயக் விவகாரம்



முதலும் அல்ல...
அதுவே முடிவும் அல்ல...

- முஹம்மது ராஜி

கழுத்தை நெறிக்க களம் கொடுத்தன.

ஆப்கானிய தாலிபான்கள் மற்றும் அல் கைதா போராட்ட அமைப்புகளை அழிக்க பாகிஸ்தான் இடம் கொடுத்தது. பின்னர் கைசேதப்பட்டது. காலம் கடந்த பின் தவறுகளை உணர்ந்தது.

எகிப்தில் அரபு வசந்தம் என்ற சகோதரத்துவ இயக்கத்தின் புரட்சியை கவிழ்க்க பிண்ணனி வகித்த பெருமை சவூதி அரேபிய கூட்டணியையே சாரும்.

சிரியாவில் வெடித்துள்ள முக்கியமான புரட்சியையும் போராட்டங்களையும் நசுக்க தனது விமான தளங்களை பயன்படுத்த அமெரிக்காவுக்கும், ஏனைய நாடுகளுக்கும் இடம்கொடுத்த பின் தவறுகளுக்கு வருந்தும் நிலைக்கு துருக்கியும் இப்போது தள்ளப்பட்டுள்ளது.

இது நாடுகளுக்கு மட்டுமல்ல தனிப்பட்ட நபர்களுக்கும் பொருந்தும்.

சர்வதேச புகழ் பெற்ற நரம்பியல் நிபுணரான ஆபியா சித்திக்கீயை கைது செய்ய பூரண ஒத்துழைப்பு அளித்த பின் கைசேதப்பட்டது பாகிஸ்தானிய அப்போதைய அரசு, வரலாற்றில் முஸ்லிம் வேஷம் போட்ட முனாபிக் அரசு ஒன்று உம்மாவுக்கு இழைத்த மிகப்பெரும் துரோகங்களில் ஒன்றாக இது இடம் பெறுகிறது.

எகிப்தில் ஜனநாயக ரீதியாக தெளிவான இஃவானிய இயக்கத்தின் முஹம்மது முர்ஸியை சிறையில் அடைக்க நேரடி ஆதரவும், நிதி உதவியும் சவூதி அரேபியா வின் மன்னர் ஆட்சி வழங்கி இருந்தது. அரபு ரியால்களுடனும், தீனார்களுடனும் இஸ்ரேலும், மேற்கு நாடுகளும் எகிப்திய இராணுவத்தை வைத்து இதை கட்சிதமாக நிறைவேற்றியிருந்தன.

இப்போது பிரபல மார்க்க [illegible] ஸாக்கிர் நாயக் அவர்களை [illegible]

ஒரு முஸ்லிமை அழிக்க வேண்டுமானால் இன்னொரு முஸ்லிமின் உதவி இல்லாமல் அழித்ததாக வரலாறுகள் இல்லை.

இதில் முஸ்லிம்கள் என்ற போர்வைக்குள் வாழ்ந்த, வாழ்ந்து வருகிற முனாஃபிக்குகளுக்கு முக்கிய பங்கு உண்டு.

நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் முஸ்லிம்கள் என்ற பேரில் வாழ்ந்த முனாஃபிக்குகள் பற்றி ஏராளமான குர்ஆன் வசனங்களை அல்லாஹ் இறக்கி வைத்துள்ளான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பல ஹதீஸ்கள் முனாஃபிக்குகளை பற்றி கூறப்பட்டுள்ளன.

சம காலத்தில் கூட அரசாங்கங்கள் என்ற முகமூடிக்குள் நவீன முனாஃபிக்குக்கள் மறைந்துள்ளதை சமீபத்தில் நடந்து வரும் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

உதுமானிய கிலாஃபாவை நிர்மூலமாக்க அரேபிய பகுதிகளில் உள்ள செல்வாக்கு மிக்க சில கோத்திரங்கள் மேற்கு நாடுகளால் பயன்படுத்தப்பட்டன.

ஈராக் யுத்தத்தின்போது சவூதி அரேபியா மற்றும் அனேக அரபு நாடுகள் சொந்த சகோதரர்களின்

இந்திய அரசுக்கு ஆதாரம் கொடுத்துள்ளது முஸ்லிம் வேஷம் போட்டுள்ள பங்களாதேச முனாபிக் அரசு.

உலகம் முழுவதும் மக்களை படை படையாக இஸ்லாத்துக்கு அழைப்பு விடுத்து, அதில் பெரும் வெற்றியும் கண்டு வருகிற அவரின் Peace TV சனலையும் பங்களாதேச அரசு தடைசெய்துள்ளது. ஐக்கிய இராச்சியத்துக்கு வருவதற்கு சாகிர் நாயக்குக்கு தடைவிதிக்கப்பட்டபோது கூட Peace TV சனலுக்கு இன்றுவரை தடை விதிக்கப்படவில்லை.

இப்போது 'ஷெய்க்கா தஸ்லீமா நஷ்ரீன்' இஸ்லாம் பற்றி தொலைக் காட்சி அலைவரிசைகளில் வியாக்கியானம் அளிக்கும் நிலைக்கு பங்களா தேசம் கீழ்த்தரமாக ஆகிவிட்டது.

வழி மேல் விழி வைத்துக் கொண்டு தருணம் பார்த்துக் கொண்டு இருந்த மோடியின் அரசுக்கும், வேசைத்தனமான இந்திய ஊடகங்களுக்கும் பங்களாதேச குண்டு வெடிப்பு ஒரு வரப்பிரசாதமாக ஆகி விட்டது. குண்டு வெடிப்பு விவகாரத்தில் லாஜிக்கே இல்லாமல் ஸாக்கிர் நாயக் மீது கற்கள் வீசப்படுகின் றன. உண்மைக்கு எதிரான யுத்தம் உலக இறுதி வரை தொடரும் என்ற அல்லாஹ் வின் வாக்கு பொய்யாக்கப்படப் போவதில்லை.

ஸாக்கிர் நாயக் போன்ற மார்க்க அறிஞர்கள் கைதுசெய்யப்படலாம்; கருத்து சுதந்திரம் பறிக்கப்படலாம்; சிறையில் அடைக்கப்படலாம்; ஏன் மரண தண்டனை கூட விதிக்கப்படலாம்.

ஆனால் உம்மா ஒன்றுபடும் வரை, நமக்குள்ளே இருந்து கொண்டு நம்மையே வேரறுக்கும் முனாஃபிக்குகளை அடையாளம் [illegible]

உண்மையை உண்மையாக உச்சரிக்கும் இது போன்ற மார்க்க அறிஞர்களின் கைதுகள், சித்திரவதைகள், சிறைச்சாலைகள் முதலும் அல்ல முடிவும் அல்ல.

பிரித்தாளும் நரிகளின் சூழ்ச்சி, முஸ்லிம்களின் உறுதியை தளர்த்தி வருவதுடன் மன்னிப்பு கேட்கும் சமூகமாக நம்மை இப்போது மாற்றியும் விட்டது.ஆளுமை அற்ற தலைவர்களை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது இஸ்லாமிய சமூகம்.

'பயங்கரவாதம்' எப்போது 'இஸ்லாமிய நவீனவாதத்தின்' உதவியோடு முறியடிக்கப்படுகிறதோ அதன் பின்னர் அதே 'இஸ்லாமிய நவீனவாதத்துக்கு' எதிராக எதிரிகளின் துப்பாக்கிகள் நீட்டப்படும்.

காலம் கடக்க முன்னர் தேசியவாதம், பிரதேசவாதம், ஜமாஅத் பிரிவினை ஆகியவற்றால் நம்மை கூறு படுத்துவதை தவிர்த்து, நமக்குள் உள்ள பிரிவினைகளைக் களைந்து, முனாஃபிக்குகளை அடையாளம் கண்டு, நம்மக்குள் ஒன்று படாவிட்டால், நமது அடையாளங்களை தேட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

சட்டத்திற்கு முன்... (6ம் பக்கத் தொடர்)

'இஸ்லாமிய சட்டம்' என பெயரளவில் வைத்திருக்கப் போகிறோமா என்ற கேள்விக்கு முஸ்லிம் சமூகம் தமக்குள்ளால் விடை தேட வேண்டியிருக்கின்றது.

குறிப்பாக இலங்கையிலுள்ள முஸ்லிம் இளம் சந்ததியினர் கட்டாயமாக சமத்துவம் என்ற சிந்தனையை ஏற்றுக்கொள்வதோடு எமது உரிமைகளோடு தொடர்புபட்ட சில முக்கியமான கேள்விகளுக்கு தீர்வு காண கலந்துரையாடல்களையும் மேற்கொள்ள வேண்டும்.

- முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்ட சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் சக்திகள் யார்?
- இவர்கள் இலங்கை முஸ்லிம்களின் அனைத்து வகையான நடைமுறைகள் மற்றும் பிரச்சினைகளை கவனத்திற் கொள்கின்றார்களா?
- மிக முக்கியமாக, அவர்கள் உண்மையாகவே முஸ்லிம் பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் மிகக் கூடிய கரிசனை செலுத்துகிறார்களா அல்லது மத உரிமைகள் அல்லது ஆண்களின் சிறப்புரிமை என்ற பெயர்களில் சட்டத்தைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளைத் தேடுகிறார்களா?

இன்னும் சில மாதங்களில் இலங்கையில் முஸ்லிம்களின் திருமணத்தோடு தொடர்பான அத்தனை விவகாரங்களும் முடிவுக்குக் கொண்டுவரப்படும். முஸ்லிம் சமூகம் வெறுமனே முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தை சீர்திருத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாமல், அதற்கும் அப்பால் முஸ்லிம் பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சம அளவிலான பாகுபாடற்ற சட்ட ரீதியான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குரிய அனைத்து வழிமுறைகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

எனவே, இது சமூகத்திற்கு எந்த வகையிலும் பிரயோசனமற்ற பண்டைய நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதா? அல்லது சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நீதியைப் பெற்றுத் தரக்கூடிய ஒரு சட்டத்தைத் தெரிவு செய்வதா? என்பதைத் தீர்மானிக்கும் நேரமாகக் காணப்படுகின்றது.

உண்மையில் மத, கலாசார அடையாளத்தை நேசிக்கின்ற அத்தனை மனிதர்களின் குடும்ப வாழ்வுக்குப் பின்னாலும் நீதியும் சமத்துவமும் நேர்மையும் உருவாக்கப்பட வேண்டுமென்ற உணர்வு ஆழப் பதிந்திருக்கின்றது.

நன்றி: சிலோன் டுடே
தமிழில்: மிப்றாஹ் முஸ்தபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீன் நிலமும் சமூகமும்

அறபு மூலம் : கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ்

தமிழில்: யூ.கே.றமீஸ் (விரிவுரையாளர், பாதிஹ்.)

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியில் போக்குவரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.

பலஸ்தீன் யாருடையது?
வரலாற்று வாதங்கள் தொடர்...

பலஸ்தீன் தம்முடையது என்பதை நிரூபிக்க இருவகை கருத்துகளை யூதர்கள் உருவாக்கியுள்ளார்கள். ஒன்று மத ரீதியானது. அடுத்தது வரலாற்று அடிப்படையில் அமைந்தது. வரலாற்று ரீதியான 3 வாதங்களுக்கான பதில்களை ஏற்கனவே நோக்கியுள்ளோம். அதன் தொடரை இந்த இதழில் நோக்குவோம்.

4. பலஸ்தீனை பாரசீகர்கள் ஆட்சி செய்தபோது (கி.மு 539-332) இரண்டாம் கோரஷ் சக்கரவர்த்தி , ஈராக்கின் பாபிலோனியாவில் தஞ்சமடைந்திருந்த யூதர்கள் விரும்பினால் மீண்டும் பலஸ்தீனில் குடியமரலாம் என்று அனுமதித்தார். ஆனால், பெரும்பான்மை யூதர்கள் புதிய நாடான ஈராக்கில் தங்கியிருக்க சிறுபான்மையினர் பலஸ்தீனுக்கு வந்தார்கள். பாரசீக ஆட்சியில் குத்ஸ் நகரில் ஒரு சுயாட்சியை முன்னெடுக்க அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். இது சுமார் 20கி.மீ சுற்றுப்பரப்பை கொண்டதாக அமைந்திருந்தது. அதாவது முழு பலஸ்தீனினதும் 4.8% நிலப்பரப்பை கொண்டதாக அது காணப்பட்டது.

கிரேக்க ஹலனியர்கள் பலஸ்தீனை ஆட்சி செய்தபோது (கி.மு 332-63) யூதர்களின் நிலை அவ்வாறே தொடர்ந்து காணப்பட்டது. இக்கால கட்டங்களில் கிரேக்க பதாலிமாக்கள் (கி.மு 302-198) ஆட்சிக்கு வந்தபோது பாரிய சிக்கல்கள் தோன்றவில்லை.

ஆனால், கிரேக்க ஸலூகிய்யூன்கள் (கி.மு 198-63) ஆட்சிக்கு வந்த போது கிரேக்க கடவுள்களை வணங்குமாறு நிர்ப்பந்தித்தனர். இதற்கு எதிராக யூதர்கள் கிளர்ந்து எழுந்தபோது மதத்தை கடைப்பிடிக்க அனுமதித்தனர். சுமாராக 164 வருடங்கள் சுயாட்சியை நிறுவியிருந்தார்கள்.

இவ்வாட்சி சில காலங்களில் ஒடுங்கி காணப்பட்டது. சிலபோது விரிவடைந்தது. சிலபோது அவர்களுக்கு கூடுதல் சுதந்திரம் கிடைத்தது. சிலபோது சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. எனினும் அவர்கள் பெரிய சக்தியின் செல்வாக்குக்கு உட்பட்டவர்களாகவே காணப்பட்டார்கள். பூரண அரசியல் சுதந்திரம் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

எனினும் அவர்களது தலைவர் அல் கிஸின்தர் ஜான்யூஸ் (கி.மு 103-76) காலத்தில் ஒரு மறுமலர்ச்சி தோன்றி சுயாட்சி எல்லைகள் விசாலித்தன. கி.மு 63 களில் பலஸ்தீனை கைப்பற்றிய ரோமானியர்கள் யூத சுயாட்சியை மாற்றியமைத்து விட்டார்கள். இது கி.பி 6 வரை தொடர்ந்தது. குத்ஸ் நகரத்தையும் பலஸ்தீனின் ஏனைய பகுதிகளையும் நேரடியாக ஆட்சி செய்ய தொடங்கினார்கள். கி.பி 66-70 களில் இதற்கு எதிராக கிளர்ந்தெழுந்த யூதர்கள் கடுமையாக அடக்கப்பட்டார்கள். அவர்களது ஹைகலையும், குத்ஸ் நகரத்தையும் தரைமட்டமாக்கினார்கள். இதே போன்றதொரு அடக்குமுறைக்கு யூதர்கள் கி.பி 132-135 இலும் உட்பட்டார்கள். குத்ஸ் நகரை சிதைத்து அதனை விவசாய பூமியாய மாற்றி அவ்விடத்தை உழுதார்கள். யூதர்கள் அங்கு பிரவேசிப்பதைகூட தடுத்து விட்டார்கள். அங்கு வாழும் உரிமையும் மறுக்கப்பட்டது. அங்கு கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். யூத வம்சாவளியை சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கும் கூட அவ்வுரிமையை வழங்க மறுக்கப்பட்டது. ''ஓர் சிலீம்'' என்று அழைக்கப்பட்ட குத்ஸ் நகரில் ஈலியா கெபிடோலீனா என்று அழைத்தார்கள். இதுவே காரணமாகும். அதன் பின்னர் ஈலியா என்று அழைக்கப்பட இதுவே காரணமாகும். இதுவே ரோமானிய பேரரசின் முதற் பெயராகும். இந்த யூதத்தடை சுமார் 200 வருடங்கள் நீடித்தது. (அல்-மவ்ஸூஆ அல் பலஸ்தீனிய்யா பாகம் 1 பக்கங்கள் 37,238 / பாகம் 3 பக்கம் 184-186/271-281 / பாகம் 4 பக்கம் 174)

யூதர்களின் இவ்வாட்சி 4.8%நிலத்துடன் தொடர்புபட்ட ஒரு குறுநில ஆட்சி மாத்திரமே. 27வருடங்கள் புத்தெழுச்சியுடன் இருந்தபோதும் ரோமானிய கிறிஸ்தவர்கள் அவ்வாட்சியை நீக்கி விட்டார்கள். குத்ஸ் நகரைக்கூட அழித்து விட்டார்கள். யூத பிரசன்னத்தைக்கூட அங்கீகரிக்கவில்லை. இதனை செய்தது முஸ்லிம்களல்ல. இதற்காக முஸ்லிம்களை பழிவாங்குவது எவ்வகையில் நியாயமாக அமைய முடியும்.

பாலைவனச் சிங்கம்

(சுலைமான் ஹாதிர்)

வரலாற்று நவீனம் — அங்கம் - 11 — ஹமதானி

நீதியின் முன்னால்...

إِنَّ مَا فَعَلَهُ سُلَيْمَانُ خَاطِرُ هُوَ الفِعْلُ الَّذِي يَجِبُ أَنْ يَقْدِمَ عَلَيْهِ كُلُّ مِصْرِيٍّ وَعَرَبِيٍّ ضِدَّ الصَّهَايِنَةِ

ஸியோனிஸ்டுகளுக்கு எதிராக ஒவ்வொரு எகிப்து நாட்டவரும், அரபியும் செய்ய முன்வரவேண்டிய செயலைத்தான் சுலைமான் ஹாதிர் செய்தார். - **உமருத் தில்மஸானி (ரஹ்)**

''காலைக் காகங்களின்
உற்சாகக் கரைவில்
காலம் துள்ளி நடைபயிலும்.!
ஆதவன் ஒளி கண்டு
இருள் தன் கண்கள் மூடும்..!
சேவல் கூட என் செவியில் தேனிசை
சொட்டும்..!''

இது காலைப் பொழுதை இரசித்த ஒரு கவிஞனின் கவிதை அந்தக் கவிதையை நிஜமாக்குவது போல அலெக்சாந்திரியா நகரிலும் வைகறை புலர்ந்தது. நகரின் ராஜபாட்டையில் மக்கள் விரைந்து சென்று கொண்டிருந்தனர். இடையிடையே ராஜபாட்டையோடு சங்கமிக்கும் ராஸ்தாக்களிலும் மக்கள் வெள்ளம் திரளாய் வந்து கொண்டிருந்தது. அவர்கள் எல்லோரினது நடையிலும் அவசரம், பார்வையிலும் அவசரம், பிறருடன் உரையாடுவதிலும் அவசரம், எல்லாவற்றிலும் அவசரம்.. அவசரம்.. அவசரம்...

சுருங்கிவிட்ட நாகரீக உலகின் நவமனிதர்கள் என்பதாலா அவர்களில் அந்த அவசரம்! அதுவாகவும் இருக்கலாம்! ஆனால், அதற்காகவே தான் இத்தனை பேரும் இத்தனை அவசரமாக அந்த ஒரே இடத்தை நோக்கிச் செல்வார்களா.? அன்று நகரத்து மக்கள் அனைவரையும் ஏன்? எகிப்து நாட்டின் பெருந்திரளான ஜனங்களையும், அலெக்சாந்திரியா நகரத்தின் கோடியில் அமைந்திருந்த ''ஸுவேஸ்'' இராணுவ நீதி மன்றத்தினை நோக்கி திரள அவசரப்படுத்தியது சுலைமான் ஹாதிரின் வழக்கு விசாரணை அன்று நடைபெறுவதுதான்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏழு இஸ்ரவேலிய உளவாளிகளைக் கொன்ற, சுலைமான் ஹாதிர், ஒரு மன நோயாளி என எகிப்து அரசால் முலாம் பூசப்பட்டு, உலகின் முன்னால் காட்டப் பட்டது. ஆனால், இன்றோ அதே அரசு அந்தப் பைத்தியக்காரனுக்கு(?) இரா ணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்து கிறது. என்ன விசித்திரமான நாடகம்.! இந்த வேடிக்கையைப் பார்க்கத்தான் போலும் இராணுவ நீதிமன்றத்தைச் சூழ இத்தனை மக்கள் வெள்ளம். ஜன நெருக்கடி.

''ஸுவேஸ்'' இராணுவ நீதிமன்றம் மிகவும் பிரபல்யமானது. எகிப்திய அரசு பாரிய குற்றவாளிகளாகக் கருதுவோரை இங்குதான் விசாரிக்கும். எனவேதான் வழக்கு நடைபெறும் தினங்களில் மக்கள் கட்டிடத்தில் திரளாய் வந்து குவிவர். வழமையை விட இன்று மக்கள் மன்றம் நிரம்பி வழிவது அவர்களது நெஞ்சம் கவர்ந்த சுலைமான் ஹாதிர் விசாரிக்கப்படுவதாகும். நீதிமன்றத்தினைச் சுற்றி பலமானபாதுகாப்புபோடப்பட்டிருந்தது. விசாரணையைப் பார்க்க வரும் ஒவ்வொருவரும் கடுமையாக சோதனை செய்யப்பட்டே அனுமதிக்கப்பட்டனர். சுலைமான் ஹாதிரை சிறையிலிருந்து நீதிமன்றத்திற்குக் கொண்டு வரும் ராஜபாட்டை முழுவதும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

சில நாழிகைகளுக்குள் நீதிமன்றத்தின் முன்னே பல ஜீப் வண்டிகள் வந்து நின்றன. அவற்றிலிருந்து இராணுவத்தினர் பலர் குதித்து இறங்கினர். மனிதக் களையற்ற வரண்ட பாலை போன்றிருந்த அவர்களின் முகங்களும் அவர்கள் அணிந்திருந்த காக்கி நிற உடைகளும் பார்ப்போரை இவர்கள் மனிதர்களா? அல்லது மனித உருவில் வந்த பைசாசங்களா, பூதக் கணங்களா? என்று நினைக்கத் தூண்டியது.

மத்தியிலே வந்த ஒரு ஜீப்பிலிருந்து சுலைமான் ஹாதிர் இறங்கினான். அவனது கரங்களில் இரும்புத் தாளை இடப்பட்டிருந்தது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பர். ஆனால் சுலைமானைப் பார்த்தால் ஹஜ்ஜிற்குப் புறப்படும் ஒரு ''ஹாஜ்'' இன் தோற்றத்தில் எவ்வித சலனமோ பிராந்தியோ அற்றவனாக மலர்ந்த முகத்துடன் அதில் நம்பிக்கைகளை வழிய உற்சாகத்துடன் நின்றான். அவனுக்குப் பக்கத்திலே அவனது வக்கீல் ''உம்மாத் சுப்கி'' வந்து நின்றார். பணத்திற்காக பொய்யையும் மையாக்க வாதிடும், மமதை கொண்ட இன்றைய சட்டத்தரணிகளைப் போல் அல்லாது அவர் மிகுந்த பணிவுடனே காணப்பட்டார். அவரின் முகத்திலே முஃமினின் முகத்திலே வீசும் ஒளிச் சுடர் பிரகாசித்தது. அடிக்கடி அவர் தனக்குள்ளாக தஸ்பீஹ் இஸ்திஃபார் செய்து கொண்டார்.

பின்னால் வந்த ஒரு இராணுவ அதிகாரி அவர்களை நீதி மன்றத்தின் வாயில் பக்கம் அழைத்துச் சென்றார். சுலைமான் வக்கீலுடன் சென்று கொண்டிருக்கையில் திடீரென ஒரு கணம் அவ்வாறே நின்றான். முள்வேலிக்குப் பின்னால் அணித்தாயிருந்த மக்கள் மன்றத்திலிருந்து யாரையோ பார்த்துப் புன்னகைத்தான். அந்தப் புன்னகையைப் பெறுவதற்குஅவனது அன்னையைத்தவிர அங்கு வேறுயார்தான் இருக்க முடியும்? தாய் செய்யிதா நமீலாவும் விடை கொடுப்பதுபோல புன்னகைத்தவாறே மிகவும் அடக்கமாக தனது மகனை நோக்கிக் கை அசைத்தாள். பின் சுலைமான் அதிகாரியைத் தொடர்ந்து நீதிமன்றத்தினுள்ளே சென்றான்.

சுலைமான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டான். அவனது வக்கீல் உம்மாத் சுப்கி பக்கத்திலிருந்த பெஞ்சில் தமது தஸ்தாவேஜுகளுடன் அமர்ந்தார். அவனை விசாரிப்பதற்காக மூன்று நீதிபதிகள் அரசால் நியமிக்கப்பட்டிருந்தனர். விசாரணைக்கு முன் ஏலவே சுலைமானிற்கான தீர்ப்பை அரசு அவர்களிடம் கொடுத்திருந்தது.

இந்த விசாரணை நாட்டு மக்களையும் உலகையும் ஏமாற்றுவதற்கான ஒரு செப்படி நாடகமே. இதனால் அந்த மூவரும் விசாரணை நடத்தும் செயலுக்குப் [illegible] படும் பணியை நிறைவேற்றும் ''ரோபோக்கள்'' போல காட்சி தந்தனர். ஆனால், ரோபோக்கள் கூட மனித பணிப்புகளை மீறிய சந்தர்ப்பங்கள் பல. ஆனால் எகிப்திய அரசின் இந்தப் பக்க கோடிகள் அரசின் தீர்ப்பை மறுத்தது சுயமாகத் தீர்ப்பு வழங்குவர் என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றா? நீதிமன்றம் முழுவதும் நிசப்தம் நிலவியது.

தலைமை நீதிபதி, சுலைமானை நோக்கி, ''உமது பெயர்?'' என்றார். அதற்கு சுலைமான், ''சுலைமான் ஹாதிர் இப்னு அப்துல் அஸீஸ்: என்றான். விசாரணை தொடர்ந்தது.

''உமது வயது?''

''இருபத்து ஐந்து''

''இராணுவத்தில் சேர முன்பு என்ன தொழில் செய்தாய்?''

''சட்டக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தேன்.''

தொடர்ந்தும் நீதிபதி கேட்ட கேள்விகளுக்கு எவ்வித தயக்கமுமின்றிப் பதில் கூறினான். அரச தரப்பு வக்கீல் வாக்கு மூலங்களைப் பதிவு செய்து கொண்டு குற்றப் பத்திரிகையை வாசித்தார். இறுதியில் அதனது சுருக்கத்தை இவ்வாறு வாசித்தார்.

''சுலைமான் ஹாதிர் அப்துல் அஸீஸ் எனும் இராணுவத்தில் கடமையாற்றிய இந்நபர் 1986ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி எகிப்தின் கிழக்குப் பகுதியில் அகபாக் குடாப் பகுதியினை அண்மித்திருக்கும் சினாய்ப் பாலைவனத்தில் வைத்து சூரிய ஸ்நானம் செய்து கொண்டிருந்த இஸ்ரவேலிய உல்லாசப் பயணிகளுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். அதன் போது 7 பேர் மாண்டனர். 40பேர் காயமடைந்தனர்.

இந்த வகையில் அந்த நபர் அநீதமாகக் குற்றமற்ற 7 வெளிநாட்டுப் பிரஜைகளைக் கொன்று கொலைக் குற்றம் புரிந்துள்ளார். 40 பேரைக் காயமடையச் செய்து குற்றமற்ற 40பேருக்கு அநீதமிழைத்துள்ளார்.''

அரச தரப்பு வக்கீல் குற்றப் பத்திரிகை என்ற போர்வையில் சுலைமான் மீது கட்டவிழ்த்த அடாத செயல்களை அவன் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தான். சட்டவாதம் புரிவதில் வல்லவரான உம்மாத் சுப்கி வக்கீலின் ஒவ்வொரு கூற்றையும் மிகுந்த அவதானத்துடன் செவிமடுத்தார். பின் சில குறிப்புக்களை எடுத்துக் கொண்டார். குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டு முடிந்தது. பிரதம நீதிபதி சுலைமானை நோக்கி ''வாதி வாசித்த இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி உமது அபிப்பிராயம் என்ன? என வினவினார். சுலைமான் சட்டக் கல்லூரி மாணவன் தான். அவனால் தனியாக நின்று வாக்கு மூலம் அளிக்கலாம். இருப்பினும் மரியாதை உணர்வுடன் தனது 'வக்கீலை நோக்கினான். அவர் சில குறிப்புத்தாள்களுடன் முன்னே வந்தார்.

சுலைமான் ஏழு இஸ்ரேலியர்களையும் கொன்ற பின்னர், வேறு ஒரு ஜீப்பில் வந்த அவர்களது சகாக்கள், இறந்தவர்களின் பிரேதங்களை அந்த ஜீப்பில் ஏற்றி இஸ்ரேலிற்குக் கடத்திச் சென்றனர்.

யூதர்கள் இஸ்ரேலிய மண்ணில் அடக்கப்பட்டால் சுவர்க்கம் செல்வர் என்பது ஸியோனிஸ்ட்டுகளின் நம்பிக்கையும் ஆகும். பிரேதங்களை இஸ்ரேலியர்கள் கடத்திச் சென்றதை சுலைமானின் வக்கீல் உம்மாத் சுப்கி கவனத்தில் கொண்டவராக தமது சட்டவாதத்தை ஆரம்பித்தார். உம்மாத் சுப்கி ''நீதிபதி அவர்களே! அரச தரப்பு வழக்கறிஞரால் சுலைமான் ஏழு இஸ்ரேலியர்களைக் கொன்றதாகக் கூறப்பட்டது. இப்பொழுது நான் அரச தரப்பு வக்கீலிடம் சில கேள்விகளைக் கேட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிப்பீர்களா?

நீதிபதி: ''தாராளமாக வக்கீல் அவர்களே இவரது கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்''

உ.சுப்கி: ''வக்கீல் அவர்களே! ஒருவன் கொலையாளி என்று குற்றம் சாட்டப்படின் கொலை செய்யப்பட்ட ஒருவர் இருக்கத்தானே வேண்டும், அப்படித்தானே?

அ.வக்கீல்: ''ஆம்!''

உ.சுப்கி: ''சரி, சுலைமான் ஹாதிர் கொலைஞன் என்றால் அவ.. கொலை செய்த சடலங்கள் உண்டா.?

அ.வக்கீல்: ''இல்லை. அவற்றை இஸ்ரவேலியர் தங்களது நாட்டிற்கு எடுத்துச் சென்றனர்.''

உ.சுப்கி: '' இந்த வழக்கை அரசு தான் தாக்கல் செய்தது. அப்படியாயின் அரசு சுலைமானைக் கொலைஞன் எனக் குற்றம் சாட்டுவதாயின் அரசிடம் தான் சடலங்கள் இருக்க வேண்டும். அரசிடம் கொலையை நிரூபிக்க கொலை செய்யப்பட்ட சடலங்கள் இல்லாத போது எவ்வாறு கொலை நடந்ததாகவோ குற்றமிழைத்ததாகவோ கூறலாம்?''

வக்கீல் உம்மாத் சுப்கியின் சட்டவாதத்தால் அரச வக்கீலின் முகத்தில் அசடு வழிந்தது. ஒரு கணம் அவர் மௌனியானார். பின்னர் தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு, ''எம்மிடம் கொலை செய்யப்பட்டதற்கான வைத்தியச் சான்றுகள் இருக்கின்றன'' என்றவாறு சில வைத்தியச் சான்றுகளை எடுத்து நீதிபதியிடம் ஒரு பிரதியையும் சட்டத்தரணி உம்மாத் சுப்கியிடம் ஒரு பிரதியையும் கொடுத்தார்.

உ.சுப்கி: இந்த வைத்தியச் சான்றுகளை எங்கிருந்து பெற்றீர்கள்''

அர.வக்கீல்: ''இஸ்ரவேலிய வைத்தியர்கள் எமக்கு அனுப்பியிருந்தனர்''

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியவர்களது சுன்னா பொருளும் முக்கியத்துவமும்

ஒரு சமநிலைப் பார்வை

அஷ்ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

சுன்னா என்ற அறபுப் பதம் மொழியில் வாழ்வு முறை என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அதன் பரிபாஷையைப் பொறுத்தவரையில் இமாம்கள் மத்தியில் வேறுபட்ட பிரயோகங்கள் காணப்படுகின்றன. அந்த வேறுபாடுகள் மிகப் பெரும்பாலும் ஆய்வுக் கண்ணோட்டம் அல்லது ஆய்வுப் பரப்பு வேறுபட்டதன் காரணமாகவே ஏற்பட்டுள்ளன.

மாற்றமாக இமாம்கள் மத்தியிலான கொள்கை ரீதியிலான முரண்பாடுகளாக அவை அடையாளப்படுத்தப்படுவதில்லை. கீழ்வரும் பரிபாஷைப் பிரயோகங்களில் இருந்து இக்கருத்தைப் புரிந்து கொள்ளலாம்.

1. நபியவர்களது வாழ்க்கை வரலாறு என்ற கருத்தில் சுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

இது நபியவர்களது பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்து நிகழ்வுகளையும் குறிக்கின்றது. நுபுவ்வத்திற்கு முன்னைய நிகழ்வுகள் பின்னைய நிகழ்வுகள், நபியவர்களது பிறப்புக் காலப்பகுதியில் அறபு மக்களது வாழ்க்கைச் சூழல் போன்ற பல்வேறு விடயங்கள் இதில் உள்ளடக்கப்படுகிறது.

சுன்னா என்ற பதத்தை இந்தக் கருத்தில் ஹதீஸ் துறை அறிஞர்கள் அதிகம் பயன்படுத்தினார்கள். இங்கு நபியவர்களது வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை ஆதாரபூர்வமான வடிவில் கோர்வை செய்வதே இவர்களது நோக்கமாகக் காணப்பட்டிருக்கிறது.

2. ஷரீஆ அல்லது தீன் என்ற கருத்தில் சுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

இது மிகப் பெரும்பாலும் பித்அத் என்ற சொல்லுக்கான எதிர்ப்பதமாகவே கையாளப்படுகிறது. அதாவது ஒரு விடயம் ஷரீஅத்தில் உள்ளது என்று சொல்ல சுன்னா என்றும் ஷரீஅத்தில் இல்லாதது என்று சொல்ல பித்அத் என்றும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தப் பிரயோகம் அகீதாசார் அறிஞர்களிடத்திலும் "வுஃஆல்" எனப்படும், சமூகப் பேச்சாளர்களிடத்திலும் அதிகம் காணப்பட்டது. இவர்கள் சுன்னா என்பதன் மூலம் நபியவர்களது வாழ்க்கை நிகழ்வுகளை விடவும் இஸ்லாமிய வாழ்வு முறையையே நாடினார்கள்.

இஸ்லாமிய வாழ்வு முறை என்பது அல்-குர்ஆன், நபியவர்களது வாழ்வு, ஸஹாபாக்களது வாழ்வு போன்ற அனைத்திலிருந்தும் பெறப்படும் ஒரு வாழ்வு முறையாகும். இதனால்தான் சுன்னாவின் எதிர்ப்பதமான பித்அத்தை மறுதலிக்கும்போது அது அல்லாஹு தஆலா கூறவுமில்லை. நபியவர்களோ ஸஹாபாக்களோ செய்யவுமில்லை என்பதன் அடிப்படையில் மறுக்கப்படுகிறது.

3. இஸ்லாத்தின் இரண்டாவது சட்ட மூலாதாரம் என்ற கருத்தில் சுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

இந்தப் பிரயோகம் அதிகமாக "உஸூலிய்யூன்" எனப்படும் சட்டக் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் காணப்பட்டது. ஏற்கனவே குறிப்பிட்ட ஹதீஸ் கலை அறிஞர்களது பிரயோகத்தை விடவும் இது சற்று வித்தியாசமானது.

இங்கு நபியவர்களது வாழ்க்கை நிகழ்வுகளில், இன்றைய எமது வாழ்வுக்கான மூலாதாரமாக அமையக் கூடியவை எவை? அல்லது நபியவர்கள் 'முபல்லிக்' எனும் அல்லாஹ்விடமிருந்து மனிதர்களுக்கு எத்தி வைப்பவர் என்ற வகையில் அமைந்த அவரது வாழ்வு எது? என்ற பரப்பு மாத்திரமே இங்கு நாடப்படுகிறது.

அந்தவகையில் நபியவர்களது வாழ்வில் அவர் ஒரு மனிதர் என்ற வகையிலோ அல்லது அறபுக் கலாச்சாரத்தின் அடிப்படையிலோ தொழிற்பட்ட சந்தர்ப்பங்கள், நுபுவ்வத்திற்கு முன்னைய அவரது வாழ்வு போன்றன இங்கு சுன்னா என்ற வட்டத்தினுள் அடங்க மாட்டாது.

இவை தவிர நபியவர்களது வார்த்தைகள், செயற்பாடுகள், செய்ய நினைத்தவை, அங்கீகாரங்கள், நற்குணங்கள் என்பவை மூலாதாரம் என்ற கருத்தில் சுன்னா என வழங்கப்படுகிறது.

4. ஒரு செயலை செய்தால் நன்மை கிடைக்கும், செய்யாத போதும் குற்றமில்லை என்ற கருத்தில் சுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

வாஜிப் என்ற சொல் குறிக்கும் கருத்தை விடவும் சற்றுக் குறைந்த கருத்தைத் தருகிறது. அதாவது வாஜிப் என்பது கட்டாயமாக நிறைவேற்றுவதற்குரிய ஒன்று, அதனை செய்தால் நன்மை கிடைக்கும். செய்யாதபோது பாவம் கிடைக்கும். ஆனால் சுன்னா என்பது கட்டாயமாக நிறைவேற்றுவதற்குரியதல்ல. செய்தால் நன்மை கிடைக்கும். செய்யாதபோது குற்றமில்லை.

உண்மையில் இது மனித செயல்களுக்கு வழங்கப்படும் சட்ட ரீதியான நிலைப்பாட்டின் வகை அல்லது தரம் என்ன? என்பதைக் குறிக்கின்றது. இமாம்கள் இதே கருத்தை மன்தூப் எனும் சொல்லின் மூலமும் விளங்கப் படுத்தியிருக்கிறார்கள்.

பொதுவாக 'புகஹாக்கள்' எனப்படும் சட்டத்துறை அறிஞர்கள் மத்தியில் இப்பிரயோகம் காணப்பட்டது. சுன்னா என்ற சொல்லின் மொழிக் கருத்தை விட்டும் சற்று வித்தியாசமான ஒன்றாகவே இந்தப் பிரயோகம் காணப்படுகிறது.

இந்தப் பிரயோக வேறுபாடுகளை விளங்கிக் கொள்வதன் முக்கியத்துவம் என்ன? என்ற ஒரு கேள்வி இங்கு தோன்ற முடியும். உண்மையில் சமகால தஃவா களத்தில் இந்தப் பிரயோக வேறுபாடுகளைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் இன்று களத்தில் செயற்படுகின்ற பல்வேறு தஃவா முகாம்களிடையே சுன்னா குறித்துக் காணப்படுகின்ற வேறுபட்ட நிலைப்பாடுகள் மிகப் பெரும்பாலும் இந்தப் பிரயோக வேறுபாட்டின் காரணமாகத் தோன்றியவைகளாகும். எனவே தஃவாக் களத்தில் பரஸ்பரப் புரிந்துணர்வையும் நெருக்கத்தையும் ஏற்படுத்துவதில் இந்தப் பரந்த புரிதல் துணை செய்ய முடியும்.

இதனை இன்னும் சற்றுத் தெளிவாகக் கூறினால், ஒருவர் இது சுன்னா என்கின்ற பொழுது, அவர் அதனை எந்தப் புரிதலின் அடிப்படையில் கூறுகிறார் என்பதை இங்கு நாம் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சிலர், இது சுன்னாதானே சமூக ஒற்றுமைக்காக நாம் அதனை விட்டுக் கொடுக்கலாமே அதில் என்ன தவறு இருக்கின்றது? என்று சொல்கின்ற பொழுது, மற்றும் சிலரால் அந்த வார்த்தைகளைச் சீரணித்துக் கொள்ளவே இயலாமல் இருக்கிறது.

இங்கு தோன்றும் முரண்பாடு உண்மையில் சுன்னா என்ற பதத்தின் மூலம் இரு தரப்பினரும் எதனை நாடுகிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டே எழுகின்றது. மாற்றமாக ஒரு தரப்பினர் சுன்னாவுக்கு மதிப்பளிக்கிறார்கள் மற்ற தரப்பினர் மதிப்பளிக்கவில்லை என்பதனால் இது ஏற்படவில்லை, அல்லது ஒரு தரப்பினர் கடும் போக்கு கொண்டவர்களாக இருக்கின்றனர் மற்ற தரப்பினர் நெகிழ்வுப் போக்குக் கொண்டவர்களாக இருக்கின்றனர் என்பதனாலும் இது ஏற்படவில்லை.

அவ்வாறன்று முதல் தரப்பினர் சுன்னா என்பதன் மூலம் செய்தால் நன்மை செய்யாவிட்டால் குற்றமில்லை என்ற சட்டத் தரத்தில் அதனைப் பயன்படுத்துவதனால், ஒரு வாஜிபுக்காக சுன்னாவை விட்டுக் கொடுப்பதில் தவறில்லை என்கின்றனர். இங்கு அவர்கள் சுன்னாவினால் அதனை விடவும் முக்கியமான ஒன்று பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்று நினைக்கிறார்கள்.

இரண்டாம் தரப்பினர் சுன்னா என்பதை தீன் என்ற கருத்தில் பயன்படுத்துவதனால், தீனில் ஒரு விடயம் மறுக்கப்படுகிறது என்ற கவலையுடனேயே அவர்கள் இவ்விடயத்தை நோக்குகின்றனர். எனவே இங்கு இரு தரப்பினரதும் உளநிலையை யாரும் குறை காண முடியாது. இரு தருப்பினரும் தீனைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே செயற்படுகின்றனர்.

இங்கு ஒரு விடயம் வேறுபட்ட கோணங்களில் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது அவ்வளவுதான் வித்தியாசம். இதனை இரு தரப்பினரும் சாவகாசமாக அமர்ந்து கருத்துப் பரிமாறுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்கின்ற பொழுது மிக இலகுவாக தீர்த்துக் கொள்ள முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் நபியவர்களது சுன்னா என்றால் என்ன? என்பதை விளங்கிக் கொள்வதற்கு நாம் எல்லோரும் சில பொது அடிப்படைகள் மீது உடன்பட வேண்டியிருக்கிறது. அவை:

1. நபியவர்களது சுன்னா என்பது அல்குர்ஆன் அல்லாத வேறு ஒன்றையே குறிக்கிறது.

அதாவது சுன்னா என்பது வேறு அல்குர்ஆன் என்பது வேறு. நபியவர்களது கீழ்வரும் ஹதீஸ் இந்தக் கருத்தைக் குறிக்கிறது. "அமானிதம் மனிதர்களின் உள்ளங்களில் வேறூன்றியிருக்கிறது. அடுத்து அவர்களுக்கு அல்குர்ஆனைக் கற்றுக் கொடுங்கள். அதன் பின்னர் சுன்னாவைக் கற்றுக் கொடுங்கள்" (புஹாரி, முஸ்லிம்)

2. நபியவர்களது சுன்னா என்பது ஸஹாபாக்களது வாழ்வு அல்லாத வேறு ஒன்றையே குறிக்கிறது.

ஸஹாபாக்களது வாழ்வுக்கும் சுன்னா என்ற சொற்பிரயோகம் பயன்படுத்தப்படுகிறது. எனினும், இங்கு நபியவர்களது சுன்னா என்பது அவரது வாழ்வை மாத்திரம் குறிக்கும் ஒரு சொல்லாகும். ஹதீஸ்களில் சுன்னா என்ற சொல் பயன்படுத்தப்படும்போது நபியவர்களது சுன்னா வேறாகவும் ஸஹாபாக்களது சுன்னா வேறாகவும் குறிப்பிடப்படுவதை அவதானிக்கலாம்.

"... நீங்கள் எனது சுன்னாவையும் எனக்குப் பின்னர் வரும் நல்லாட்சியாளர்களின் சுன்னாவையும் கடைபிடியுங்கள்..." [illegible]

3. நபியவர்களது சுன்னா என்பது நாம் கட்டாயமாக வாழ்வு முறையாகக் கொள்வதற்குரிய ஒன்று.

இக்கருத்தை பல்வேறு ஹதீஸ்கள் வலியுறுத்துகின்றன. "...நான் உங்கள் மத்தியில் விட்டுச் செல்லும் விடயத்தை நீங்கள் வாழ்வாகக் கொண்டால் ஒரு போதும் வழிதவற மாட்டீர்கள். அது அல்லாஹ்வின் வேதமும், அவனது தூதரின் சுன்னாவும்..." என்றார்கள். (ஹாகிம்)

மேற்கூறப்பட்ட அடிப்படைகளின் மீது நின்று பார்க்கும்போது, சுன்னா என்பது அல்லாஹ்வின் மார்க்கத்தை விளங்கி, முழு வாழ்விலும் அதனை கோட்பாட்டு வடிவிலும் சரி செயற்பாட்டு வடிவிலும் சரி அமுல்படுத்திக் காட்டிய நபியவர்களது வாழ்வு முறை எனலாம்.

மற்றொரு வகையில் கூறினால் அல்குர்ஆனுக்கு செயல்வடிவம் கொடுத்தது நபியவர்களது வாழ்வு எனலாம். அல்குர்ஆனுக்கு அடுத்தபடியாக இந்த வாழ்வு முறையைப் பின்பற்றுவது எங்கள் மீது கடமையாகும். இந்த வாழ்வு முறையைப் புறக்கணிப்பதையே நபியவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கடுமையாக எச்சரித்துள்ளார்கள்.

"எனது சுன்னாவைப் புறக்கணிப்பவன் என்னைச் சார்ந்தவர் அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார்கள். (புஹாரி)

சுன்னா என்ற சொல்லுக்கான இந்த வரைவிலக்கணம் நபியவர்களது வாழ்வை மொத்தமான கண்ணோட்டத்தில் நோக்கியிருக்கிறது; பகுதி பகுதியாக நோக்கவில்லை.

அதாவது நபியவர்களது ஒவ்வொரு செயலையும் தனித்தனியாக எடுத்து அதனை சுன்னா என்றும் அல்லது சுன்னா அல்ல என்றும் நோக்குவதைத் தவிர்த்து, சுன்னா என்பது நபியவர்களது மொத்த வாழ்வு முறை என்கிறது.

இந்த மொத்தப் பார்வைக்குள்ளே மேற்சொல்லப்பட்ட எல்லாக் கருத்துக்களும் உள்ளடங்கியிருக்கின்றன. அதாவது, சுன்னாவை இவ்வாறு மொத்தமாகப் பார்க்கின்ற பொழுதே அதனை நாம் 'தீன்' என்ற கருத்தில் பயன்படுத்த முடியும். மாற்றமாக தனித்தனிச் செயற்பாடுகளாகப் பார்க்கின்ற பொழுது அதற்கு 'தீன்' என்ற கருத்து வழங்கப்படுவது பொருத்தமற்றது.

அதே போல் சட்ட மூலாதாரம் என்பதும் மொத்தமான பார்வையின் அடிப்படையிலேயே எழுகிறது. சில சமயங்களில் சில தனித்த செயற்பாடுகள் சட்டமூலாதாரமாக அமையாத நிலைகளும் காணப்படுகின்றன. அது போல் நபியவர்களது வாழ்வு முறை என்பதில் அவர்களது வாழ்க்கை வரலாறும் உள்ளடங்குகிறது. ஆனால் நுபுவ்வதிற்கு முன்னைய வாழ்க்கை வரலாறு நபியவர்களது வாழ்வு முறையைப் பிரதிபலிக்கமாட்டாது.

அதே போல் செய்தால் நன்மை செய்யாவிட்டால் குற்றமில்லை என்ற பரப்பை மாத்திரமன்றி, கட்டாயமாக செய்ய வேண்டிய வாஜிப், கட்டாயமாக தவிர்ந்து கொள்ள வேண்டிய ஹராம், செய்தாலும் பரவாயில்லை செய்யா விட்டாலும் பரவாயில்லை எனும் முபாஹ், செய்வதை விடவும் செய்யாமல் இருப்பதே ஏற்றமானது எனும் மக்ரூஹ் போன்ற அனைத்து சட்டத் தரங்களையும் நபியவர்களது வாழ்வு முறை எனும் மொத்தக் கண்ணோட்டம் உள்ளடக்கியிருக்கிறது.

சுன்னாவின் முக்கியத்துவம் மேற்குறித்த சுன்னாவிற்கான மொத்த வடிவத்திலேயே அது, எமது வாழ்வில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அதனை கீழ்வரும் கருத்துக்களில் நின்று விளங்கிக் கொள்ளலாம்.

1. சுன்னாவைப் பின்பற்றுதல் என்பது எமது ஈமானுடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகும்.

அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் கிடையாது என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் நாம் சான்று பகர்கின்றோம். இது எமது ஈமானை அத்தாட்சிப்படுத்துகின்ற கலிமா. இதில் பிரதானமான இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று அல்லாஹ்வை ஈமான் கொள்ளுதல். மற்றையது நபியவர்களை ஈமான் கொள்ளுதல்.

நபியவர்களை ஈமான் கொள்ளுதல் என்பது எப்பொழுது முழுமையடைகிறது எனின், அவரது வாழ்வு முறையை முழுத் திருப்தியோடு ஏற்றுப் பின்பற்றுகின்ற பொழுதே ஏற்படுகின்றது என அல்குர்ஆன் கூறுகின்றது.

"உமது இரட்சகன் மீது சத்தியமாக அவர்கள் மத்தியில் தோன்றும் பிணக்குகளின் போது உங்களிடம் தீர்ப்பைக் கேட்டு, தீர்ப்பு குறித்து எந்தக் குறையுணர்வுமின்றி முழுமையாகக் கட்டுப்படாதவரை அவர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள்." (நிஸா - 65)

எனவே, நபியவர்களது வாழ்வு முறையை ஏற்றுப் பின்பற்றுதல் என்பது எமது ஈமானை முழுமைப்படுத்துகின்ற விடயம் என்பதை இங்கு புரிந்து கொள்கிறோம்.

2. சுன்னா என்பது ஒரு வாழ்வியல் மாதிரி.

வாழ்வியல் மாதிரி என்பது என்ன? பொதுவாக மனித வாழ்வில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விதி எந்த ஒன்றையும் அளவீடு செய்வதற்கு ஒரு மாதிரி (Benchmark) காணப்படல் வேண்டும். அந்த மாதிரியை வைத்தே ஏனையவை சரியா? பிழையா? குறைபாடுகள் இருக்கின்றனவா? திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமா? என்பவை தீர்மானிக்கப் படுகின்றன.

இந்த மாதிரி என்பது விதிகள், கோட்பாடுகளாக மாத்திரமன்றி, ஒரு நடைமுறை வடிவமாகவும் காணப்படல் வேண்டும் என்பதும் இங்கு நோக்கத் தக்கது. ஏனெனில், மனித இயல்பில் ஒரு விடயத்தைப் பார்த்துப் பின்பற்றுவது அவனுக்கு இலகுவானது. அந்த வகையில் மனித வாழ்வுக்கான மாதிரி எது எனின், நிச்சயமாக அது நபியவர்களது வாழ்வுதான். தனிமனித வாழ்வாக இருப்பினும், சமூக வாழ்வாக இருப்பினும் இந்த உலகில் சிறந்ததொரு வாழ்வுக்கான மாதிரியாக நபியவர்களது வாழ்வு காணப்படுகிறது.

உலகின் அனைத்து வாழ்க்கைகளையும் அவற்றின் சரிபிழைகளை, குறைநிறைகளை நபியவர்களது வாழ்வை வைத்து அளந்து பார்க்க முடியும். அத்தகைய ஒரு புனிதமிக்க வாழ்வாகவே நாம் நபியவர்களது வாழ்வை காண்கின்றோம். எனவே, உலகின் எந்த சமூகத்திற்கும், எந்தக் காலத்திலும் முன்னுதாரணமாக அமையக்கூடிய வாழ்வியல் மாதிரியாக நபியவர்களது சுன்னா காணப்படுகின்றது.

ஒவ்வொரு தனிமனிதனும் ஒவ்வொரு சமூகமும் தனது வாழ்வுப் பயணத்தை நபியவர்களது வாழ்வை வைத்து சரிபார்த்துக் கொள்ள முடியும்.

3. சுன்னா என்பது தீனுக்கான இரண்டாவது மூலாதாரம்.

மூலாதாரம் என்பது என்ன? ஒரு விடயத்தின் சட்டபூர்வத்தன்மை எதனை அடிப்படையாகக் கொண்டு உறுதிப் படுத்தப்படுகிறது? அல்லது ஒரு விடயம் எதன் மீது எழுந்து நிற்கிறது? என்ற கேள்விக்கான பதிலையே மூலாதாரம் என்று சொல்லலாம்.

அந்தவகையில் இஸ்லாம் எனும் இந்த தீன் இரண்டு (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கானிய பாராளுமன்ற உறுப்பினர் ஷிங்காய் கரோகைல்

ஆப்கான் பெண்களுக்கு சுதந்திரம் மறுக்கும் நாடு என்றே அறியப்பட்டது. ஆனால் சமீபத்திய வரலாற்றில் அங்கு பெண்கள் சமூக, அரசியல் களத்திற்கு வேகமாக நகர்ந்து வருகின்றனர். பாராளுமன்ற அரசியலிலும் அவர்களின் பங்களிப்பு முன்பை விட அதிகரித்து வருகின்றது. ஷிங்காய் அவர்களுள் ஒருவர்.

ஆப்கானில் பெண்கள் கல்வி நிறுவனத்தை ஸ்தாபித்த அவர், தற்போது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றுகின்றார். நீண்டகாலமாக ஆப்கானில் பெண்ணுரிமை செயற்பாட்டாளராகப் பணியாற்றி வருகிறார்.

ஆப்கான் பெண்கள் கல்வி நிலையத்தை ஸ்தாபித்ததிலிருந்து ஷிங்காயின் பணிகள் நிறுவனமயப்பட்டது. தன்னார்வத் தொண்டர் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட அவரது கல்வி நிலையத்தில் நூற்றுக்கணக்கான பெண் செயற்பாட்டாளர்கள் இணைந்தனர். அந்நிறுவனத்தின் பணிப்பாளராக நீண்டகாலம் செயற்பட்ட அவர், பெண்களை வலுவூட்டுவதில் மட்டுமன்றி, சிறுவர் உரிமைகளிலும் கவனம் செலுத்தினார். ஆப்கானிலுள்ள பெண்களுக்கான பாராளுமன்ற வலையமைப்பான ஆப்கான் சிவில் சமூக மன்றத்தையும் ஷங்காய் நிறுவினார். அதன் இணைப்பாளராகவும் பணியாற்றினார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதில் முக்கிய பங்காற்றிய அவர், பெண்கள் தொடர்பான பல சட்டங்களை பாராளுமன்றில் கொண்டு வருவதற்கு முழு மூச்சாக செயற்பட்டார். 1962 இல் பிறந்த ஷிங்காய் மருத்துவத்துறையில் பயின்றவர். அரசியல் விஞ்ஞானத் துறையில் ஆழ்ந்த ஈடுபாடு அவருக்குள்ளது. திருமணமாகிய அவருக்கு நான்கு குழந்தைகள் உள்ளன.

ஆப்கான் பாராளுமன்றத்தில் நிதி மற்றும் வரவு-செலவுக் குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ள அவர், பொறுப்புக் கூறலுக்கும் வெளிப்படைத் தன்மைக்குமான ஆப்கான் கூட்டணியின் அங்கத்தவராகவும் செயற்படுகிறார்.

பல்கலைக்கழக அனுமதி குறித்து மாணவர்கள் அறிய வேண்டியவை

மந்தரீஸ்

இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி மிகவும் போட்டித் தன்மை உள்ளது என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வருடாந்தம் க.பொ.த. உயர் தரத்தில் தோற்றும் சுமார் 3 இலட்சம் மாணவர்களில் 1 இலட்சம் பேர் சித்தியடைகின்றனர். அதாவது பல்கலைக்கழகம் நுழைவதற்கான தகுதி பெறுகின்றனர். அவர்களில் பல்கலைக்கழக நுழைவு பெறுபவர்களின் எண்ணிக்கை வெறும் 25,000 ஆகும். நடப்பு ஆண்டிலேயே இந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு முன்னர் 15,000 பேரிலிருந்து வருடாந்தம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, இப்போதே இத் தொகைக்கு வந்துள்ளது.

இதன் மூலம் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் நுழைவு அனுமதி பெறல் மிகுந்த போட்டித் தன்மை உள்ளது என்பதை உணரலாம். 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்பவே பல்கலைக்கழக அனுமதி முறை பின்பற்றப்படுகின்றது. 1978 ஆம் ஆண்டின் சட்டத்தின்படியே இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டது. இதுவே தற்போது மாணவர்களுக்கு நுழைவு அனுமதியை வழங்கி வருகின்றது.

1978 சட்டத்தின்படி இலங்கையில் 14 அரச பல்கலைக்கழகங்களுக்கும் 3 வளாகங்களுக்கும் 5 நிறுவனங்களுக்கும் பட்டபடிப்பிற்காக மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இதே சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டதே இலங்கை திறந்த பல்கலைக்கழகமாகும். இது தொலைக்கல்வி முறைமைகளைப் பாவித்து பல்வேறு வகையான கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது.

திறந்த பல்கலைக்கழக கற்கைநெறிகளுக்கான அனுமதித் தேவைகள் மற்றும் விண்ணப்பங்கள் நாவலயில் உள்ள திறந்த பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இது தவிர பின்வரும் நிறுவனங்களினால் வழங்கப்படும் கற்கைநெறிகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினாலேயே மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

1. மனித வள மேம்பாட்டு நிறுவனம் - கொழும்புப் பல்கலைக்கழகம்
2. தொழில்நுட்ப நிறுவகம் - மொரட்டுவை பல்கலைக்கழகம்

இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் அதனோடு இணைந்த நிறுவனங்களும் 92 இற்கும் மேற்பட்ட பட்டப் படிப்புசார் கற்கைநெறிகளை வழங்குகின்றன. பட்டப் படிப்புக்கான அனுமதியானது பின்வரும் தகைமைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. க.பொ.த. உயர் தரப் பரீட்சையின் அடிப்படையில் மாணவர்கள் பெற்ற Z புள்ளிகளின் தர வரிசை அடிப்படையில் மாணவர் அனுமதி மேற்கொள்ளப்படுகின்றது.

2. மேற்படி பரீட்சையில் 3 அமர்வுகளுக்குள் 3 அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் ஒரே தடவையில் குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

3. பொது வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30 வீதம் புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். (பொது வினாத்தாளில் 30 வீத புள்ளிகளைப் பெறாதோர் அதற்கு முந்திய தடவை பரீட்சையில் அதைப் பூர்த்தி செய்திருப்பின் அல்லது க.பொ.த உயர் தரப் பரீட்சையின் 3 தடவையிலான காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்திருப்பின் அவரது பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் கருத்திற் கொள்ளப்படும்.

பல்கலைக்கழகம் மாணவர்களை அனுமதிப்பது பின்வரும் இரட்டை முறையில் நடைபெறுகின்றது.

1. தீவலாவிய திறமை (Island Wide Merit)

2. மாவட்ட ஒதுக்கீடு

தீவளாவிய திறமையின் அடிப்படையில் Z புள்ளி வரிசை ஒழுங்கில் 40 வீத நுழைவு மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்ட ரீதியான ஒதுக்கீடுகளின்படி 55 வீத நுழைவு அனுமதி மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது நாட்டின் மொத்த சனத்தொகையில் சம்பந்தப்பட்ட மொத்த மாவட்டமானது கொண்டுள்ள சனத்தொகையின் வீசாதாரப் படி 25 மாவட்டங்களுக்கும் நுழைவு அனுமதி ஒதுக்கப்படுகின்றது.

ஒவ்வொரு கற்கை நெறிக்கும் உள்ள இடங்களில் 5 வீத விஷேட ஒதுக்கீடு பின்தங்கிய 16 மாவட்டங்களுக்கு அவற்றின் சனத்தொகை வீதாசாரப்படி வழங்கப்படுகின்றது. அம்மாவட்டங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

நுவரெலியா
ஹம்பாந்தோட்டை
யாழ்ப்பாணம்
கிளிநொச்சி
மன்னார்
முல்லைத் தீவு
வவுனியா
திருகோணமலை
மட்டக்களப்பு
அம்பாறை
புத்தளம்
அனுராதபுரம்
பொலன்னறுவை
பதுளை
மொனராகலை

மாவட்ட ரீதியிலான இடஒதுக்கீடுகள் மாவட்ட ரீதியிலான Z நிரலின் வரிசைப்படி நிரப்பப்படும்.

இருந்தபோதும் கலைப்பிரிவு கற்கை நெறிகளான கலை, கலை (SP), கலை (SAB) தொடர்பாடல் கற்கைகள் (Communication Studies), சமாதானமும் முரண்பாட்டுத் தீர்வும் (Peace and conflict Resolution), இஸ்லாமிய கற்கைகள், அறபு மொழி என்பவற்றுக்கான அனுமதிகள் நாடளாவிய திறமை அடிப்படையில் வழங்கப்படும்.

பரீட்சார்த்திகளின் மாவட்டங்களைத் தீர்மானித்தல்

பல்கலைக்கழக அனுமதி நோக்கங்களுக்காக ஒரு பரீட்சார்த்தியின் மாவட்டம் பின்வருமாறு நிர்ணயிக்கப்படும். ஏதாவது ஒரு விண்ணப்பதாரி பல்கலைக்கழக அனுமதிக்காக தகைமை பெறுவதற்கு க.பொ.த. உயர் தரப் பரீட்சை நடைபெற்ற மாதத்திற்கு முந்திய மாதத்தின் கடைசி நாளன்று முடிவடையும் 3 வருட காலத்தின்போது ஆகக் கூடுதலான நாட்கள் அவர் சேர்ந்துள்ள பாடசாலை அமைந்துள்ள மாவட்டமே அவரது மாவட்டமாகக் கருதப்படும்.

உதாரணமாக, 2014 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சை எழுதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வசிக்கும் ஒரு மாணவரை எடுத்துக் கொண்டால், அவர் 2014 ஆம் ஆண்டு ஜூலை 31 இல் முடிவுறும் 3 வருடங்களை 2011 ஒகஸ்ட் 1 தொடக்கம் 2014 ஜூலை 31 வரை அம்பாறை மாவட்டத்தில் கல்வி கற்றிருப்பார் எனின், அவரது பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாக அம்பாறை மாவட்டமே கருத்திற் கொள்ளப்படும். அவர் க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்காக மட்டகளப்பு மாவட்டத்தில் தோற்றியிருப்பினும் அனுமதிக் கொள்கையின் படி அவரது மாவட்டமாக அம்பாறை மாவட்டமே கொள்ளப்படும். இது பாடசாலை பரீட்சாத்திக்கு மட்டுமன்றி, தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் பொருந்தும்.

கற்றலும் மொழி மூலமும்

ஒரு மாணவனின் வினைத்திறனுள்ள கற்றலுக்கும் அவனது ஊடக மொழிக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. ஊடக மொழி முதல் மொழியாக அல்லது தாய்மொழியாக அமையும்போது கற்றல் வினைத்திறனுள்ளதாக அமைகின்றது. கிரகித்தல், நினைவாற்றல் என்பவற்றுக்குத் துணைநிற்கின்றது.

ஒரு குழந்தை இந்த உலகில் பிறந்து முதலாவதாக எந்த மொழியில் சிந்திக்கின்றதோ அதுவே ஒரு குழந்தையின் முதல் மொழியாகும். வழக்கில் இதனை தாய்மொழி என்கிறோம். இன்றைய மொழியியலாளர்கள் தாய்மொழி என்பதற்குப் பகரமாக முதல் மொழி என்பதையே பயன்படுத்துகின்றனர்.

எந்தவொரு குழந்தையினதும் ஆரம்பக் கல்வி அதன் முதன் மொழியிலேயே அமைய வேண்டும் என்கின்றனர் கல்வியியலாளர்கள். முதல் மொழியில் கற்பதே சிந்தனை வளர்ச்சிக்கும் துரிமான கிரகித்தலுக்கும் வழிகோலுகின்றது. முதல் மொழி (First Language) ஒன்றாக இருக்க, கல்வியின் ஊடக மொழி (Medium Language) இன்னொன்றாக இருப்பின் அது கற்றல் செயன்முறையை நிச்சயம் பாதிக்கும். கற்றலில் தாமதத்தை ஏற்படுத்துவதோடு, கிரகித்தலிலும் ஞாபகத்திலும் எதிர்மறையான தாக்கத்தை உருவாக்குகின்றது.

தாய்மொழிக் கல்விக்கான நியாயம் மொழியின் சமூகத் தன்மையிலிருந்தே எழுகின்றது. ஏனெனில், ஒரு குழந்தையின் கல்விக்கு பாடசாலை மட்டுமே பொறுப்புடையதல்ல. அறிவு வளர்ச்சி வீடு முதல் விளையாட்டுத் திடல் வரையிலான சமுதாய செயற்பாட்டின் மூலமே பெரிதும் நடக்கின்றது. எனவே, சமூக சூழலில் பயன்படும் மொழியில் பாடசாலைக் கல்வி வழங்கப்படும்போது குழந்தைகளால் பாடங்களை எளிதாக விளங்கிக்கொள்ள முடிகின்றது. இதுவே தாய்மொழி மூலம் கற்பதும் கற்பிப்பதும் அதிகம் பயன் தரும் என்பதற்கான நியாயமாகும்.

தாய்மொழி வழிக் கல்வியே இயற்கையானது என்பது கல்வியியலாளர்களின் ஆய்வு முடிவு. கற்கும் மனதில் ஆளுமையை விபரிக்கத் துணை நிற்பது தாய்மொழி வழிக் கல்வியே. கல்வித் துறைசார்ந்தவர்களிடையே இன்று உலகளவில் பெருமளவுக்கு கருத்தொற்றுமை கொண்ட முடிவு இது. தாய்மொழியே சிந்தனையை வளப்படுத்துகின்றது. அதன் வழியே ஒரு குழந்தை தன்னையும் தனக்கு முன்னால் விரிந்து கிடக்கும் உலகையும் உணர்ந்து கொள்கின்றது. எனவே தாய்மொழியை செவ்வனே பேசவும் எழுதவும் கற்பதோடு, அதனூடாக ஏனைய பாடங்களைக் கற்று அறிவின் எல்லையை விசாலிக்கலாம்.

சிந்திக்கின்ற, பேசுகின்ற தொடர்பாடலில் ஈடுபடுகின்ற மொழி ஒன்றாக இருக்க, வகுப்பறைக் கற்றல் அல்லது கற்பித்தல் மொழி மாத்திரம் வேறொன்றாக இருப்பது மாணவர்களின் கற்றல் திறனை மழுங்கடிக்கும். அடிக்கடி ஊடக மொழியை மாற்றிக் கொள்ளும் மாணவர்கள் கல்வி அடைவுகளில் பின்னிப்பதற்கு இது முக்கியமானதோர் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச ஈத்தம்பழத்துக்கு... (1ம் பக்கத் தொடர்)

முடியுமா எனவும் ஈபிடிபி பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, சவூதி உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளினால் இம்முறை வழங்கப்பட்ட 268 மெ.தொன் ஈத்தம்பழத்துக்கு 22.82 மில்லியன் ரூபா முஸ்லிம் கலாச்சார அமைச்சிடமிருந்து வரியாக அறவிடப்பட்டது எனத் தெரிவித்தார்.

இலவச ஈத்தம்பழம் வழங்குகின்ற நாடுகளில் டுபாய், ஈரான் போன்ற நாடுகள் தொடர்ச்சியாக வழங்காவிட்டாலும் வழங்கும்போது இறக்குமதி வரியை அந்த நாடுகளே ஏற்றுக் கொள்கின்றன. சவூதி அரேபியா வருடாந்தம் வழங்கும் 200 மெட்ரிக் தொன் ஈத்தம் பழத்துக்கு இறக்குமதி வரியாக முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களத்திடமிருந்தே வரி அறவிடப்படுகிறது. இந்த வரியை முற்றாக நீக்க முடியாதா அல்லது சவூதி அரேபியாவே இறக்குமதி வரியை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியாதா என்று பா.உ. டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பினார்.

முஸ்லிம் மக்களுக்கு ஏராளமான சமய, கலாச்சாரத் தேவைகள் இருக்கையில் இந்தத் தொகையை முஸ்லிம்களின் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த ஆட்சியில் இலவச ஈத்தம் பழத்துக்கென 09 மில்லியன் ரூபா அறவிடப்பட்டதை பா.உ. சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியிருந்தார். கடந்த காலங்களிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வந்த போதிலும் நல்லாட்சி அரசாங்கத்திலேயே அதி கூடுதலான வரி முஸ்லிம் சமய, கலாச்சாரத்துக்கான நிதியிலிருந்து ஈத்தம் பழத்துக்காக கழிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் இயங்குகின்ற காதிகள் பெறுகின்ற ஐயாயிரம் ரூபா மாதச்சம்பளத்தை அதிகரிக்க முடியாதிருக்கின்ற நிலையில், வக்பு சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக நடத்துவதற்கு நிதிப்பற்றாக்குறை நிலவுகின்ற நிலையில், ஈத்தம்பழத்துக்காக இரண்டு கோடி ரூபாக்களை முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம் செலவளித்துள்ளது.

நோன்பு துறப்பதற்காக வழங்கப்பட்ட ஈத்தம்பழங்களைப் பற்றி எந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்தில் வாய் திறக்காத நிலையில் டக்ளஸ் தேவானந்தா, சஜித் பிரேமதாச போன்றவர்கள் முஸ்லிம்களின் விவகாரங்கள் தொடர்பில் தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும் என முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கிறது.

நபியவர்களது... (12ம் பக்கத் தொடர்)

அடிப்படைகள் மீது எழுந்து நிற்கின்றது. ஒன்று அல்குர்ஆன். இரண்டாவது சுன்னா. இந்த இரண்டு மூலங்களில் இருந்தும் பெற்றுக் கொள் கின்ற பொழுதே ஒருவர் தீனை முழு மையாகப் பெற்றுக் கொள்வார்.

இந்த இரண்டையும் அடிப்படையாகக் கொண்ட அமுலாக்கமே இஸ்லாத்திற்கான முழுமையானதும், மிகச் சரியானதுமான அமுலாக்கமாகும். இந்தக் கருத்தை வலியுறுத்தும் விதமாகவே அல்குர்ஆன் பல்வேறு சந்தர்ப்பங்களில் ''அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள். தூதுவருக்குக் கட்டுப்படுங்கள்'' (நிஸா - 59) என்று இரண்டுக்குமான கட்டுப்பாட்டையும் சமாந்தரமாகக் குறிப்பிட்டதைக் காணலாம்.

எனவே, சுன்னாவைத் தவிர்த்து மார்க்கத்தைப் புரிந்து கொள்வதோ செயற்படுத்துவதோ சாத்தியமற்றது என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

4. சுன்னாவைக் கடைபிடித்தல் என்பது நாம் சரியான வழியில் இருக்கிறோம் என்பதற்கான உத்தரவாதமாகக் காணப்படுகின்றது.

இதனை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது. ''நீங்கள் அவருக்குக் கட்டுப்பட்டால் நேர்வழி பெறுவீர்கள்'' (நூர்: 54) மற்றோர் இடத்தில் ''நீங்கள் அவரைப் பின்பற்றுங்கள். நேர்வழியைப் பெற்றுக் கொள்ளலாம்'' (அஃராப்: 158) என்று கூறுகின்றது.

இந்த வசனங்களின் மூலம் நபியவர்களது சுன்னாவை ஒருவர் வாழ்வு முறையாகக் கொள்கின்ற பொழுது அவரது வாழ்வு சரியான வழியில் செல்லும். அதற்கான உத்தரவாதத்தை அல்லாஹு தஆலா தருகின்றான்.

5. சுன்னாவை வாழ்வு முறையாகக் கொள்ளாத போது, உலகில் மனித வாழ்வு சீர்குலைந்துவிடும்.

மாத்திரமன்றி மறுமையில் கடுமையான வேதனையையும் அனுபவிக்க வேண்டி ஏற்படும். இதுபற்றி அல்குர்ஆன் இவ்வாறு சொல்கிறது ''நபியவர்களது வாழ்வுக்கு மாறு செய்கின்றவர்களை ஒரு பெரும் குழப்பம் அல்லது கடுமையான வேதனை பிடித்துக் கொள்ளும். இதனையிட்டு அவர்கள் எச்சரிக்கையாக இருக்கட்டும்'' (நூர் - 63) என்று அல்குர்ஆன் கூறுகிறது.

6. சுன்னாவை வாழ்வாகக் கொள்பவனுக்கு உரிய கூலி சுவர்க்கமாகும்.

நபியவர்கள் கூறினார்கள் ''மறுத்தவனைத் தவிர என்னுடைய முழு உம்மத்தும் சுவர்க்கம் நுழையும்'' என்றார்கள். ''மறுப்பவன் யார்?'' என நபியவர்களிடம் கேட்கப்பட்டது ''எனக்குக் கட்டுப்பட்டவன் சுவர்க்கம் நுழைவான், எனக்கு மாறு செய்பவனே மறுப்பவன்'' என்றார்கள் (புஹாரி)

இறுதியாக நபியவர்களது சுன்னா எனும் வாழ்க்கை முறை இந்த உலகில் மிகவும் உயர்ந்ததொரு வாழ்வொழுங்காகும். அதற்கு நிகரான ஒரு வாழ்வு முறையை உலகில் நாம் காண முடியாது. அந்த வாழ்வு முறையை வாழ்வதற்கான பாக்கியத்தை அல்லாஹ்தஆலா எமக்களித்திருக்கின்றான். அதனை முழுமையாக கடைபிடிக்க அவன் எங்கள் அனைவருக்கும் தௌபீக் செய்தருள்வானாக.

கண்களைக்... (3ம் பக்கத் தொடர்)

அந்தவகையில் வயதான பெற்றோர்களை கைவிடுவது மிகப்பெரும் பாவம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வுக்கு இணை வைத்தல், பெற்றோருக்கு நோவினை செய்தல் என்பன பெரும் பாவங்களில் உள்ளவையாகும் என நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விட சிறந்த செயற்பாடாகவும் பெற்றோருக்கு பணிவிடை செய்வது காணப்படுகின்றது. இதனால்தான் ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து ஜிஹாத் செய்ய அனுமதி கேட்டபோது, உமக்கு வயதான தாயும் தந்தையும் இருக்கிறார்கள். முதலில் நீ அவர்களைக் கவனி. அது ஜிஹாத் செய்வதை விட உனக்கு சிறந்தது என அந்த மனிதருக்கு நபி(ஸல்) அவர்கள் உபதேசித்தார்கள்.

அதேபோல பெற்றோரின் திருப்தியிலும், கோபத்திலும்தான் அல்லாஹ்வின் திருப்தியும் கோபமும் இருக்கிறது என நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே இஸ்லாம் பெற்றோர்கள், முதியோர்கள் விடயத்தில் காட்டியுள்ள முக்கியத்து வத்தை உணர்ந்து, அவர்கள் விடயத்தில் கண்ணும் கருத்துமாக செயற்பட வேண்டியது எம்மனைவரினதும் பொறுப்பாகும்.

இன்னும் பல... (1ம் பக்கத் தொடர்)

ஜோதிடம் கணித்து கூறும் நிலைக்கு வரவில்லை என அமைச்சர் பி. ஹரிசன் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்கட்சியினை சார்ந்த பலர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் அடுத்ததாக கைதாகப் போவது யார்? ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பி. ஹரிசன், நீதிமன்றத்தில் இடம்பெறும் விசாரணைகளின் அடிப்படையிலேயே அவர்கள் அனைவரும் கைது செய்யப்படுகின்றனர். விசாரணைப் பிரிவுக்கு செல்லும் தடவைகளை அவதானிக்கும் போது அடுத்தது யார் கைது செய்யப்படவுள்ளார் என்பதை ஊகித்துக் கூற முடியும். அவ்வாறில்லாது, எமக்கு அது குறித்து ஒன்றும் சொல்ல முடியாது என மேலும் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் வடக்கு... (1ம் பக்கத் தொடர்)

ஒரு பக்குவமான படித்த முஸ்லிம் ஒருவரை எமது முதலமைச்சராக ஏற்றுக் கொள்வதற்கு நாம் எப்போதும் தயாராகவிருக்கிறோம் என அவர் மேலும் கூறினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வின் ஒரு அங்கமாக இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி, ஜேஆர் ஜயவர்தன அரசாங்கத்தினால் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டன. வடக்கு கிழக்கு மக்களின் அபிப்பிராயத்துடன் இது இணைக்கப்படவில்லை என ஜேவிபி தொடர்ந்த வழக்கையடுத்து வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டன. கிழக்கு மாகாணம் பிரிந்தே இருக்க வேண்டும் என்ற முஸ்லிம்களின் நிலைப்பாட்டின் பேறாக முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் முதலமைச்சரை நியமிக்கின்ற வாய்ப்பு முஸ்லிம்களுக்குக் கிடைத்தது. மீளவும் முஸ்லிம்களைச் சிறுபான்மையாக்கும் வடக்கு கிழக்கு இணைப்பினை முஸ்லிம்கள் விரும்பவில்லை. உத்தேச அரசியலமைப்பு திருத்தங்களுக்கான மக்களது ஆலோசனைகளிலும் வடக்கும் கிழக்கும் பிரிந்தே இருக்க வேண்டும் என்ற கருத்தினையே மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

தேசிய தகவல்... (1ம் பக்கத் தொடர்)

சுகவாழ்வையும் ஐக்கியத்தையும் முக்கிய கருப்பொருளாக கொண்டமைக்கப்படவுள்ள மேற்படி நிலையத்தின் பணிப்பாளராக கலாநிதி ரங்க கலங்சூரிய நியமிக்கப்படவுள்ளதுடன் பிரதிப்ப பணிப்பாளராக காத்தான்குடியைச் சேர்ந்த நவாஸ் முஹம்மத் அவர்களும் தலைவராக இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அவர்களும் நியமிக்கப்படவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுர்வதேச ரீதியில் அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள அரச தலைவர்களது ஊடகங்களுடன் இணைந்து பணியாற்றும் இந்நிலையத்திற்கூடாக பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் சர்வதேச மட்டத்தில் இப்பணிகள் தொடரப்பட்டு அது இலங்கையிலும் முன்டினடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. மேற்படி நிலையம் விசும்பாயவினை தலைமையமாக கொண்டு இயங்கவுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இலங்கையில்.... (05 ஆம் பக்கத் தொடர்)

1958 இல் ஐ.நா. சபை சிறுவர் உரிமைப் பட்டயத்தை பிரகடனம் செய்தது. 1989 நவம்பர் 09 இல் சிறுவர் உரிமை சாசனம் மீளவும் வலியுறுத்தப்பட்டது. 2002 இல் ஐ.நா. மனித உரிமை அமையம் நிறைவேற்றிய 1325 ஆவது தீர்மானம் போர்ச் சூழலில் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. இலங்கையிலும் அவ்வப்போது சிறுவர் பாதுகாப்புக் குறித்து பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால், அவை எதுவும் அமுலில் இல்லை.

வேலியே பயிரை மெய்தல் எனும் கதை போல் சட்டத்தை மதித்துப் பாதுகாக்கின்ற பொறுப்பைச் சுமந்தவர்களே அவற்றை மீறும் செயலில் ஈடுபடுகின்றனர். வகுப்பறைகளில் பெண் குழந்தைகளுக்கு அநியாயம் இழைக்கப்படுகின்றது. பல்கலைக்கழகங்களில் பகிடிவதை என்ற பெயரில் உரிமைகள் மீறப்படுகின்றன.

இவற்றில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டாலும் அடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. எந்த வழக்கிலும் கொடூரமாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு சட்டப்படி அளிக்க வேண்டிய நிவாரணம் அளிக்கப்படுவதில்லை. அநீதிக்கும் கேவலத்திற்கும் பலியாகும் ஏராளமான சிறுவர் சிறுமியர் துஷ்பிரயோக சம்பவங்களின் ஒரு பகுதியே நீதிமன்றங்களுக்கு வருகின்றது. அவை கூட இறுதித் தீர்ப்பின்றி இழுத்தடிக்கப்படுகின்றது. தாமதிக்கப்படும் நீதி வழங்கப்படாத நீதி என்பதைப் போல் நீதிமன்றங்கள் இறுதியில் கையை விரிக்கின்றன. குற்றவாளிகள் வெளியில் சுற்றுகின்றனர்.

வித்யாவின் சம்பவம் நடைபெற்ற போது ஜனாதிபதி மைத்ரிபால யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறியதோடு தனியான நீதிமன்றம் அமைத்து குற்றவாளிகளைத் தண்டிப்பேன் என்று உறுதியளித்தார். ஒன்றரை ஆண்டுகள் கடந்தும் வித்யாவுக்கு நீதி கிடைக்கவில்லை.

சிறுவர்களைப் பாதுகாப்பது ஒரு கூட்டுப் பொறுப்பு. பெற்றோர், சிவில் சமூகம், சட்டத் துறை, நீதிமன்றம் என அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதன் மூலமே அதனை உறுதி செய்யலாம்.

இலங்கையில் சட்டவாக்கம் உள்ளது. ஆனால், தேவையானது சட்ட அமுலாக்கல். வறுமையே சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு முதன்மைக் காரணமாக உள்ளது. முன்னேற்றத்தின் நிழல் படியாத கொடிய ஏழ்மையின் காயங்களுக்கு ஒத்தடம் போடக் கூடிய சமூகக் காப்புறுதித் திட்டம் இன்றியமையாதது. பொதுமக்கள் பரப்பில் பரந்து பட்ட விழிப்புணர்வு உருவாக்கப்பட வேண்டியுள்ளது. சிறுவர்களையும் மனிதர்களாகப் பார்க்கும் மனோபாவம் வளர்க்கப்பட வேண்டியுள்ளது. இவற்றின் மூலமே நாளைய தலைமுறையைப் பாதுகாக்கலாம்.

ஜனாதிபதியும்... (1ம் பக்கத் தொடர்)

பௌத்த மதத்தை பாதுகாத்து அதனை மேம்படுத்துவது ஆட்சி செய்யும் அரசாங்கங்களின் கடமை எனவும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டாலும் பௌத்த சாசனம் பாதுகாக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

2017ம் ஆண்டு சர்வதேச வெசாக் தினத்தை மிகவும் சிறந்த முறையில் நடாத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் உலகின் தேரவாத பௌத்த நாடுகளை ஒன்றிணைத்து இலங்கையின் 70ம் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறும் குறித்த ஆண்டில் தேரவாத சர்வதேச மாநாடு ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ளோம் எனவும் பிரதமர் மேலும் தெரிவித் துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய நீதியான சமூகத்திற்கான மக்கள் அமைப் பின் தலைவர் பேராசிரியர் சரத் விஜேசூரிய, அரசியல் தலைவர்கள் பௌத்த மதத்தை துஷ்பிரயோகம் செய் கின்றனர் என தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைவர்கள் தமது அரசியல் தேவைகளுக்காக பௌத்த மதத்தை துஷ்பிரயோகம் செய்கின்றனர். மிகவும் உன்னதமான இந்த பௌத்த தர்மத்தை சில பௌத்த பிக்குகள் குரோதத்தை விதைக்க பயன்படுத்திக் கொள்கின்றனர். நாட்டின் சமாதானம், ஒற் றுமையை முன்னிலைப்படுத் தியே ஜனவரி மாதம் 8ம் திகதி 62 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாக்களித்தனர் என்பதனை பிரதமருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். பிரதமரும் ஜனாதிபதியும் தைரியமான தீர்மானங்களை எடுத்து மீளவும் நாட்டில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதனை தடுக்க வேண்டும் என பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசியல் அமைப்பு திருத்தங்களின் போது எந்த வகையிலும் பௌத்தமதத்திற்கானமுன்னுரிமைகளில் மாற்றங்கள் செய்யப்படாது என பிரதி அமைச்சர் அஜித் பெரேரா கொழும்பு ஆனந்த கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஊடாக... (1ம் பக்கத் தொடர்)

வெளியாகின. 35 முதல் 350 வரையான எண்ணிக்கைகள் இலங்கையின் ஐ.எஸ். உடன் தொடர்புள்ளவர்கள் என ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன. இந்தியாவில் இருந்து சிரியா சென்றவர்களும் இலங்கைக்கு ஊடாகவே ஐ.எஸ் இல் இணைந்ததாகவும் தகவல்கள் வெளியிடப்பட்டன.

தற்போது கேரளாவில் எழுந்துள்ள ஐ.எஸ் தீவிரவாத சர்ச்சையுடன் இலங்கைக்கு தொடர்பு இருப்பதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அண்மையில் கேரளாவில் குடும்பங்களுடன் காணாமல் போனவர்கள் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் இணைந்து கொண்டதாகவும், இவ்வாறு இணைந்து கொண்டவர்கள் இலங்கை வழியாக அல்லது இலங்கையை பயன்படுத்தி சென்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதன் அடிப்படையில் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாகவும், ஐ.எஸ் தீவிரவாதம் தொடர்பில் இலங்கையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐ.எஸ் தீவிரவாதிகளின் ஊடுருவலில் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கமும் முடுக்கி விட்டுள்ளது. பல நாடுகளின் விமான நிலையங்கள் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பினை பலப்படுத்த விசேட பொறிமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

மீள்பார்வை தனிப் பிரதி	ரூபா 40.00	இந்தியா		மத்திய கிழக்கு நாடுகள்	4000.00	ஐக்கிய இராச்சியம்	5500.00
13 இதழ்கள்	ரூபா 650.00	தனிப் பிரதி	ரூபா 100.00	மலேசியா	4000.00	அமெரிக்கா	6500.00
26 இதழ்கள்	ரூபா 1300.00	ஒரு வருடம்	ரூபா 3500.00	ஐக்கிய அறபு இராச்சியம்	4000.00	அவுஸ்திரேலியா	4700.00
						சீனா	4600.00

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0772267569 People's Bank A/c: 056100150078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகில் மிக உயரத்திலுள்ள ஐந்து ரயில் பாதைகள்

1. கிங்சாங் பாதை

இது சீனாவில் அமைந்துள்ள ஒரு ரயில் பாதையாகும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 16627 அடி வரையான உயரத்தில் இப்பாதை அமைந்துள்ளது. இது திபெத் மேட்டுநிலத்தை ஊடறுத்துச் செல்கின்றமை ஒரு சிறப்பம்சமாகும். இரண்டாவது சிறப்பம்சம், உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையமும் இப்பாதையிலே காணப்படுகின்றமையாகும். அந்நிலையம் தங்குல்லா எனப்படுகின்றது. மற்றொரு சிறப்பம்சமும் இப்பாதையிலே காணப்படுகின்றது. அதுதான் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள புகையிரத பாதை குகையாகும். 16093 அடி உயரத்தில் அமைந்துள்ள பெங்கூசன் சுரங்கப் பாதையே அதுவாகும்.

2. பெர்ரோ கர்டணீல் மத்திய அன்டினோ பாதை

இது பெரு நாட்டில் அமைந்துள்ள புகையிரத பாதையாகும். கடல் மட்டத்திலிருந்து 15843 அடி வரையான உயரத்தில் இப்பாதை அமைந்துள்ளது. இப்பாதை 19 ஆம் நூற்றாண்டில் பொறியியலாளர் ஏட்னஸ்ட் அடம் என்பரால் அமைக்கப்பட்டுள்ளது.

3. ரியோ முலொடோஸ் - பொடோசி பாதை

இது உலகிலுள்ள மூன்றாவது உயரமான இடத்தில் அமைந்துள்ள புகையிரத பாதையாகும். இது பொலிவியா நாட்டில் அமைந்துள்ளதுடன், இதன் அதிகூடிய உயரம் கடல் மட்டத்திலிருந்து 15702 அடிகளாகும்.

4. பெரு ரயில் பாதை

பெரு நாட்டில் அமைந்துள்ள இப்புகையிரத பாதை கடல் மட்டத்திலிருந்து அதிகூடிய உயரமான 14150 அடி வரை அமைக்கப்பட்டுள்ளது. இப்பாதை 1999 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதாகும்.

5. மனிடோ மற்றும் பைக் பீக்ஸ் பாதை

இது அமெரிக்காவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு புகையிரத பாதையாகும். இப்பாதையில் அதிகூடிய உயரமாக கடல் மட்டத்திலிருந்து 14111 அடிகளாக காணப்படுகின்றது.

இலங்கை புகையிரத பாதையில் கொழும்பு - பதுளை புகையிரத பாதையே மிகவும் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையம் பட்டிப்பொல ஆகும். இந்நிலையம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 6226 அடி உயரத்தில் காணப்படுகின்றது. இந்நிலையம் நுவரெலியா மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ளது. இந்நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் ஒஹியா பக்கமாக செல்லும் போது அமைந்துள்ள சம்மிட் என்ற இடமே இலங்கை புகையிரத பாதையில் அமைந்துள்ள உயரமான இடமாகும்.

ஆசியாவின் மிகப்பெரும் நகரங்கள்

1. டோக்கியோ, ஜப்பான்	37.8 மில்லியன்
2. ஜகார்த்தா, இந்தோனேசியா	30.5 மில்லியன்
3. டில்லி, இந்தியா	25 மில்லியன்
4. கராச்சி, பாகிஸ்தான்	24.3 மில்லியன்
5. மணிலா, பிலிப்பைன்ஸ்	24.1 மில்லியன்
6. சியோல், தென்கொரியா	23.5 மில்லியன்
7. சங்காய், சீனா	23.4 மில்லியன்
8. பீஜிங், சீனா	21.1 மில்லியன்
9. குவாங்சு, சீனா	20.6 மில்லியன்
10. ஒஸாகா, ஜப்பான்	19.3 மில்லியன்

ரமழானை சார்ந்தவர்களாக இருந்துவிடாதீர்கள்

(உஸ்தாத் ஜும்ஆ ஸெய்தானின் முகநூல் பக்கத்திலிருந்து)

நோன்பு முடிந்துவிடாது, அல்குர்ஆன் சென்றுவிடாது, மஸ்ஜித் நகர்ந்துவிடாது. மரணம் வரும்வரை அல்லாஹ்வை வணங்குங்கள். அல்லாஹ்வை சார்ந்திருங்கள். ரமழானை சார்ந்தவர்களாக இருந்து விடாதீர்கள்.

அல்லாஹ் உங்களுடைய உள்ளத்தில் ஒளியை ஏற்படுத்தி விடுவான். முகத்தில் பிரகாசத்தை ஏற்படுத்தி விடுவான். வாழ்வாதாரத்தில் விருத்தியை ஏற்படுத்தி விடுவான். படைப்புகளின் உள்ளங்களில் அன்பை ஏற்படுத்தி விடுவான்.

அல்லாஹுதஆலா என்னையும் உங்களையும் அவனை ஞாபகப்படுத்துபவனாக, பாவமன்னிப்பு பெற்றவர்களாக மாற்றிவிடுவானாக. எம்மனைவரினதும் எமது பெற்றோரினதும் யாருக்கெல்லாம் எம்மீது உரிமை இருக்கின்றதோ அவர்கள் அனைவரினதும் பாவங்களை மன்னித்துவிடுவானாக.

student @ மீள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

இமாம் ஷாபிஈ கூறுகிறார் ;
நீங்கள் தொன்னூற்றி ஒன்பது தடவைகள் சரியானவற்றை செய்தாலும் ஒரு தடவை நீங்கள் பிழை செய்துவிட்டால் நீங்கள் சரியாக செய்தவற்றை அவர்கள் மறைத்து விடுவார்கள். நீங்கள் செய்த பிழையை பரப்பிவிடுவார்கள்.

உலகின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சிகள்

நீர் நிலைகள் எப்போதுமே அழகானவை, மனதிற்கு இதமானவை. உலகெங்கிலும் ஆயிரக்கணக்காக நீர்வீழ்ச்சிகள் காணப்படுகின்றன. அவற்றை தரிசிப்பதற்காக, ரசிப்பதற்காக தினந்தோறும் சுற்றுலா பயணிகள் செல்கின்றனர். இங்கு உலகிலே மிக உயரமான பத்து நீர்வீழ்ச்சிகளின் விபரங்களைப் பார்ப்போம்.

1. ஏன்ஜல் நீர்வீழ்ச்சி

இதுதான் உலகில் மிக உயரமான நீர்வீழ்ச்சியாகும். இது வெனிசுவேலா நாட்டின் கனைமா தேசிய பூங்காவில் அமைந்துள்ளது. இதன் உயரம் 3212 அடிகளாகும்.

2. டுகேலா நீர்வீழ்ச்சி

இது தென்ஆபிரிக்காவில் அமையப்பெற்றுள்ளது. இதன் உயரம் 3110 அடிகளாகும். ரோயல் தேசிய பூங்கா மற்றும் ரொக்கி மலைத்தொடர்களை ஊடறுத்து டுகேலா நதியாகப் பாய்கின்றது.

3. டிரெஸ் ஹேர்மனாஸ் நீர்வீழ்ச்சி

உலகின் மூன்றாவது உயரமான நீர்வீழ்ச்சியாக இது காணப்படுகின்றது. பெரு நாட்டின் ஜூனின் நகரில் இது அமையப்பெற்றுள்ளது. இதன் உயரம் 2999 அடிகளாகும்.

4. ஒலோ உபேனா நீர்வீழ்ச்சி

அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் உள்ள மொலோகாய் தீவிலே இது அமைந்துள்ளது. இதனை நேரடியாக சென்று பார்வையிட முடியாது. கடலிலிருந்து அல்லது ஆகாய மார்க்கமாகவே இதனை பார்வையிட முடியும். இதன் உயரம் 2953 அடிகளாகும்.

5. யும்பில்லா நீர்வீழ்ச்சி

மீண்டும் பெரு நாடு நீர்வீழ்ச்சிகளின் பட்டியலில் இணைகின்றது. உலகின் ஐந்தாவது உயரமான நீர்வீழ்ச்சி இங்கே அமைந்துள்ளது. அமேசன் காட்டினை சூழ அமைந்துள்ள இந் நீர்வீழ்ச்சியின் உயரம் 2940 அடிகளாகும். இந்நீர்வீழ்ச்சி பின்னர் உடுபம்பா நதியிலிருந்தே உருவாகியுள்ளது.

6. வின்னு போர்சன் மற்றும் பலே போர்சன் நீர்வீழ்ச்சிகள்

உயரமான நீர்வீழ்ச்சிகளின் பட்டியயிலில் இவ்விரு நீர்வீழ்ச்சிகளுடன் ஐரோப்பாவும் இணைந்து கொள்கின்றது. இவ்விரு நீர்வீழ்ச்சிகளும் முறையே 2822, 2789 அடிகளை கொண்டனவாகும். நோர்வே நாட்டில் அமைந்துள்ள இந்நீர்வீழ்ச்சிகளும் வின்னு மற்றும் பலே நதிகளிலிருந்தே உருவாகின்றன.

7. ஜேம்ஸ் புரூஸ் நீர்வீழ்ச்சி

இது கனடாவில் அமைந்துள்ளது. இதன் உயரம் 2756 அடிகளாகும்.

நான் ஒரு பணயக் கைதியாகி விடுகிறேன்

அப்பாஸ் கியராஸ்தமி

இயக்குனர் அப்பாஸ் கியராஸ்தமி கடந்த 4ஆம் திகதி காலமானார். இவர் உலகின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்த ஒரு முக்கிய இயக்குனர். ரிஷான் ஷெரீப் அவருடன் மேற்கொண்ட நேர்காணலில் சில பகுதிகள் அனுமதியுடன் இங்கே பிரசுரமாகிறது.

குறுந்திரைப்பட உருவாக்கத்தின் போதான உங்கள் எண்ணக் கரு மற்றும் கற்பனா சக்தி பற்றிக் கூறுங்கள். அதற்கு ஏதாவது அளவுகோல் உண்டா? அல்லது அதன்பாட் டில் விட்டுவிடுவீர்களா?

கவிதை இல்லாமல் உங்களால் வாழ முடியுமென எனக்குத் தோன்றவில்லை. கவிதைகளை இன்னுமொருவரிடம் வாசித்துக் காட்டுவதற்காக மனனமாக்குவதல்லாமல், அவற்றை ஆழ் மனதோடு ஒன்றி ஆழமாக வாசிக்கும்போதுதான் அவற்றில் நம்மை நாமே உணர முடியும் அல்லவா?

அதுபோல கட்டுப்பாடுகள், விதிமுறைகள் ஏதுமில்லையென்ற போதிலும் கூட, நீங்கள் எப்பொழுதும் ஒரு திட்டத்தோடும், எங்கே, எப்படி நீங்கள் அடியெடுத்து வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடும்தான் ஒரு வேலையை ஆரம்பிப்பீர்கள். ஆனால் வேலை நடந்து கொண்டிருக்கையில் இடையிடையே புதுப் புது எண்ணங்கள் அடிக்கடி வரும். குறுந்திரைப்படங்களுக்கான தயாரிப்பாளர்கள் இல்லையெனும்போது, உங்களால் உங்களது புதுப்புது எண்ணங்களைப் பின்பற்றவும் உடனடியாக செயற்படுத்திப் பார்க்கவும் தயங்கி நிற்க வேண்டிய அவசியமில்லை.

நான் முழு நீளத் திரைப்படங்களினிடையே குறும்படங்களையும் இயக்குவதாகக் கூறியிருந்தேன் அல்லவா? குறுந்திரைப்படங்களுக்கிடையே நான் புகைப்படங்களையும் எடுக்கிறேன். இன்னுமொரு தடவை எனது பல புகைப்படங்களோடு நான் இங்கு வர விரும்புகிறேன்.

நிச்சயமாக உங்களது புகைப்படங்கள் கூட ஒவ்வொரு கதைகளைச் சொல்லக் கூடும். புகைப்படங்களை எமக்குக் காட்ட விரும்புவதற்கான காரணம் என்ன?

இது புகைப்படங்கள் மீதான எனது ஆர்வத்தைக் காட்டுகிறது. நான் வருடத்துக்கொரு முழுநீளத் திரைப்படத்தை இயக்குகிறேன். ஆனால் ஒவ்வொரு வாரமும் புகைப்படங்களை எடுத்துக் கொண்டிருக்கிறேன். எனது புகைப்படங்கள் குறித்துச் சொல்வதென்றால், அப் புகைப்படங்களிலுள்ள இயற்கையின் அழகு மட்டுமே இப்பொழுது எனக்கு நினைவிருக்கிறது. இவற்றை நான் ஈரானிலா அல்லது வேறெங்காவது எடுத்தேனா என்பது எனக்கு இப்பொழுது நினைவிலில்லை.

நீங்கள் தினந்தோறும் புகைப்படங்களை எடுக்க வேண்டும். அவை உங்களுக்கு கூர்ந்து கவனிக்கக் கற்பித்து, திறமைகளை வளர்த்து, திரைப்பட இயக்குனராக உங்களை பரிணமிக்கச் செய்யும். அத்தோடு இயக்குனராவதற்கு அசையும்படங்களும் அவசியமானவைதான். ஒரு மோசமான தொலைக்காட்சியாவது அருகில் இல்லாமல் என்னால் வாழ முடியாது.

இயக்குனர் அப்பாஸ் கியராஸ்தமி, புகைப்படங்களை எடுக்க ஆரம்பித்தபோது அவர் விலைகுறைவான கேமராவையே பயன்படுத்தியிருக்கிறார். எனவே அவர் காண்பித்த அவரது அருமையான புகைப் படங்கள் பல, காலப்போக்கில் நிறம் மங்கிப் போயிருந்தன.

குறுந்திரைப்படங்கள், முழு நீளத் திரைப்படங்கள் ஆகிய இரண்டு திரைப் படங்களையும் இயக்கிய அனுபவங்களைக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைப் பொறுத்தவரையில் ஆவணத் திரைப்படங்கள் மற்றும் முழு நீளத் திரைப்படங்கள், இவையிரண்டுக்கும் உள்ள வித்தியாசங்கள் எவையெனக் கருதுகிறீர்கள்?

ஆவணத் திரைப்படங்களுக்கும், மிகச் சிறந்த முழு நீளத் திரைப்படங்களுக்குமிடையே எந்த வித்தியாசங்களுமில்லை. இவையிரண்டுமே வாழ்க்கையின் ஆவணங்களே. ஒரு சிறந்த திரைப்படத்துக்கான எனது வரைவிலக்கணமானது, அது எம்மை அடுத்தவருக்கு வெளிப்படுத்தும், எமக்கு அடுத்தவரைப் பற்றித் தெரிவிக்கும், எமக்கு எம்மையே வெளிப்படுத்தும்.

சர்வதேச ரீதியில் உங்கள் திரைப் படங்கள் கொண்டாடப்பட [illegible] திரைக்கதைகளும் முக்கிய காரணமாக உள்ளதை மறுக்க முடியாது. அதைப் பற்றிக் கூறுங்கள்?

உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவான திரைப்படமே உலகளாவியது என நான் நினைக்கிறேன். நீங்கள் உங்கள் திரைக்கதையை சிறந்த முறையில் எழுதி விட்டீர்களெனில், அதனை நீங்கள் உலகில் எவ்விடத்திலும் பகிர்ந்துகொள்ள முடியும். எவ்விடத்திலும் திரைப்படமாக்கிவிட முடியும்.

எனது திரைக்கதையொன்றை நடிகை ஜூலியட் பினோச் (Juliette Binoche) வாசித்தபோது, அவரும் அவரது துணைவரும் அவர்களது வாழ்க்கையையும், அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாக நினைத்தார்களாம். ஆனால் அத் திரைக்கதையானது எனது அனுபவங்களை அடிப்படையாக வைத்து நான் எழுதியது. ஈரான் வாழ்க் [illegible] எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் எங்கோ எல்லாமும் இணைந்தே இருக்கிறது.

விமானத்தில் வரும்போது எனக்கு முன்னாலிருந்த திரையில் பதினொரு திரைப்படங்களைப் பார்க்க முடியுமாக இருந்தது. அவற்றில் பதினொரு திரைப் படங்கள் ஓடிக் கொண்டிருந்தன. என்னைப் பொறுத்தவரையில் அவற்றுள் ஒன்று மாத்திரமே உண்மையான திரைப்படம். அதுவும் கறுப்பு வெள்ளையில் இருந்தது. அதனை யாரெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களென சுற்றி வரப் பார்த்தேன். அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

உண்மையில் திரைப்படங்களுக்கான எண்ணக்கருக்களுக்கு எவ்விதச் சூத்திரங்களும் இல்லை. எனக்கு ஏதாவது எண்ணக் கரு தோன்றுமிடத்து, மாதக்கணக்கில் அதைத் தாண்டி வெளியே வர முடியாதவிடத்து, இப்பொழுது இது எழுதப்பட வேண்டிய ஒன்றுதான் எனத் தீர்மானிப்பேன்.

சர்வதேச ரீதியில் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அங்கு ஈரானியத் திரைப்படங்களைப் புகழ்ந்து பரிந்துரைக்கிறார்கள். ஈரானியத் திரைப்படத் துறையின் இந்த அபார வளர்ச்சிக்கு எவை முக்கியமான காரணிகளாக அமைகின்றன?

என்னுடன் வேலை பார்த்த மாணவர்களுடன் ஒப்பிட்டுச் சொல்வதானால், அவர்கள் மிகவும் கடுமையாக உழைக்கக் கூடியவர்களாகவும், உண்மையானவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் இருப்பதை நான் கண்டேன். இப்பொழுதும் அவர்களது உழைப்பைக் காண நான் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன்

அத்தோடு ஈரானின் ஓவியக் கலைகள், திரைப்படங்களிலும் பின்னணியில் வேலை செய்வதை ஒரு காரணமாகக் கொள்ளலாம். எவ்வாறாயினும் இக் காலத்தில், இந் நவீன யுகத்தில் அநேகமான குறுகிய வழிமுறைகள் உள்ள போதிலும், ஒருவர் திரைப்படத்தை எடுக்க முன்பு, தனது திரைப்படத்தில் எவற்றைக் காட்சிப் படுத்த வேண்டும் எனத் தீர்மானிப்பது முக்கியமானது.

ஈரானில் அப்படித்தான் செய்கிறார்கள். அங்கு 60 ஆண்டுகளுக்கும் முன்பு கூட திரைப்படம் இருந்திருக்கிறது. புரட்சிக்கு முன்பும் பின்பும் ஈரானிய சினிமாவானது, காட்சிகளும், நடிகர்களும் மாறிய போதிலும் கூட, அதன் தனி வழியையே பின் தொடர்ந்து செல்கிறது. இதுதான் அதற்குரிய வழி.

ஈரானியத் திரைப்படங்கள் உலகளாவிய ரீதியில் கவனம் பெறுவதற்கு அவற்றின் மீதுள்ள கட்டுப்பாடுகளும் இன்னுமொரு காரணமென நான் நினைக்கிறேன். கலாசாரம் எமக்கு விதிக்கப்பட்டதாக இருக்கிறது. ஆனால் நாம் ஒவ்வொருவரும் பிறந்து வளரும்போது எமக்கென்று தனிப்பட்டதும் ஆழமானதுமான அடையாளமொன்று வந்துவிடுகிறது. எனவே உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் கையாளும் ஒழுக்கத்தின் திசைகாட்டியாக சினிமா செயற்படுகிறது என நாம் ஒருபோதும் எதிர்பார்க்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமிர் பெரும் அச்சுறுத்தல் : புரோட்

இங்கிலாந்து வீரர்கள் ஆமிரின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாக பேசிக் கொண்டிருக்காமல் போட்டியில் அவரது சவாலை எவ்வாறு முறியடிக்க வேண்டும் என்பது பற்றியே கவனம் செலுத்த வேண்டும் என இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் புரோட் தெரிவித்துள்ளார். ஆமிரின் பந்துவீச்சு முன்னரை விட சிறப்பாக காணப்படுகின்றது. இந்தத் தொடரில் அவரே எமக்கு அதிகம் நெருக்கடியை ஏற்படுத்துவார். எனவே அவரது பந்துவீச்சுத் தாக்குதலை சமாளிப்பது தொடர்பில் திட்டமிடல்களை மேற்கொள்வது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதும் டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி வியாழக்கிழமை (14) லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது. கடந்த 2010ம் ஆண்டு மொஹமட் ஆமிர் இதே மைதானத்தில் வைத்தே சூதாட்ட சர்ச்சையில் சிக்கி 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஓய்வுக்குப் பின் அரசியலில் குதிக்கிறார் அப்ரிடி

அனைத்து வகையான கிரிக்கட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற்றதன் பின்னர் அரசியலில் ஈடுபடப்போவதாக தெரிவித்துள்ளார் பாக்கிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் அதிரடி ஆட்டக்காரருமான ஷஹீத் அப்ரிடி. 36 வயதான அப்ரிடி கடந்த 2015ம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரோடு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போது பாக்கிஸ்தான் அணிக்காக டி-20 போட்டிகளில் மாத்திரம் விளையாடி வருகிறார்

இந்நிலையில் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அப்ரிடி, தான் அரசியலில் ஈடுபட விரும்புவதாகவும் என்றாலும் தன் மீது அக்கறை கொண்டவர்கள் அரசியலில் ஈடுபட வேண்டாம் என ஆலோசனை வழங்குவதாகவும் தன்னுடைய பார்வையில் ஓர் அரசியல்வாதி என்பவன் மக்களின் துயர்களைத் துடைக்கக் கூடியவனாகவும் மக்களின் சேவகனாகவும் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஷஹீத் அப்ரிடி தனது சமூக சேவை நிறுவனத்தினூடாக பல்வேறு பணிகளைச் செய்து வருகின்ற நிலையில் விரைவில் வறிய மாணவர்களுக்காக பாடசாலை ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளாது

ஒக்டோபரில் பங்களாதேஷில் இடம்பெற இருக்கும் இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான கிரிக்கட் தொடரை பொதுவான இடமொன்றில் நடாத்த வேண்டும் என்ற இங்கிலாந்து கிரிக்கட் சபையின் யோசனையை பங்களாதேஷ் கிரிக்கட் சபை நிராகரித்துள்ளது. ஜூலை 1ம் திகதி டாக்காவின் உணவு விடுதியொன்றில் நடாத்தப்பட்ட தீவிரவாதிகளின் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து பாதுகாப்பு அச்சுறுத்தலை காரணம் காட்டி பொதுவான இடமொன்றில் போட்டித் தொடரை நடாத்த வேண்டும் என இங்கிலாந்து ஒருநாள் அணித்லைவர் இயன் மோர்கன் கருத்து தெரிவித்திருந்தார். இந்த நிலையில் இங்கிலாந்தின் இந்தக் கோரிக்கையை நாம் எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள மாட்டோம், போட்டித் தொடரை திட்டமிட்டவாறு பங்களாதேஷில் நடாத்துவதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது என பங்களாதேஷ் கிரிக்கட் சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி நிஸாமுதீன் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

யூரோ கிண்ணம் 2016 சாதித்தது போர்த்துக்கல்

கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக பிரான்ஸில் இடம்பெற்று வந்த யூரோ உதைப்பந்தாட்டத் திருவிழா 11ம் திகதி இறுதிப் போட்டியோடு நிறைவுக்கு வந்தது. இறுதிப் போட்டியில் பலம் பொருந்திய பிரான்ஸ் மற்றும் போர்த்துக்கல் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. யாருமே எதிர்பார்க்காத வகையில் அபாரமாக ஆடிய கிறிஸ்டியானோ ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணி உள்ளூர் ரசிகர்களின் பலத்த ஆதரவுக்கு மத்தியில் விளையாடிய பிரான்ஸ் அணியை வீழ்த்தி வரலாறு படைத்திருக்கிறது.

வாழ்வின் அதி உன்னத தருணம் – கண்ணீர் விட்டழுதார் ரொனால்டோ

பல திறமை வாய்ந்த வீரர்களை போர்த்துக்கல் அணி உருவாக்கியிருந்தாலும் இதுவரை எந்தவொரு பெரிய தொடர்களிலும் அவ்வணி சம்பியனாகியதில்லை. அதிகபட்சமாக 2004ல் சொந்த நாட்டில் நடந்த யூரோ இறுதிப் போட்டியில் கிரீஸிடம் தோல்வியை தழுவியிருந்தது. இம்முறை பிரான்ஸில் இடம்பெற்ற 15வது யூரோ தொடரில் போர்த்துக்கல் அணி வெற்றிவாகை சூடும் என யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. லீக் போட்டிகளிலும் கூட சிறப்பான பெறுபேறுகளை அந்த அணி வெளிப்படுத்தி இருக்கவில்லை. என்றாலும் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்களில் அபாரமாக ஆடி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. மறுபுறத்தில் தொடரின் ஆரம்பத்தில் இருந்தே சிறப்பாக விளையாடி வந்த பிரான்ஸ் அணி அரையிறுதியில் உலக சம்பியன் ஜேர்மனியை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

75000இற்கும் மேற்பட்ட ரசிகர்கள் காண வந்திருந்த இறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோ 24வது நிமிடத்திலேயே உபாதைக்குள்ளானமை போர்த்துக்கல் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. என்றாலும் இறுதிவரை இரு அணி வீரர்களும் சிறப்பாக விளையாடி கோல் எதனையும் பெறாததால் போட்டி மேலதிக நேரத்திற்கு சென்றது. 109வது நிமிடத்தில் போர்த்துக்கல் அணியின் போராட்டத்திற்கு பலன் கிடைத்தது. மாற்று வீரராக களமிறங்கிய போர்த்துக்கல் அணியின் ஈடர் அணிக்காக கோலை பெற்றுக் கொடுக்க போர்த்துக்கல் அணி முதல் தடவையாக ஐரோப்பிய சம்பியனாக மகுடம் சூடியது.

உபாதைகளால் அவதியுறும் இலங்கை பந்துவீச்சாளர்கள்

பந்துவீச்சாளர்கள் தொடர்ந்தும் உபாதைகளால் அவதிப்படுவது இலங்கை அணியின் கிரிக்கெட்டுக்கே பெரும் தலையிடியாக மாறியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கை கிரிக்கட் அணியின் தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜயசூரிய தமக்கு ஏற்பட்டுள்ள உபாதைகளில் இருந்து அவதானமாக இருக்கும் பாரிய பொறுப்பு வீரர்களுக்கேகாணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், குறிப்பாக வெளிநாட்டுத் தொடர்களில் இலங்கை அணி வீரர்கள் அதிகம் உபாதைக்குள்ளாகின்றனர். நடைபெற்று முடிந்த இங்கிலாந்துடனான தொடரில் லசித் மலிங்க மற்றும் ஜெப்ரி வன்டர்சேய் ஆகியோர் இலங்கை குழாம் அறிவிக்கப்பட முன்னரே உபாதை காரணமாக நீக்கப்பட்டனர். பின்னர் தம்மிக பிரசாத் மற்றும் துஷ்மன்த சமீர ஆகியோர் இங்கிலாந்து சென்று போட்டிகளில் பங்கேற்காமல் காயம் காரணமாக நாடு திரும்பி இருந்தனர்.

சகலதுறை ஆட்டக்காரர்களான மத்தியூஸ் மற்றும் மிலின்த சிறிவர்த்தன ஆகியோரும் காயத்தினால் அவதிப்பட்டனர். இதன்காரணமாகவே இங்கிலாந்துடனான தொடரில் இலங்கையின் துடுப்பாட்ட வரிசை ஓரளவு பலமாகக் காணப்பட்டபோதிலும் பந்து வீச்சாளர்களுக்கு ஏற்பட்ட உபாதைகள் அணியின் வெற்றியை பறித்து விட்டன. எனவே வீரர்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய உபாதைகள் தொடர்பாக மிகுந்த அவதானத்தோடு செயற்பட வேண்டும் எனவும் சனத் ஜயசூரிய தெரிவித்தார்.

அன்டி முர்ரே தகுதியானவர்

இந்த ஆண்டின் விம்பிள்டன் சம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்ட பிரித்தானியாவின் அன்டி முர்ரே அந்த வெற்றிக்கு தகுதியானவர் என்றும் தொடந்து சிறப்பாக விளையாடினால் நொவெக் ஜெகோவிச்சை பின்தள்ளி தரவரிசையில் முதலிடத்தைக் கைப்பற்ற முடியும் எனவும் அன்டி முர்ரேயின் முன்னாள் பயிற்சியாளர் மார்க் பெட்ச்சே குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற விம்பிள்டன் இறுதிப் போட் டியில் முர்ரே கனடாவின் மெலோன் ரொனிக்கை 6-4,7-6,7-6 என்ற நேர் செட் கணக்கில் தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

றியோ 2016: பிரேஸில் தயார் நிலையில்!

ஆகஸ்ட் 5ம் திகதி இடம்பெற இருக்கும் ஒலிம்பிக் திருவிழாவுக்கு பிரேஸில் முழுமையாக தயாராகி விட்டதாக சர்வதேச ஒலிம்பிக் அமைப்பின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. தென் அமெரிக்க நாடொன்றில் நடக்கும் முதலாவது ஒலிம்பிக் தொடர் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

206 நாடுகளைச் சேர்ந்த 10500க்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் 4924 பதக்கங்களுக்காக போட்டியிடுகின்றனர். இம்முறை கொசோவா மற்றும் தென் சூடான் அணிகள் முதல் முறையாக ஒலிம்பிக் தொடரில் கலந்து கொள்கின்றன.

கடந்த வாரம் போட்டிகள் இடம்பெற இருக்கும் மைதானங்களை பார்வையிட்ட சர்வதேச ஒலிம்பிக் குழு பிரேஸில் இம்முறை சிறந்ததொரு ஒலிம்பிக்கை நடாத்தும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளுக்காக கடந்த 7 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த அனைத்துப் பணிகளும் தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. போட்டிகளில் பங்கேற்பதற்காக வருகை தரவுள்ள வீர, வீராங்கனைகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதோடு, போட்டிகள் இடம்பெறும் மைதானங்களைச் சூழ பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

போட்டிகளை கண்டுகளிப்பதற்காக 7.5மில்லியன் டிக்கெட்டுக்கள் விற்பனைக்காக அச்சடிக்கப்பட்டு அவற்றில் பெரும்பாலானவை விற்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற சமூகங்களுக்கிடையிலான நல்லுணர்வைக் கட்டியெழுப்பும் நோக்கில் புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு கடந்த 10.07.2016 அன்று ஒரு மாபெரும் விருந்தோம்பல் நிகழ்வொன்று கம்பளை இலங்க வத்தையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கம்பளை உட பலாத்த பிரதேச செயலாளர் அநுருத்த பியதாச அவர்களும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் கம்பளை கிளைத் தலைவர் அஷ்ஷெய்க் ரி.ஹய்தர் அலி அவர்களும் மற்றும் பிரதேசத்தின் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org